# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 58 தை 10 ஆம் நாள் வியாழக்கிழமை 24 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049



Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2019
25 26 27
ஜனவரி / January
10.00am - 8.00pm
MUNICIPAL GROUNDS - JAFFNA
இன்னும் நாள் மட்டுமே 1


## ஒட்டகப்புலத்தில் 25 ஏக்கர் நிலம் நேற்று விடுவிப்பு!

தெல்லிப்பழை, ஜன. 24
படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த பலாலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஒட்டகப்புலம் பகுதியில் 25.3 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியினுள் காணி உரி >> 25

## நாடாளுமன்றை மலினப்படுத்துகின்ற
# அரசமைப்பை கட்டாயம் எதிர்ப்பேன்
### மகிந்த நேற்றும் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஜன. 24
நாடாளுமன்றை மலினப்படுத்தி மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்கும் அரசமைப்பை நிச்சயம் எதிர்ப்பேன் என்று வலியுறுத்தினார் எதிர்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச.
அரசமைப்புத் தொடர்பில் நேற்று சிறப்பு அறிக்கையை மகிந்த வெளியிட்டார். அதிலேயே மேற்படி கருத்தை மீண்டும் அவர் முன்வைத்தார்.
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை கைவிடுவதற்கு நான் இணங்குகிறேன். ஆனால் நாடாளுமன்றை மலினப்படுத்தி >> 22

## ஐ.நா. சபை அமர்வில்
# இலங்கை மீதான அழுத்தத்தை பன்னாடுகள் தொடர வேண்டும்
### பிரிட்டனிடம் வலியுறுத்தியது கூட்டமைப்பு



கொழும்பு, ஜனவரி 24
இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. எனவே, அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை பன்னாட்டுச் சமூகம் உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பில் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு பன்னாட்டுச் சமூகம் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதேவேளை, இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் இரா. சம்பந்தன். >> 25



## நாயாறு நீராவியடி பகுதியில் புத்தர்சிலை நேற்றுத் திறப்பு!

முல்லைத்தீவு, ஜன. 24
நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. >> 25

## மன்னார் எலும்பு மாதிரிகள் கட்டுநாயக்கவில் கையளிப்பு

மன்னார், ஜன. 24
மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் மன்னார் நீதிமன்றத்தில் இருந்து நேற்றுக்காலை எடுத்துச் செல்லப்பட்டு கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கையளிக் >> 25

## புதிய அரசமைப்பை நிறைவேற்றினால் வடக்குக் கிழக்கில் குருதி ஆறு ஓடும்!
### விமல் வீரவன்ச கடுந் தொனியில் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 24
"புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் அது விடுதலைப்புலிகளின் தமிழீழக் கனவை நனவாக்கியமைக்குச் சமன். இந்த நிலை ஏற்பட்டால் வடக்கு, கிழக்கில் மீண்டும் குருதி ஆறு ஓடும். தமிழ் மக்கள் >> 25

## வடக்கின் நுகர்வோர் வர்த்தகக் கண்காட்சி நாளை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜன. 24
வடக்கின் மிகப்பெரிய நுகர்வோர் வர்த்தகக் கண்காட்சி 10ஆவது தடவையாக நாளை (25) ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
இலங்கை மாநாட்டு அலுவலகம் மற்றும் யாழ். மாநகர சபை பன்னாட்டு வர்த்தக மன்றம் ஆகிய வற்றின் ஆதரவுடன், யாழ்ப்பாணம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் இந்தக் கண்காட்சி நடை >> 24

அரசியல் கைதிகளின் கொலைகள்
## அரசில் இருக்கும்போது ஏன் மௌனம் காத்தீர்?
### டக்ளஸிடம் நீதியமைச்சர் கேள்வி

கொழும்பு, ஜன. 24
தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா 1994ஆம் ஆண்டு அரசிடம் ஏன் கேள்வி எழுப்பவில்லை என்று >> 22

## ஓமந்தைக்குட்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் தீவிர தேடுதல்

வவுனியா, ஜன. 24
புளியங்குளம் புதூர் பகுதியில் கடந்த மாதம் துப்பாக்கிகள் மீட்கப்பட்டிருந்த நிலையில், ஓமந்தை பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நபர்கள் சிலர் நடமாடுகின்றனர் என்று தெரிவித்து இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கடந்த மூன்று தினங்களாகத் தீவிர தேடுதலில் >> 25

## பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் நாடாளுமன்றில் இன்று விவாதம்

கொழும்பு, ஜன. 24
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கையின் அழுத்தங்கள் நாட்டில் அதிகரித்து வரு >> 22

## இரணைமடுக் குளத்தில் முன்னுரிமை அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உண்டு
### ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார் என்று விவசாயிகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

>> 25

## விக்னேஸ்வரன் எமக்கு ஒரு சவாலே அல்லர்!
### சுமந்திரன் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்து தேர்தலில் போட்டியிட்டால் >> 24




# புகழ் பெற்ற இந்து ஆலயங்களை புனித பிரதேசமாக்க நடவடிக்கை

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

**மன்னார், ஜன. 24**

**இலங்கை முழுவதும் உள்ள புகழ்பெற்ற மற்றும் வரலாற்றுப் பழமை வாய்ந்த இந்து ஆலயங்கள் சிலவற்றை புனித பிரதேசங்களாக மாற்றுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க உள்ளேன் என்று தெரிவித்தார் இந்து விவகார அமைச்சர் மனோ கணேசன்.**

மன்னார்திருக்கேதிஸ்வர ஆலயத்துக்குநேற்றுக் காலை பயணம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கேதிஸ்வர பகுதிக்குச் சொந்தமான ஆனாலும் இன்னும் வழங்கப்படாத காணிகள் அனைத்தையும் மக்களின் பாவனைக்கும் ஆலயத்தின் பாவனைக்கும் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளேன். புகழ்பெற்ற இந்து ஆலயங்களை புனிதப் பிரதேசமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளேன். குறித்த அமைச்சரவைப்பத்திரத்தினைச் சமர்பிக்கும் போது அனைத்து நாடாளுமன்றஉறுப்பினர்களும்அமைச்சர்களும் மக்கள் பிரதிநிதிகளும் ஒத்துழைப்பு வழங்க



வேண்டும் - எனத் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் தேசிய அரச கரும மொழி அமைச்சின் மேலதிக செயலர் எஸ். ரவீந்திரன், இந்துவிவகார அமைச்சின்பணிப்பாளர் உமா மகேஸ்வரன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(ம-56)

# தமிழர் பகுதிகளுக்கு சலுகைதரும் தரப்புடன்தான் கூட்டுச் சேருவோம்!

## இலங்கை தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் ஜீவகுமார் தெரிவிப்பு

வவுனியா, ஜன. 24

எந்தத் தரப்பு தமிழர் தாயகத்துக்கு அதிகளவானவாய்ப்புக்களையும், சலுகைகளையும் தருகின்றதோ அந்தத் தரப்புடனேயே நாம் கூட்டுச் சேர்வது தொடர்பில் சிந்திப்போம் என்றுதெரிவித்தார்இலங்கைதேசியமக்கள் முன்னணியின்பொதுச்செயலர்ஜீவகுமார். வவுனியா ஊடக மையத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் போட்டியிடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் சுயேட்சையாகப் போட்டியிடுவோம். ஆனால் எவருடனும் இணைந்து போட்டியிடமாட்டோம். சிலவேளைகளில் அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர், கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர்போன்றவர்களுடன்பேச்சுநடத்துவோம். ஏனென்றால் வடமாகாணத்தில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்கள் இருக்கின்றன. எனினும் அவற்றுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதற்கு காரணம் எமது தலைமைகளே.

அரசதலைவராகஇருந்தாலும்சரி, தலைமை அமைச்சராக இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி யார் எமது இளைஞர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புக்களை தருகிறார்களோ அதே போன்றுகல்விக்குயார்கூடுதலாகஊக்குவிப்புத் தருகின்றார்களோ, அவர்களுடனேயே நாம்கூட்டுச்சேருவோம்.

கிராம மட்டங்களில் இருந்து அதிகமான கோரிக்கைகள் எமக்கு வந்துள்ளன. எமது சேவைகளை பார்த்து மக்கள் எம்முடன் சேரும்போது நாங்கள் தேர்தல் தொடர்பாக யோசிப்போம். தேர்தல்கேட்பதுஎங்கள்நோக்கம் இல்லை. மற்றைய தலைமைகள் செய்யாத வேலைகளை நாங்கள் செய்து காட்டுவதே எமது நோக்கம். நானோ எனது உறுப்பினர்களோ தமிழ் தேசிய கூட்டமைக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் அவர்களால் விடப்பட்ட தறுகளையும் எம்மால் நிவர்த்தி செய்ய இயலும் - என்றார். (ம-110)

# அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவேண்டும் கூட்டமைப்பு!

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு

மன்னார், ஜன. 24

எமது பிரதேசம் அபிவிருத்தியில் வளர்ச்சி காணவேண்டுமானால் அரசியலிலும், அபிவிருத்தியிலும்சமச்சீராகப் பயணிக்க வேண்டும். இதைத்தான் நான் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்திருந்தேன். நீங்கள் அரசுடன் இணைந்து கொண்டு அமைச்சுப் பொறுப்புக்களை பெற்று எமது பகுதிகளைஅபிவிருத்திசெய்யுங்கள் என்றும் அவர்களிடம்நான் குறிப்பிட்டேன் என்று தெரிவித்தார் தேசிய ஒருமைப்பாடுஅரசகருமமொழிகள் சமூக மேம்பாடு இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன்.




அமைச்சர் மனோகணேசன் மன்னாருக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். மன்னார் நகரசபை மண்டபத்தில்நடைபெற்றநிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக மேம்பாடு என்ற ஒரு அமைச்சு என்னை வந்து சேர்ந்துள்ளது. எங்கெல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்களோ அவர்களை இனம்கண்டுஅவர்களைத் தூக்கிவிடும் திட்டம் இந்த சமூக மேம்பாடு அமைச்சுக்குள் ஒழிந்திருக்கின்றது. எல்லாமாவட்டங்களிலும் மாகாணங்களிலும் சமச்சீரானவளர்ச்சிகாணப்படவில்லை. பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, கலாசாரவளர்ச்சிஇவைகள் எல்லாம் சில மாவட்டங்களில் மேலோங்கி இருக்கின்றன. சில மாவட்டங்களில் வீழ்ச்சி கண்டுள்ளன. சில மாவட்டங்களில் வேலை வாய்ப்பு, பாடசாலைகள், வீதிகள் போன்றவை மிகவும் வளர்ச்சி கண்டுள்ளன. அது மட்டுமல்ல இங்கு எமது மாவட்டத்திலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்காமல் வேறு மாவட்டங்களிலுள்ளவர்களுக்கு இங்கு வேலை வாய்ப்புகளை வழங்குகின்றார்கள். நான் ஏற்கனவே தமிழ்த் தேசியகூட்டமைப்பினரிடம் தெரிவித்திருந்தேன்நீங்கள் அரசுடன் இணைந்து கொண்டுஅமைச்சுப்பொறுப்புக்களை பெற்று எமது பகுதிகளை அபிவிருத்திசெய்யுங்கள்என்று. அதாவதுஅரசியலும்அபிவிருத்தியும்சமாந்தரமாகபயணிக்கப்படவேண்டும். இவர்கள் அரசியல் காரணமாக அபிவிருத்தியை நோக்கி பயணிக்கவில்லை.

மனச்சாச்சிஎனக்குவழிகாட்டுகின்றது. அந்த அடிப்படையிலேசெயற்படுகின்றறேன். இந்த நாட்டிலே 58 நாள்களின் பின்னர் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசியல் விபத்தாக இருந்தாலும் கூட விபத்தினால் நல்ல காரியங்களும் இடம்பெற்றுள்ளன. 'நாரதர் கலகம் நல்லதில் முடியும்'என்பதுபோலஇந்த கலகம் செய்த நாரதர் சில நல்லவிடயங்களையும்வித்திட்டு ள்ளார். எவர் கவனமாக இல்லாது விட்டாலும் நான் கவனமாக இருக்கின்றேன்.

மன்னார் மாவட்டத்திலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழக்கூடிய மக்கள் எனதுகுருதியில்கலந்தவர்கள். அவர்கள் என் உடன் பிறப்புக்கள். எனது மக்கள் என்ற உணர்வு எனக்கு இருக்கின்றது. இந்த அரசியல் விபத்துஎனதுஅமைச்சிற்கும் நல்ல பக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலங்களைவிடஅதிகமான பொறுப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. உட்கட்டமைப்பு வசதிஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்து விவகார பொறுப்பும் எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொவேன் - என்றார்.

நிகழ்வில் மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்குவாழ்வாதாரஉதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் நிகழ்வில் கலந்து கொண்டார். அதனைத்தொடர்ந்து அமைச்சர் மடுதிருத்தலத்துக்கும்சென்று அங்கு வழிபாடுகளை மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்துமன்னாருக்குப் பயணம் மேற்கொண்டஅமைச்சர்மனோகணேசன், மன்னார்நகரமண்டபத்தில்இடம்பெற்றநிகழ்வுகளில் கலந்து கொண்டார். நிகழ்வில்மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான்மற்றும் முசலி ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 198 பயனாளிகளுக்குவாழ்வாதாரஉதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்தாஸ், பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-56,60)

# பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி மடுப் பிரதேச செயலக நுழைவாயிலை மூடி கவனவீர்ப்பு

மன்னார், ஜன. 24

மடு பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கிராமங்களில் உள்ள பல்வேறு குறைபாடு களை நிவர்த்தி செய்யுமாறுகோரி மடுப் பிரதேச கிராமிய அமைப்புக்கள் இணைந்து மடு பிரதேச செயலக நுழைவாயி லை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. அமைச்சர் மனோகணேசனுக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் அவை கையளித்தன.

மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 76 கிராமங்களைக்கொண்ட 25 கிராமமட்ட அமைப்புக்கள்குறித்தஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டன. மடு பிரதேசசெயலர் பிரிவில் உள்ள வீதிகள், உள்ளக வீதிகள் செப்பனிடப்படாமை, வீதி மின் விளக்குகள் பொருத்தாமை, குடிதண்ணீர் வசதிகள் இன்மை, உரிய போக்குவரத்து சேவைகள் இல்லாமை, மருத்துவசேவைகள் இல்லாமை, கசிப்பு உற்பத்தியை உடன் நிறுத்தநடவடிக்கைகளைமேற்கொள்ளாமை,





வளங்கல் சுரண்டப்படுதல் ஆகியவற்றுக்கு எதிராகநேரிய, சீரியநடவடிக்கைகளைஉரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மடு பிரதேச செயலர் ஜெயகரன் ஊடாக மன்னார் மாவட்டச் செயலருக்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. சர்வமதத் தலைவர்கள், மன்னார்கறிற்றாஸ்வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-56)

# தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத்தை ரூ.ஆயிரமாக உயர்த்தக் கோரி பல இடங்களிலும் நேற்று போராட்டம்

## கிளிநொச்சி டிப்போச் சந்தியில் நூற்றுக்கணக்கில் மக்கள் திரள்வு

கிளிநொச்சி.ஜன.24

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி, கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் நேற்றுக் காலை 10 மணிக்கு மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா கூலி கேட்டு, தொடர்ச்சியாகப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் கிளிநொச்சியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள் எது.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில்கலந்து கொண்டவர்கள்;

"உழைப்பாளிகளுக்கே இந்த உலகம் என்றால் உழைக்கும் தொழிலாளர்களுக்கு ஏனிந்த அவலம்?",1000 ரூபாய் கேட்பது குற்றமா?" "1000 ரூபா தொழிலாளர்களுக்கு வழங்குவது நட்டமா?", "மலைகளை விடவும் தொழிலாளர்களின் துயரம் பெரிது"

"மலைகளில் கொழுந்து பறித்து வாழ்வது கொடிதினும் கொடிது",

"தொழிலாளர் உழைப்புக்கே ஊதியம் கேட்கின்றனர் முதலாளிகளின் உழைப்பில் அல்ல", "நாட்டுக்காக உழைப்பவர்களின் வீட்டுத்துயரை போக்கிட உதவுங்கள்",

"கேட்பது ஆயிரம் ரூபா சம்பளத்தையே மலைகளையோ தோட்டங்களையோ அல்ல" ,"வழங்கிடுவோம் வழங்கிடுவோம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு வழங்கிடுவோம்","ஆயிரம் ரூபா பெறுவதற்கு உதவிடுவோம்"

"மழை பனி வெயில் குளிரில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு நீதியான கூலியை கொடுங்கள்"

"உழைப்புக்கு நியாயமான ஊதியத்தைக் கொடு உழைப்பாளிகளின் உரிமையை மதித்திடு",

"நல்லாட்சி அரசு என்ற முக மூடிக்குள் ஒழியாதே நம்மவர்களுக்கான நீதியை வழங்கப் பின்னிற்காதே... போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இதன் போது அங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார்.



வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளுக்காக போராடிய போது மலையக மக்கள் அந்தப் போராட்டத்திற்கு தங்களின் தார்மீக ஆதரவை வழங்கியிருந்தார்கள். அதற்காக உயிர்த்தியாகங்கள் கூட செய்திருந்தார்கள். அதுமாத்திரமன்றி அவ்வப்போது எங்களின் துயரங்களிலும் பங்குகொண்டனர். அந்த மக்களோடு உறுதுணையாக நிற்போம் - என்றார். (க-214)

## ஹற்றன், பொகவந்தலாவயில் தொழிலாளர்கள் போராட்டம்

மட்டக்களப்பு.ஜன.24

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்குமாறு வலியுறுத்தி ஹற்றன், பொகவந்தலாவ உட்பட நாடுமுழுவதும் நேற்றுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

ஹற்றன் நகரில் '1000 ரூபா' இயக்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் நடத்தப்பட்டது.

தொழிலாளர்கள் தினமும் உழைக்கும் உழைப்புக்கு அடிப்படை ஊதியமாக ஆயிரம் ரூபா வழங்கு என்று முதலாளிமார் சம்மேளனத்துக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. ஹற்றன் பேருந்து தரிப்பு நிலையத்துக்கு அருகில் நடத்தப்பட்ட போராட்டத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட மக்கள் பதாதைகளையும், கறுப்புக் கொடிகளையும் ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

"முதலாளிமார் சம்மேளனமே தோட்டத் தொழிலாளர்களிடம் வேலையை மட்டும் வாங்காதே, தோட்டத் தொழிலாளர்களையும் கண் விழித்துப்பார். தோட்ட மக்களைக் காலால் மிதிக்காதே? உடனடியானத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்கு" என்று பல்வேறு கோஷங்ளை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**பொகவந்தலாவ**

பொகவந்தலாவ கெம்பியன் தோட்டத்திலும் அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர். நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாகத் திகழும் பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழிலாளர்களுக்கு ஏன் ஆயிரம் ரூபாவை வழங்க முடியாது? என்று தோட்ட தொழிலாளர்கள் முதலாளிமார் சம்மேளனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். பொகவந்தலாவ நகரம் வரை ஊர்வலமாகச் சென்றனர். ஹற்றன் - பொகவந்தலாவ முதன்மை வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த வழி ஊடான போக்குவரத்து சுமார் 2 மணித்தியாலயங்கள் தடைப்பட்டது. (கு)



பொகவந்தலாவ



ஹற்றன்

## சம்பள உயர்வுக்கு ஆதரவாக வவுனியாவில் போராட்டம்

வவுனியா,ஜன.24

தோட்ட தொழிலாளருக்கு 1000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கபட வேண்டும் என்பதை வலியுறுத்தி, நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு ஆதரவாக வவுனியாவிலும் போராட்டம் இடம்பெற்றுள்ளது.





தோட்ட தொழிலாளருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கபடவேண்டும் என்பதை வலியுறுத்தி சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பு,மற்றும் ஆயிரம் ரூபா இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் வவுனியா பழையபேருந்து நிலையத்துக்கு அருகாமையில் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பல ஆண்டுகளாக சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து, தோட்டத் தொழிளாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தபோதும், அதில் சொற்ப அளவு உயர்வுதான் கிடைத்தது. கூட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களின் கையாலாகாத்தனமும், தொழிற்சங்கநாடாளுமன்ற அரசியல்வாதிகளின் சோரம்போகும் நிலையும், அவர்களின் சம்பள உயுர்விற்கு குந்தகம் விளைவித்துள்ளன.

தொழிற்சங்க செயற்பாடுகளுக்கு அப்பால் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து 1000 ரூபா சம்பள உயர்வுக்காக பலவகையான போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். இதற்கு ஆதரவாக மலையகத்திலும், கொழும்பிலும் பல்வேறு பொது அமைப்புக்களும் முற்போக்கு அரசியல் கட்சிகளும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். எனினும் தோட்டக்கம்பனிகள் 650 ரூபாவுக்கு மேல் வழங்கமுடியாதுஎன தெரிவிக்கின்றன. தொழிலாளர்களின் நலனுக்காக குரல்கொடுக்க வேண்டிய பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர், கம்பனிமுதலாளிகளின் சார்பாகநின்று முதலாளிகள் கூறும் சம்மபளம் நியாயமானது எனத்தெரிவித்துள்ளார். தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன எனத் தெரிவிக்கும் கம்பனி நிர்வாகம் ,நிர்வாகிகளுக்கு இலட்சகணக்கில் சம்பளத்தை வழங்குகின்றன.

நாளாந்தம் அதிகரித்துவரும் வாழ்கைச்செலவு, பொருள்களின் விலையேற்றம் என்பவற்றை கருத்தில் கொள்ளும்போது, தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது. எனவே அவர்களுக்கான சம்பள அதிகரிப்பு மிகவிரைவாக வழங்கபடவேண்டும் என்று தெரிவித்தனர்.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்தொழிலாளர்உழைப்பை சுரண்டாதே,சம்பள உயர்வு குறையுது,பதவியும் சொகுசும் உங்களுக்கு, பணியில்லா பட்டினியும் எங்களுக்கா? போன்ற கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (க-110)



## ஆயிரம் ரூபா வழங்குமாறு யாழ்ப்பாணத்திலும் போராட்டம்

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாண முதன்மைப் பேருந்து நிலையம் முன்பாகவும் நேற்றுக் கவனவீர்ப்பு இடம்பெற்றது. '1000 இயக்கம்' என்ற கூட்டு அமைப்பால் நேற்றுப் பிற்பகல் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. "கம்பெனிகளே தொழிலாளர் உழைப்பைச் சுரண்டாதே, நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக மாற்று" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைக் கையில் ஏந்தியவாறும், பல்வேறு கோசங்களை எழுப்பியவாறும் அவர்கள்,போராட்டத்தில் ஈடுபட்டனர். மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய துண்டறிக்கைகளையும் அவர்கள் விநியோகித்தனர். (து7)

வேலை வாய்ப்பு
கிளிநொச்சியில்
இயங்கும் முன்னணி
சேவை நிறுவனம் ஒன்றிற்கு
கிளை உதவியாளர்
(ஆண்/ பெண்) தேவை
தகைமைகள்: A/L சித்தி
கிளிநொச்சி நகர எல்லைக்குள்
இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
076 690 8963/ 077 069 6816



## கற்றல் வளநிலையம் திறப்பு

பருத்தித்துறை, ஜன.24
யாழ்ப்பாணம்தும்பளைசிவப்பிரகாசம்மகாவித்தியாலயத்தின்ஆரம்பப்பிரிவுமாணவர்களுக்கானகற்றல் வளநிலையம்கடந்தசனிக்கிழமைஅதிபர்க.சிவதாஸ் தலைமையில்திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர்விவகார அமைச்சின்செயலர்எஸ். சத்தியசீலன், மதிப்புறு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் யோ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-422)

# அரியாலையில் வீதி சீரின்மையால் அவலப்படுகிறது ஒரு பாடசாலை!

யாழ்ப்பாணம், ஜன.24
அரியாலைகிழக்குப்பகுதிக்குச்செல்கின்றமுதன்மைவீதி அழிவடைந்துள்ளதால் அங்குள்ள அரசினர்தமிழ்க் கலவன் பாடசாலை மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரன் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
போர்க் காலத்துக்கு முன்னர் அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள்கல்விகற்றனர். தரம் 5வரை இருந்த பாடசாலை தரம் 8வரையாக உயர்த்தப்பட்டது. தற்போது 10மாணவர்களேஉள்ளனர். இதற்கு முதன்மைக் காரணம் அரியாலை கிழக்கு நோக்கிச்செல்லும்முதன்மை வீதி பூம்புகார் வரை செப்பனிடப்பட்டபோதும்அதில்இருந்து அரியாலை கிழக்கு வரை செல்லும்வீதிமிகமோசமாகக் குன்றும், குழியுமாக மாறியுள்ளமையே. அந்த வீதி ஈருருளிகூட பயணம் செய்யமுடியாத அளவுக்கு அழிவடைந்துள்ளது. அரியாலை கிழக்கு கிராமத்தில்உள்ளசிறுவீதிகள் நல்லூர் பிரதேச சபையால் செப்பனிடப்பட்டுள்ளன.
முதன்மைவீதியைச்செப்பனிடும்பொறுப்புவீதிஅபிவிருத்தி அதிகாரசபைக்குரியது. நீண்டகாலமாக அங்குள்ள மக்கள் கோரிக்கை முன்வைத்தும் கவனிப்பாரற்ற வீதியாக அரியாலை கிழக்கு வீதி உள்ளமை உயரிய மட்டங்களுக்குத் தெரியாத விடயமாக இருக்குமோ என்ற ஐயப்பாடும் எழுந்துள்ளது.
அதுமட்டுமன்றி நீண்டகாலமாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகப்பேசப்படுகின்றது. அந்த நிதிக்கு ஏதாவது நடந்துவிட்டதோ எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
இந்தப் பகுதியில் பெருமளவான நெல்வயல்கள் உள்ளன. கடற்றொழில் மூலமாகப் பயன்பெறுவோர் சென்றுவரும்பகுதியாகவும்இதுஉள்ளதால் இந்த வீதி உடனடியாகச் செப்பனிடப்படவேண்டும்.
அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்ற ஏராளமான மாணவர்கள் பாடசாலை விடுகைப் பத்திரங்களைப்பெற்றுநகர்ப்புறப் பாடசாலைகளைநோக்கிக் குடும்பத்தோடு நகர்ந்து வருகின்றனர். எனவேஉரியவர்கள் இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது. (து-8)

# எம்.ஜி.இராமசந்திரனின் 102ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்கள்





யாழ்ப்பாணம், ஜன.24
தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமசந்திரனின்102ஆவதுபிறந்தநாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டன.
எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ்.எம்.ஜி.ஆர் கோப்பாய்சுந்தரலிங்கத்தின்ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கல்வியங்காடுப் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாக பிறந்த நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள்உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம், சமூக சேவையாளர் மா.கருணாமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் எம்.ஜி.ஆர்வறியமக்கள், மாற்றுதிறனாளிகள், பெண்தலைமைத்துவகுடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆடைகள் மற்றும் பணம் ஆகியவற்றை வழங்கிவைத்தார்.
வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி எம்.ஜி.ஆர்.நற்பணிமன்றத்தின்ஏற்பாட்டில் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் வெகு சிறப்பாக இடம்பெற்றன.
நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள்உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். உதவிகள்தேவைப்படும் மாணவர்கள் சிலருக்கு நற்பணி மன்றத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இதேவேளை, அன்றையதினம்மாலை 5 மணியளவில் குருநகர் எம்.ஜி.ஆர் மன்றத்தின் ஏற்பாட்டில் குருநகர் சந்தியில்அமைந்துள்ளஎம்.ஜி.ஆர்திருவுருவச் சிலையருகே பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர்இ.ஆனோல்ட்கலந்துகொண்டுஉரையாற்றுகையில், முதல்வர்'எம்.ஜி.ஆரின் மக்கள் சேவை, சினிமாத்துறை மற்றும் அரசியலில் அவரது அயராத உழைப்பு, மக்கள் சேவையில் அவரது தியாகம், நடிப்பு, தத்துவப் பாடல்கள் மூலமாக மனித வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைக் கூறிச்சென்றுள்ளார் என்றார்.
பாசையூர் எம்.ஜி. ஆர் மன்றத்தின் ஏற்பாட்டில்பாசையூர்கடற்கரைமுன்றலில் அமைந் துள்ள எம்.ஜி.ஆர் திருவுருவச் சிலையருகேமாலை5.30மணியளில் நிகழ்வுகள்இடம்பெற்றன.எம்.ஜி.ஆர்திருவுருவச்சிலைக்குமுன்னாள்கேக்வெட்டி பிறந்தநாளைக் கொண் டாடினர்.





நிகழ்வில் முதன்மை விருந்தினராகயாழ்ப்பாண இந்தியக்கொன்சியூலர் எஸ். பாலச்சந்திரன், சிறப்பு விருந்தின ராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது 110 பயனாளிகளுக்குஉலர்உணவுப் பொருள்களும், 70 பயனாளிகளுக்கான உடு புடவைக ளும் வழங்கிவைக்கப்பட்டன.
அத்துடன் மாநகர முதல்வர் இ. ஆனோல்ட்டின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 17 ஈருருளிகளும் பயனாளிகளுக்குவழங்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பாசையூர்எம்.ஜி.ஆர் மன்றத்தின் உறுப்பினர்கள், உதவித்திட்டப்பயனாளிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-21, 23. 26, 105. 106)



## புதுப் படகில் தொழிலை ஆரம்பித்த மீனவர்கள்

தெல்லிப்பழை, ஜன.24
கடற்றொழில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மீன்பிடிப் படகுகள் கடந்த திங்கட்கிழமை தைப்பூச தினத்தன்றுகடலுக்குள்இறக்கப்பட்டுதொழிலுக்குக் கொண்டுசெல்லப்பட்டன.
தெல்லிப்பழைபிரதேசசெயலகபிரிவுக்குட்பட்டமயிலிட்டி வடக்கு பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 13 கடற்றொழிலாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடி படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
ஐக்கியநாடுகள்அபிவிருத்திதிட்டநிறுவனத்தினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ-9)



## பரிசோதனை அணிவகுப்பு

தெல்லிப்பழை, ஜன.23
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை அணிவகுப்பு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமணசேகரதலைமையில்இடம்பெற்றநிகழ்வில்அணிவகுப்பு மரியாதையை காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய ஏற்றுக்கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டார். (ஜ-26)

# படைப்புழுக்கள் தொடர்பான விழிப்புணர்வு நடை இன்று

**யாழ்ப்பாணம், ஜன. 24**

**படைப்புழு தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி இன்று வியாழக்கிழமை நடைபெறும் என்று மாகாண விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

தற்போதுசோளம்உள்ளிட்டபல்வேறு பயிர்வகைகளில்படைப்புழுவின்தாக்கம் அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் இது இனம் காணப்படவில்லை. தற்போது இதன் தாக்கம் அதிகரித்து வருகிறது. இது தொடர்பில் விழிப்பூட்டும் நடைபவனி இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு முன்பாக ஆரம்பித்து மருதனார் மடம் சந்தியில் நிறைவடையும். இதில் யாழ்ப்பாண மாவட்ட விவசாயம் சார்ந்த திணைக்களங்கள், மாகாண விவசாய அமைச்சு, மாகாண விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். நடை பவனியின் நிறைவில் படைப்புழு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை நிகழ்வும் முன்னெடுக்கப் படவுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டது. (த-7)

## குடிதண்ணீர் கிணறுகளின் பாதுகாப்பு குறித்து ஆய்வு

*வேலணை தவிசாளர் தலைமையில் நடந்தது*

வேலணை,ஜன.24

யாழ்ப்பாணம் வேலணை சாட்டி பிரதேச குடி தண்ணீர்க் கிணறுகளின் பாதுகாப்பு தொடர்பில் வேலணை பிரதேசசபையின்தவிசாளர்தலைமையிலான சிறப்புக் குழுவினர் அண்மையில்நேரில்சென்றுபார்வையிட்டனர். இனந்தெரியாத விஷமிகளால் வேலணை பிரதேச சபைக்குட்பட்ட சாட்டி குடிதண்ணீர்க் கிணறினுள் ஒயில் ஊற்றப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த 6 ஆம்திகதி இடம்பெற்றது.

இதனால் வேலணை பிரதேசத்தில் குடிதண்ணீரை விநியோகிப்பதில் சில இடையூறுகள் ஏற்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த கிணறுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்முகமாகவும்வேலணைபிரதேச சபையின் தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி, சபையின் செயலர் மற்றும் பிரதேசசபைஉறுப்பினர்கள்உள்ளிட்டவர்கள்சென்றுநிலைமைகள்தொடர்பில்ஆராய்ந்தனர். (ஐ)

## மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி ஜன. 24

கொடிகாமம்திருநாவுக்கரசுமத்திய கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமைபி.ப.1.30மணிக்குகல்லூரி மைதானத்தில் நடைபெறும். அதிபர்க.மங்களேஸ்வரன்தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக தென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் அலகின் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரன்ஆகியோரும்சிறப்புவிருந்தினராகக் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் தலைவர் ம.சிறிதாசனும் கலந்துகொள்வர். (உ-9)

## விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி ஜன. 24

வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் தென்மராட்சி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன. கேரதீவு சங்குப்பிட்டி பாலம் அருகில் உந்துருளியிலிருந்து தவறி வீழ்ந்ததில் நீர்வேலி தெற்கைச் சேர்ந்த இரவீந்திரன் பிரசாத் (வயது 32) என்பவரும், கைதடிஎரிபொருள்நிலையத்துக்கு முன்பாக வாகனத்தினால் மோதுண்டதாகக் கூறி பரந்தன் புளியம்பொக்கணையைச்சேர்ந்த சிவம் சிவமதன் (வயது 24) என்பவரும் படுகாயமடைந்தனர். இதே வேளைமரத்திலிருந்துதவறிவீழ்ந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

## குடமுழுக்கு

அளவெட்டி,ஜன.24

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் கல்வளை அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ரீஞானவைரவர் ஆலயத்தின் குடமுழுக்கு இன்று வியாழக்கிழமை காலை 8.24 மணி தொடக்கம் 9.27 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம் பெறும். காலை 6 மணிக்கு விநாயகர் பூசையுடன்ஆரம்பமாகிபாலஸ்தானம் இடம்பெறும்என்று ஆலயபரிபாலனசபையினர்தெரிவித்தனர். (ஐ-63)

## செயற்பட்டு மகிழ்வோம்

அளவெட்டி தெற்கு. அ.மி.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று பி.ப.1.45 மணிக்குப்பாடசாலைமைதானத்தில்அதிபர்எம்.சி.சுதாகரன் தலைமையில் நடைபெறும்.தலைமைவிருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன்கலந்துகொள்வார். (உ)

❖ ❖ ❖

தென்மராட்சி, ஜன. 24

கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலை மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம்விளையாட்டுவிழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலைமைதானத்தில் நடைபெறும். அதிபர் யே.தர்மதுரைதலைமையில்நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்)த.கிருபாகரன், சிறப்புவிருந்தினர்களாககிளிநொச்சிமாவட்டச் செயலக மறுவாழ்வு அலுவலர்மு.கயோதரன்,நவபுரம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்மகாராசா ஆகியோர் கலந்து கொள்வர். (த-9)

❖ ❖ ❖

கொடிகாமம், ஜன. 24

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின்வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுவிழாஇன்று வியாழக்கிழமைபிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில்பாடசாலை முதல்வர் க. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது இந்த நிகழ்வில்தலைமைவிருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும்சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரிபிரதேசசபை உறுப்பினர் ஆ.சாந்தகுமார் மற்றும் ஓய்வு நிலை ஆசிரியரும் பழைய மாணவியுமான செல்வி ந.மனோன்மணியும்மதிப்புறுவிருந்தினர்களாக பழைய மாணவிகளான செல்வீ சி.லக்சிகா மற்றும் ய.தமிழரசி ஆகியோரும்கலந்துகொள்ளவுள்ளனர். (உ-159)

❖ ❖ ❖

கொடிகாமம், ஜன 24

யாழ்ப்பாணம் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் வை.விஜயகுமாரன்தலைமையில் நடைபெறும். நிகழ்வில்முதன்மைவிருந்தினராக பாடசாலையின் பழையமாணவரும்ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளருமான க. அம்பலவாணர், சிறப்புவிருந்தினராக ஓய்வு பெற்றதபாலதிபர்ச.அருணாசலம், ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-159)

# வருத்தப்படாத வாலிபர் சங்க பொங்கல் விழா களைகட்டியது

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டுதோறும் கொண்டாடபட்டுவரும் பொங்கல் திருநாள் இம்முறையும் மிகக் கோலாகலமாக 3 நாள்கள் இடம் பெற்றன.

வடக்கு மாகாண ரீதியான மாபெரும் ஈருருளி ஓட்டப் போட்டி கடந்தசனிக்கிழமையும், மரதன்ஓட்டப்போட்டிகடந்தஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாவாட்ட ரீதியில் 16 அணிகள் மோதிய தாச்சி சுற்றுப்போட்டிகள்கடந்தசனிமற்றும்ஞாயிற்றுக்கிழமைகள் இடம்பெற்றன.

பொங்கல்தினமான கடந்த 15 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் காங்கேசன்துறை வெளிச்ச வீட்டருகே பட்டம் ஏற்றல் போட்டிகளும், மாலை 2 மணியளவில் கரகாட்டம், பொம்மலாட்டங்களோடு, விருந்தினர் வரவேற்பு, சறுக்குமரம், கயிறுழுத்தல், தலைகணைச்சண்டை, கிடுகுபின்னல் முதலிய சிறார்களின் போட்டிகளும், கலை கராசாரா நிகழ்வுகளும் கோலாகலமாக வாலிபத்திடலில் நடைபெற்றன.

நிகழ்வில்முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டார்.

கல்விமேம்பாடு, கிராமஅபிவிருத்தி, சிரமதானங்கள் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல் உட்பட பல்வேறு மக்கள் நலன்சார் சேவைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் முன்மாதிரியான செயற்பாடுகள் தொடர்பில் பாராட்டப்படவேண்டும். (ஐ-21)
















## நூல் வெளியீடும் அறிமுக நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஜன.24

புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளரும் மருத்துவருமான நடேசனின் 'எக்ஸைல்' (ஈழப்போராட்ட கால அனுபவங்களின் தொகுப்பு) வெளியீடும் 'கானல் தேசம்' (நாவல்) அறிமுகநிகழ்வும்நாளை யாழ்ப்பாண நகரில் உள்ள றிம்மர் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர். மகேந்திரன்திருவரங்கன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விமர்சன உரைகளை ஊடகவியலாளர் பூபாலரட்ணம்சீவகன், கிரிஷாந், யதார்த்தன் மற்றும் எழுத்தாளரும் திரைப்பட இயக்குநருமான ஹஸீன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

## பொதுக்கூட்டம்

கொடிகாமம், ஜன. 24

யாழ்ப்பாணம் நாவற்குழி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்பாடசாலையின்முதன்மைமண்டபத்தில்எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குஅதிபர்சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில்அனைத்துபழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-159)

## கலைஞர்களுக்கு பரிசுப் பொருள்கள்

சாவகச்சேரி, ஜன.24
மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச செயலக ரீதியில் தெரிவு செய்யப்பட்டு சுவதம் சான்றிதழ் பெற்ற மூத்த கலைஞர்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
பிரதேச செயலகங்களால் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் குடியிருப்புகளுக்கு கடந்தமாதம் கலாசார அலுவலர்கள் சென்று சான்றிதழினை வழங்கியதுடன் அவர்களின் தேவைகளை அறிந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தனர்.
தெரிவுசெய்யப்பட்ட மூத்த கலைஞர்களுக்குதலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள்' வழங்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து பிரதேச செயலகங்களால் தெரிவு செய்யப்பட்டகலைஞர்களின்தேவைக்கேற்பபொருள்களை கொள்வனவு செய்து வழங்கி வருகின்றனர். (ஐ-9)



## கருங்கற்திருப்பணி அபிசேகம்

மருதங்கேணி, ஜன.24
பொலிகண்டிகந்தவனம்திருவருள்மிகுகல்யாணவேலவ சுவாமி ஆலயத்தில் கருங்கற் திருப்பணி அபிசேகம் கடந்த திங்கட்கிழமை காலை பிரதம குரு சிவ பிரமசிறி வைத்திய நாதக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்தியா திருவாவடுதுறை ஆதீனம் குரு திருச் சிற்றம்பலம் தம்பிரான் சுவாமிகள் திருமுன்னிலையில் இடம்பெற்றது. (ஐ-160)



## 250 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

*யாழ். தரைப் படையினர் வழங்கினர்*

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்ப்பாணம் காக்கைதீவு மற்றும் தொல்புரம் சனசமூக நிலையங்களில் பாடசாலை மாணவர்கள் 250 பேருக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.
யாழ்ப்பாணம்பாதுகாப்புபடைக்கட்டளைத்தளபதிமேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் எண்ணக்கருவுக்கமைய, யாழ்ப்பாணம் பாதுகாப்பு படை 2 ஆம் நிலைத் தலைமை அதிகாரி தலைமையில் இவை வழங்கப்பட்டன என்று தரைப்படைத் தகவல் பணியகம் தெரிவித்தது.
யாழ்ப்பாணம் தொல்புரம் ஏ.எம்.ரி.எம் வித்தியாலயம், யாழ்ப்பாணம்தொல்புரம்விக்னேஸ்வராவித்தியாலயம், யாழ்ப்பாணம் சுழிபுரம் வித்தியாலயம், யாழ்ப்பாணம் மூளாய்சைவப்பிரகாசாவித்தியாலயம்ஆகியபாடசாலைகளைச்சேர்ந்தமாணவர்களுக்கேஇந்தஉதவிகள்வழங்கப்பட்டனஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (ஐ)

கெற்பேலியில் பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவத்தில்

# 3 சந்தேக நபர்களும் மறியலில் அடைப்பு

*சாவகச்சேரி, ஜன. 24*
*மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களைப் பிடிக்கச் சென்ற பொலிஸ் பரிசோதகர் மீது உழவு இயந்திரத்தை மோதியும் மற்றைய இரு பொலிஸாரைத்தாக்கியும்காயப்படுத்தினார்கள்என்கிறகுற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்றம். அவர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த ஏற்பாடு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.*

இந்தச்சம்பவத்தில்தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். மூன்றாவது சந்தேகநபரும் கைது செய்யப்பட்டு மன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தப்பட்டார்.
தென்மராட்சி, கெற்பேலிப் பகுதியில்கள்ள மணல் ஏற்றப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து உபபரிசோதகர் தலைமையிலான நான்கு பொலிஸார் இரண்டு உந்துருளிகளில் சென்றுள்ளனர்.
வழியில்மணலுடன்உழவு இயந்திரம் வருவதை அவதானித்த உப பரிசோதகர் வீதியின் குறுக்கே நின்று மறித்துள்ளார்.
நிற்காமல் வந்த அந்த வாகனம்உபபரிசோதகரைமோதியது. வாகனச் சாரதி இறங்கித் தப்பி ஓடிவிட்டார்.
காயமடைந்த உப பரிசோதகரை அது உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு மற்றொரு பொலிஸ் காவலர் வாகனத்தை பொலிஸ் நிலையம் நோக்கி செலுத்தியுள்ளார். அப்போதுதிடீரென அங்கு வந்த வேறு சிலர் பொலிஸாரைத்தாக்கிவிட்டு கள்ள மணலுடன் உழவு இயந்திரத்தையும் எடுத்துக்கொண்டு தப்பிவிட்டனர். காயமடைந்து கிடந்த உபபரிசோதகரையும் வாகனத்தில் இருந்து இறக்கி கீழேபோட்டுவிட்டுஓடிவிட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
காயமடைந்த பொலிஸார் மூவரும்சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
சம்பவத்துடன்தொடர்புபட்ட மூன்று பேர் நாட்டை விட்டு வெளியேறாமல் தடுக்குமாறு கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் நீதிமன்றில்அறிக்கைதாக்கல்செய்திருந்தனர். அதற்கு நீதிவான் அனுமதியளித்தார்.
அன்றைய தினம் கெற்பேலிப் பகுதியில் குறித்த நபர்கள் நடமாடுவதாக அறிந்த பொலிஸார் அங்கு சென்று மூவரைசந்தேகத்தின்பேரில் கைதுசெய்துநீதிவான்முன்னிலை முற்படுத்தினர்.
வழக்கினை விசாரித்த நீதிவான் மூவரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறுஉத்தரவிட்டார். (ஐ-9)

## சாவ. இந்துவுக்கு நூல்கள் அன்பளிப்பு

கொடிகாமம், ஜன. 24
யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு ஒருதொகுதி புத்தகங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.
உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அனுசரனையில் சாவகச்சேரி நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகளுக்கானஇளைஞர் சபை சார்பில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான செய்முறை புத்தகங்கள் விஞ்ஞான பிரிவு பொறுப்பாசிரியரிடம்கையளிக்கப்பட்டன. நிகழ்வில் இளைஞர் சபையின் தலைவரும் உலகத் தமிழ் மாணவர்ஒன்றியத்தின்தென்மராட்சி இணைப்பாளருமான நக்கீரன் , அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்துளசிதரன், நிதிஒருங்கிணைப்பாளர் ஜெனார்த்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர்
கடந்த 2017 ஆண்டு இறுதியின் போதும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் இந்த இளைஞர் சபையால் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-159)



யாழ்.போதனா மருத்துவமனையிலிருந்து

## வறியவர்களின் சடலங்களை எடுத்துச் செல்ல வாகனம்!

*புலம்பெயர் உதவியில் கிடைத்தது*

யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுஉயிரிழக்கும்பாமரமக்களின்உடலைஎரிபொருள் செலவுடன் மட்டும் அவர்களது இடங்களுக்குச் சென்றுவிநியோகிக்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.
அதற்கென்று முதற்கட்டமாக வாகனம் ஒன்று புலம்பெயர்ந்தவர்களின் நிதிப் பங்களிப்பில் மருத்துவமனைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
வடக்குமாகாணத்தில்ஒரேயொருபோதனாமருத்துவமனை என்பதன் அடிப்படையில் ஏனைய மாவட்ட மருத்துவமனைகளில் இருந்தும் மாவட்டத்தின் ஏனையமருத்துவமனைகளிலிருந்தும்மேலதிகசிகிச்சைக்காகயாழ்ப்பாணப்போதனாமருத்துவமனைக்கு நோயாளர்கள் அனுப்பி வைக்கப்படுவர். அவர்களில் சிலர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழக்கின்றனர்.
அவ்வாறு உயிரிழப்பவர்களில் ஏனைய மாவட்டத்தவர்கள், குடாநாட்டின் பின் தங்கிய பகுதிகளைச் சேர்ந்தவர்களின் உடல்களைக் கொண்டு செல்வதற்கு அவர்களதுஉறவுகள்அதிகபணம்செலவிடுகின்றனர்.
எனவே வடக்கு மாகாணத்துக்குஉட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழ்பவர்களுக்கு மட்டும் எரிபொருள் செலவை மாத்திரம் பெற்றுக்கொண்டு உடலை அவர்களது வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பைத் தற்போதுஏற்படுத்தியுள்ளோம். புலம்பெயர்ந்துகனடாவில் வாழும் உறவுகள் இதற்கு நிதி வழங்கியுள்ளனர்.
அந்த நிதியிலிருந்து வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. உடனடியாகவே இந்தப்பணியை ஆரம்பிக்க முடியும். இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி உ.மயூரதன் பெரும் பங்காற்றியிருந்தார். குறித்த சேவைக்கு அவரே பொறுப்பாக இருப்பார். வசதியற்றவர்கள் தமது உறவுகள் இறந்தால் எரிபொருள் செலவுடன் வாகனத்தைப் பெற்று சடலத்தை எடுத்துச்செல்லமுடியும். குறித்த வாகன சேவையைப் பெற விரும்புபவர்கள், வறியநிலையிலுள்ளவர்கள் என்னிடமோ அல்லது சட்ட மருத்துவ அதிகாரியை நாட முடியும் - என்றார். (த-105)

## கலண்டர்கள் விநியோகம்

வரணி, ஜன.24
கொடிகாமம் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டுக்கான கலண்டர்களை இலவசமாக தனது பிரதேச கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது.
குறிப்பிட்ட கிளைகளின் முகாமையாளர் ஊடாக இந்தக் கலண்டர்கள் அண்மையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. தென்மராட்சி பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுசங்கங்களின் கொத்தணி நிர்வாகமும் தனதுஉறுப்பினர்களுக்கு கலண்டர்களை இலவசமாகவழங்கியது. (ஐ-122)

## மெய்வன்மை போட்டிகள்

சாவகச்சேரி, ஜன. 24
யாழ்ப்பாணம் தென்மராட்சிகச்சாய்அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை வித்தியாலய மைதானத்தில்மதியம்1மணிக்குஅதிபர்கா.குணசிங்கம்தலைமையில்நடைபெறும்.
பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றத்தின் சுகாதார போசாக்கு மற்றும்விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் "இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் சமாதானமும்" என்ற தொனிப்பொருளில்மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தர சிவம், சிறப்பு விருந்தினராக மேல் மாகாண ஜெயவர்த்தனபுர கல்வி வலயத்தைச் சேர்ந்த முனிதாச குமாரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## உந்துருளிவிபத்தில் மூவர் படுகாயம்

சாவகச்சேரி, ஜன. 24
வேகக் கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி வீதியோரம் நின்ற மரத்துடன் மோதிவிபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மூவர் படுகாயமடைந்தனர். சிகிச்சைக்காக மூவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச்சம்பவம்தென்மராட்சி மந்துவல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது. இதில்மந்துவில்மேற்கைச் சேர்ந்த இராசரத்தினம் ரம்ஜன் (வயது 20), சாவகச்சேரி கச்சாய்வீதியைச் சேர்ந்த சந்திரசேகரம் சாம்சன் (வயது 19), மந்துவில் மேற்கைச் சேர்ந்த மகேந்திரன் கடோற்கஜன் (வயது 27) ஆகியோரே படுகாயமடைந்தனர். (ஐ-9)

# உயிர்காக்கும் மருந்து வகைகளுக்கு கிளி.மருத்துவமனையில் தட்டுப்பாடு

**கிளிநொச்சி, ஜன 24**

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் தொடர்சியாக உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாக கூறப்படுகிறது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச மருத்துவமனைகளில் டிசம்பர் மாதம் தொடக்கம் இவ்வாறு உயிர்காக்கும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு காணப்படுவதாகவும், இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், பலமுறை இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு மருத்துவனை நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியும் இதுவரை அவை கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதற்கான ஏற்பாடுகளை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செயற்ப்படுத்த வேண்டும். அவ சர தேவைகள் ஏற்படும்போது மருந்துகள் இல்லாத காரணத்தால் உயிர்கள் பறிபோகின்ற நிலைகூட வரலாம்.

கிளிநொச்சி மாவட்டம் மட்டும் அல்லாது நாடு ரீதியாகவும் சில மாவட்டங்களில் பல்வேறு வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்தினரிடம் கேட்டபோது, உயிர்காக்கும் மருந்துகளுக்கு பதிலாக வேறு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. உரியவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். வருகின்ற மாதமளவில் அவை எமக்கு போதுமான அளவு கிடைக்கும் என நம்புவதாக தெரிவித்தனர். (க-6)



## நோயால் பாதிக்கப்பட்டவருக்கு பண உதவி வழங்கல்

கிளிநொச்சி.ஜன.24

பொன்னகர் வடக்கு கிளிநொச்சிப் பகுதியில் புற்றுநோயால் பாதிப்புற்றிருக்கும் மூன்று பிள்ளைகளின் தாயாரான செல்வரத்தினம் உதயச்சந்திராவின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு தொகைப்பணம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் நலன் காப்பக சிறப்பு பணிக்குழுவினரால் கடந்த 11 ஆம் திகதி அப்பகுதி கிராம அலுவலரான விஜய கலா முன்னிலையில் நோயாளியின் மகனிடம் கையளிக்கப்பட்டது. (க-222)


## பல்கலை மாணவர் 32 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை மேம்படுத்தும் நோக்கில் "சுவிஸ் நலிவடைந்தோர் உதவிச்சங்கத்தின்" ஊடாக 32 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த உதவி வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பில் உள்ள சுனாமி நினைவாலயத்தில் கடந்த 20 ஆம் திகதி - வற்றாநதிகள் - அமைப்பின் தலைவர் விமலதாஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உதவி தவிசாளர் இரவீந்திரன், பிரதேச சபை உறுப்பினர் தொம்மைப்பிள்ளை, வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் இணைப்பாளர் றூபன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கான மடிக்கணினிகளை வழங்கிவைத்தனர். (க-ரி3)



*பூநகரி பிரதேச செயலக*

## ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் முன்மாதிரியான செயற்பாடு

கிளிநொச்சி.ஜன.24

பூநகரிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க வருட இறுதி ஒன்று கூடல் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவிய வெள்ள இடர்காரணமாக நிறுத்தப்பட்டு நிகழ்வுக்காக ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து ஒருதொகைப் பணம் நாகேந்திரா வித்தியாலயம், பெரியபுலம் ஐயனார் அ.த. க பாடசாலை, கட்டைக்காடு அ.த. க பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் மீள இயங்குவதற்காக பாடசாலை சூழல் பணிக்குழுவினரால் மறுசீரமைக்கப்பட்டதுடன், மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வுகளில் பூநகரி பிரதேச செயலர் , உதவி பிரதேச செயலர், கணக்காளர், ஊழியர் நலன்புரிச் சங்க நிர்வாகத்தினர் உள்ளிட்ட பூநகரி பிரதேச செயலகத்தினருடன், கண்டாவளை உதவி பிரதேச செயலர் உள்ளிட்ட கண்டாவளை பிரதேச செயலகத்தினரும் கலந்துகொண்டனர். (க-222)





## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதியை சீரமைக்க கோரிக்கை

*பூதன்வயல் மக்கள் விடுக்கின்றனர்*

முல்லைத்தீவு.ஜன.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில், மதவளசிங்கன் கிராம அலுவலர் பிரிவிலுள்ள, பூதன்வயல் கிராமத்தில் வீதியொன்று மழைவெள்ளத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது இதனை சீரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

இது தொடர்பில் கிராமவாசியான க.விஜயகுமார் கருத்துத் தெரிவிக்கையில்,

மழை வெள்ளம் காரணமாக சுமார் 300 மீற்றர் தூரமான, கணுக்கேணிக் குளத்தின் பிரதான பீலி வீதி, மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

வீதியைப் பயன்படுத்தும் ஐம்பதுக்கும் அதிகமான கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வாகனங்கள் செல்வதில் சிரமம், பாடசாலை மாணவர்கள் சென்றுவருவதில் சிரமம் உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகள் காணப்படுவதோடு, வீதியில் நீர் தேங்கியிருப்பதால் நோய்த் தொற்றுக்களும் ஏற்படும் அபாயம் உள்ளதெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புகள் போன்றவற்றுக்குத் தெரியப்படுத்தியிருந்தும், எவரும் இதில் கவனம் செலுத்தவில்லை.

எனவே உரியவர்கள் குறித்த வீதியை மறுசீரமைத்து தருமாறு அவர் கேட்டுகொண்டார். (க-246)

# பாடசாலை மாணவர்கள் எவரும் போதைக்கு அடிமையாகக்கூடாது

*வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் ரி. அமிர்தலிங்கம் தெரிவிப்பு*

வவுனியா.ஜன.24

எங்களுடைய பாடசாலையிலே கல்வி கற்கின்ற எந்தவொரு மாணவனும் இந்தப் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிடக் கூடாது என்ற விடயத்தில் நாங்கள் மிகவும் காத்திரமான பங்களிப்பினை வழங்கிவருகின்றோம். அதில் உறுதியாகவும் இருக்கின்றோம் என வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் ரி. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப் பொருள் தடுப்பு வாரத்தைமுன்னிட்டு, தேசியமட்டத்திலான நிகழ்வு எங்களுடை பிரதேசத்தில் அரசதலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



எங்களுடைய மாகாணம் போதைப்பொருளுக்கு ஒருநுழைவாயிலாகக் கருதப்படுகின்றதாகவே தற்போதுள்ள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நீங்கள் சில பொய்யான தகவல்களுக்கு அல்லது பொய்யான பரப்புரைகளுக்கு அடிமையாவிடக்கூடாது என்பது எங்களுடைய விருப்பம். அந்த விருப்பத்தின் அடிப்படையில் நாங்கள் செயற்பட்டாலும் எங்களுக்கு மேலே இருக்கின்றவர்கள் இதனைவிடவும் மோசமான சில பணிகளை செய்வதற்கு தடைவிதிப்பதன் மூலம் அவர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கலாம் என நான் நினைக்கின்றேன் - என்றார்.

நேற்று முன்தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவு மாவட்டத்தில் போதைப் பொருள் வாரத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதன் பின்னர் பாடசாலைகளில் போதை ஒழிப்பு தொடர்பான சத்தியப்பிரமாணம் இடம்பெறுகின்றது. இந்த சத்தியப்பிரமாணத்தின் பின்னர் மாணவர்களுக்கு அறிவுரைவழங்கும்போது அதிபர் இவ்வாறு கூறினார். (க-111)

# முல்லைத்தீவில் சமாதானக் குலைவு என்று பிக்கு, ஆலய நிர்வாகத்தினர் மீது வழக்கு

## முல்லைத்தீவு நீதிமன்றில் இன்று விசாரணை

**முல்லைத்தீவு, ஜன. 24**

**முல்லைத்தீவு நாயாறு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கல் அன்று பிக்கு மற்றும் அவரது குழுவினரால் குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படும் நிலையில், முல்லைத்தீவில் சமாதானக் குலைவு ஏற்படுத்தினர் என இருதரப்பினருக்கும் எதிராகப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.**

அங்குவழிபாடுகளில்ஈடுபட்டபோதுகுழப்பம் விளைவித்தனர் என்று குற்றஞ்சாட்டப்படும்பிக்குவையும், ஆலயநிர்வாகிகள் சிலரையும் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

தைப்பொங்கல் தினமன்று செம்மலை கிராம மக்கள் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடு நடத்தச்சென்ற வேளைஅங்குசட்டவிரோதமாகவிகாரை அமைத்துக் குடியிருக்கிறார் என்று கூறப்படும் பௌத்த பிக்குவும், தெற்கிலிருந்து வந்த பௌத்த பிக்குகள் மற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்களும் அங்கு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்ட மக்களுடன் முரண்பட்டனர்.

முல்லைத்தீவுப்பொலிஸார்குழப்பத்தைச் சீர்ப்படுத்தினர், சம்பவங்களைஒளிப்படம் எடுத்திருந்தனர். பின்னர் வழிபாடு தொடர்ந்தது.

இந்தநிலையில்அங்குசமாதானத்துக்குக் குலைவு ஏற்படுத்தினர் என்ற முல்லைத்தீவுப்பொலிஸ்நிலையத்தலைமைப் பொறுப்பதிகாரி முல்லைத்தீவு நீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்திருந்தார்.

முதலாம்தரப்புநபரானபௌத்ததுறவியும் இரண்டாம் தரப்பு நபராக தமிழர் மரபுரிமை இணைத்தலைவர்களின் ஒருவரானவி.நவநீதன், ஆலயநிர்வாகிகளான க. பாஸ்கரன், மு. குகதாஸ் ஆகியவர்களைநீதிமன்றில்முன்னிலையாகுமாறு கடிதம்அனுப்பிவழக்குவிசாரணைக்காக எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.


வழக்கின் இரண்டாம் தரப்பு வாதிகள் வழக்கின் அவசர தன்மை கருதி முன்னகர்த்தல் பத்திரம் ஊடாக நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரினர். அதற்கு அமைவாக நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அது நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் உட்பட முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இரண்டாம் தரப்புக்கு ஆதரவாக மன்றில் முன்னிலையாகினர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பெயரை அங்குஇருக்கும்பௌத்ததுறவி கணதேவி தேவாலய என்று பெயர் மாற்றம் செய்தமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் செய்த முறைப்பாட்டைப் பொலிஸார் சரியாக உரியமுறையில் விசாரணை செய்யவில்லை. மீண்டும் வழிபாட்டுக்காக அங்கு சென்ற மக்களுடன் பௌத்தபிக்குமுரண்பட்டதன்அடிப்படையில்சமாதானக்குலைவுஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வழக்குத் தாக்கல்செய்திருந்தார்.

இந்த நிலையில், வழக்கு விசாரணைக்காக இன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இன்று குறித்த பிக்குவை மன்றில் முற்படுமாறு அறிவிக்குமாறு பொலிஸாருக்குநீதிமன்றுபணித்தது.

(து-ரி3)



## மன்னார் பிரதான பாலத்தில் கழுதைகளின் நடமாட்டம்

மன்னார்.ஜன.24

மன்னார் பிரதான பாலத்தில் கழுதைகளின் நடமாட்டம் அதிகரித்துக்காணப்படுவதினால்வாகனங்களில்பயணிப்பவர்கள்பல்வேறுஅசௌகரியங்களுக்குமுகம்கொடுத்து வருகின்றனர்.

மன்னார்பிரதானபாலத்தில்இரவு,பகல்பாராதுகழுதைகளின்நடமாட்டம்அதிகரித்துக்காணப்படுகின்றது.தனியாக அல்லது கூட்டமாக கழுதைகள் நடமாடித்திரிகின்றன.

இதனால்உந்துருளிகள் மற்றும்ஏனையவாகனங்களில் மன்னாருக்கு வருபவர்களும், மன்னாரில் இருந்து பிரதான பாலத்தினூடாக வேறு இடங்களுக்குச் செல்பவர்களும்அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதோடு, விபத்துக்ளுக்கும்முகம்கொடுக்கவேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

எனவேபிரதானபாலத்தைசுற்றித்திரிகின்றகழுதைகளை பிடித்துவேறுஇடங்களில்விட உரிய அதிகாரிகள்நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்எனமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளைமன்னார்நகர்ப்பகுதியில்மக்களுக்குஇடையூறாக,விபத்துக்களை ஏற்படுத்தும் வகையில் நடமாடிய சுமார் 70 இற்கும் மேற்பட்ட கழுதைகள் மன்னார் நகரசபையினால் பிடிக்கப்பட்டு மாற்று இடம் ஒன்றுக்கு கொண்டு சென்று விடப்பட்டுள்ளன. இதனால் மன்னார் நகர்பகுதியில்கழுதைகளின்பிரச்சினைகள்குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-56)

## கசிப்பு பிடிபட்டது சந்தேகநபரும் கைது

கிளிநொச்சி, ஜன. 24

கசிப்பினை உடமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளதாககிளிநொச்சிமாவட்டபோதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டகாந்திகிராமத்தில், வீட்டில் வைத்துகசிப்புவிற்பனைஇடம்பெறுவதாகபொலிஸாருக்குகிடைத்த இரகசிய தகவலினை அடுத்து நேற்றுமுன்தினம் குறித்தவீட்டில் சோதனையிடப்பட்டது. இதன் போது20போத்தல்கசிப்புமற்றும் 5 போத்தல் கோடா போன்றவை கைப்பற்றப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளதாகவும், கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணை மற்றும்நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாககிளிநொச்சிபோதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரிசதுரங்க தெரிவித்தார்.

(க-6)

## தீர்மானம்நிறைவேற்றப்படாமல் இந்த முறையும்நெல்கொள்வனவு

கிளிநொச்சி, ஜன. 24

மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாது இந்த முறையும் நெல்கொள்வனவுஇடம்பெறுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னாள் விவசாய பிரதி அமைச்சர் மற்றும் மாவட்ட செயலர் தலைமையில் இடம்பெற்ற விவசாயிகளுடனானகலந்துரையாடலில், ஏனைய மாவட்டங்களைப் போல் ஒரு மூடை நெல்லின் அளவு 68 கிலோ என தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதனைவருகின்றபோகத்தின் அறுவடைகளின் போது நடைமுறை படுத்துமாறும்தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு இல்லாதுஇந்தமுறைவெள்ளத்தினால் பாதிக்கபட்டு மீதியான விளைச்சல்கள் அறுவடை செய்யப்பட்டு வருகின்ற நிலையில், பழைமுறைப்படி75கிலோ ஒரு மூடை என விவசாயிகளிடம் இருந்து தனியார் நெல்லினை கொள்வனவு செய்வதாகவும், இதனால் பாதிப்பினை விவசாயிகள் எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகஒருபிரதிஅமைச்சர் முன்னிலையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை யாரும் நடைமுறைப்படுத்தமுன்வரவில்லைஉரியவர்கள் இதனைக் கவனத்தில்எடுத்துநடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக தற்போது இடம் பெறும் நெல் அறுவடைகளில்வெள்ளை2ஆயிரத்து 400 ரூபாவிற்கும், சம்பா 2ஆயிரத்து700,பாற்சம்பா 3ஆயிரம் , ஆட்டக்காரி ஆயிரத்து900ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும், இதுவரை நெல்சந்தைப்படுத்தும்சபை நெல்லினை கொள்வனவு செய்யவில்லை எனவும், தனியாரே கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நெல்சந்தைப்படுத்தும் சபையினரைக் கேட்டபோது, வருகின்ற மாதம் தான் நெல் கொள்வனவினை ஆரம்பிக்க உள்ளதாகவும், சம்பா 41ரூபாவுக்கும்,கீரிசம்பா50 ரூபாவிக்கும், நாடு38ரூபாவிற்கும் கொள்வனவு எஉள்ளது.கொள்வனவுசெய்யப்படும் போது உரைப்பை இலவசமாக வழங்கப்படுவதுடன் இலவசமாக நாட்டாமை கூலி 10 ரூபாவும் வழங்கப்படும்எனதெரிவித்தனர்.

உ(க-6)



## உதயசூரியன் கழகத்தினரால் கற்றல் கருவிகள் வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.24

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, உதயசூரியன் கழகத்தினரால், முல்லைத்தீவுமாவட்டத்தின்சிலபாடசாலைமாணவர்களுக்கு கற்றல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வல்வை உதயசூரியன் கழக கனடாக் கிளையின் நிதியுதவியில், வல்வை விக்கினேசுவரா சனசமூகசேவா நிலையம், யாழ்ப்பாணம் வல்வ்வ உதயசூரியன் கழகம் ஆகியன இணைந்து இந்த கற்றல் கருவிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலுள்ள தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை, ஐயங்கன் குளம் அ.த.கபாடசாலை மற்றும்;

புத்துவெட்டுவான் அ.த.க பாடசாலை, பழையமுறிகண்டி பாடசாலை ஆகியபாடசாலைகளின்

மாணவர்களுக்கேஇவ்வாறுகற்றல்கருவிகள்வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வுகள், அந்தந்தப் பாடசாலைகளின்பிரதானமண்டபகங்களில்இடம்பெற்றன. தேறாங்கண்டல்அ.த.கபாடசாலையில்தெரிவுசெய்யப்பட்ட 80மாணவர்களுக்கும், ஐயங்கன்குளம்அ.த.கபாடசாலையில்தெரிவுசெய்யப்பட்ட90மாணவர்களுக்கும், புத்துவெட்டுவான்அ.த.கபாடசாலையிலுள்ள20மாணவர்களுக்கும், பழையமுறிகண்டிபாடசாலையிலுள்ள10 மாணவர்களுக்குமாக மொத்தம் நான்கு பாடசாலைகளைச்சேர்ந்த 200 மாணவர்களுக்குஇவ்வாறுகற்றல்கருவிகள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் , வல்வை உதயசூரியன் கழக கனடா கிளையின் உறுப்பினர் மு.செயதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(க-222)

## அமைச்சுப்பதவி இல்லாவிடினும் சேவை தொடரும்

மன்னார்.ஜன. 24

எனக்கு மீள்குடியேற்ற பிரதியமைச்சுப்பதவி கிடைத்த காலங்களை பிரியோசனப்படுத்தி மக்களுக்கான சேவையை மிகவும் திருப்தியாக செய்தேன். சீரற்ற அரசியல் காரணங்களால் இன்றைய நிலையில்அமைச்சுப்பதவிஇல்லாவிட்டாலும் மக்களுக்கு செய்யவேயண்டிய என் சேவைகளைச் செய்து கொண்டிருப்பதாக காதர் மஸ்தான் தெரிவித்தார்.

கடந்தஞாயிற்றுக்கிழமைஆலயத் திருவிழாக்களில் கலந்து கொள்ளவும், ஆதரவாளர்களை சந்திக்கவும்மன்னாருக்குபயணம்செய்த போது மேற்படி கருத்தினை தெரிவித்திருந்தார்.

(க-213)

## 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா.ஜன.24

பாதிக்கப்பட்ட 50 மாணவர்களை இனம் கண்டு மக்கள் நலன் காப்பகம் கடந்த 21ஆம் திகதி அவர்களுக்கானகற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனர்.

நிகழ்வு செட்டிகுளம் மகாவித்தியாலய மண்டபத்தில் பாடசாலை முதல்வர் பொன்னம்பலம் தலைமையில் பகல்11மணிக்கு இடம்பெற்றது.



(க-222)



## இளையோருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.23

வளலாய் பங்கு இளையோருக்கும் புனித சவேரியார் குருமட நான்காம் வருட இறையியல் மாணவர்களுக்குமானஒன்றுகூடல்மறைமாவட்ட இளையோர் ஆணைக் குழு இயக்குநர் அருட்திரு அன்ரன்ஸ்ரிபன்அடிகளாரின் தலைமையில்நடைபெற்றது. கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வளலாய் பங்குத்தந்தை அருட்திரு தேவராஜன் அடிகளார் ஒன்றுகூடலை ஒழுங்குபடுத்தியிருந்தார்.

11 அருட்சகோதரர்களும், 60 துக்கும் அதிகமான இளையோரும் கலந்து கொண்டனர். வளவாளராக திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த சதீஸ் குமார் இளையோரை வழிப்படுத்தினார். (க-222)

## செயலமர்வு

முல்லைத்தீவு,ஜன.24

மருத்துவர் யோ. யதுநந்தனனின் ஒழுங்கமைப்பில் உயிரியல், கணிதப் பிரிவை மாணவர்கள் தெரிவு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக நேற்று முன்தினம் சென். அன்டனீஸ் கல்லூரியில் இடம்பெற்றது. ஊர்காவற்றுறையில் வளவாளர்களின் கருத்துப் பகிர்வு தரம் எட்டிலிருந்து உயர்தரம் வரை கல்வி கற்கும் 130 மாணவர்களுக்கு நடைபெற்றது. இந்தநிகழ்வில்பிராந்திய சுகாதாரசேவைகள்பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர், பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சர்வேஸ்வரன், கிளிநொச்சி கல்வி வலயத்தின் கற்கை வழிகாட்டல்களுக்கு பொறுப்பாகஉள்ளவீரசுதன், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரிநந்தகுமார் போன்றோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர். தொடர்ச்சியாக ஏனைய பாடசாலைகளிலும் வளவாளர்களின் கருத்துப்பகிர்வுநடைபெறும்எனத்தெரிவிக்கப்பட்டது. (க-222)

# இரணைமடுமுகாமைசரியானதா? கண்டறிய திணைக்களவிசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 23

**இரணைமடு தண்ணீர் வெளியேற்றத்தில் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்று கண்டறியும் நோக்கில் திணைக்களம் சார் விசாரணை இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.**

வடக்கு மாகாண தலைமைச் செயலரின் பணிப்பின்பேரில் வடக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை அமைச்சின் செயலர்ப.தெய்வேந்திரம்தலைமையில் இது இடம்பெறுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரிய குளமான இரணைமடுக் குளத்தில்அதிக நீர் வரத்து ஏற்பட்டபோது உரிய நடைமுறைகள் பின்பற்றவில்லை.என்றுஎழுந்த விமர்சனங்கள் தொடர்பில் வடக்குமாகாண ஆளுநர்விசாரணைக் குழுவை நியமித்து ள்ளார். இதனால் நடந்த சம்பவங்களைதிணைக்களரீதியில்கண்டறிவதற்காகத்தலைமைச்செயலர் என்ற வகையில் குறித்த அமைச்சின்செயலருக்குஉத்தரவிட்டிருந்தார்.

இதன் பிரகாரம் அமைச்சின் செயலர் தலைமையிலான குழுவினர் மாவட்டச்செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம் மாவட்ட விவசாயிகளிடம் தமது ஆரம்ப விசாரணைகளைநேற்றுநடத்தினர்.

இவ்வாறு இடம்பெறும் விசாரணைகளின் அடிப்படையில் அதிக மழைவீழ்ச்சி ஏற்படும் சமயம் திணைக்களம் மற்றும் பொறியியலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய முன் ஆயத்தப்பணிகள், பொறியியலாளர்களது நிலமை, விவசாயிகளுக்கு அறிவுறுத்தவேண்டியபணிகள் தொடர்பிலும்அவ்வாறானபணிகள்உரியமுறையில்மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பவற்றுடன் அவற்றை மேற்கொள்ள உரிய கால அவகாசம் இருந்தனவா என்பவை தொடர்பில் ஆராய்ந்துஅறிக்கைசமர்ப்பிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)



## முல்லைத்தீவுமாவட்டமீனவர்களின் நலன்கள்தொடர்பிலானகருத்தாடல்

முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் நலன்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சின் முதன்மைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

மீனவர்கள், மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் பல விடையங்கள் பேசப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் திணைக்களப் பிரதிநிதிகளுடனும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமேளனத் தலைவர் பேதுறுப்பிள்ளை பேரின்பநாதன், மற்றும் சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து கலந்துரையாடலைமேற்கொண்டிருந்தனர். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநர்தனும் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவுக்கடற்பரப்பில்இடம்பெற்றசட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன், அல்லது குறைக்கப்பட்டதன் பின்னர் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் தொடர்பிலும் மேலும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்துடன்முல்லைத்தீவில்அமைக்கப்படவேண்டியஇறக்குதுறைகள்தொடர்பாகவும்பேசப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும்29ஆம்திகதி முல்லைத்தீவுமாவட்டச்செயலகத்தில் இடம்பெறவுள்ளது என்றும் அறியமுடிகிறது. (21)

## பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டம்

வவுனியா,ஜன.23

வவுனியாபுதுக்குளம்மகாவித்தியாலய 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டம் கடந்த10ஆம்திகதிஅதிபர்எஸ். சுபாஸ்கரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவுக்கான நிர்வாக உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது.

அதற்கமைவாக பாடசாலை அபிவிருத்திச்சங்கச்செயலராக செல்வரத்தினமும்,பொருளாளராக த.ஜீவநேசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அடுத்துபாடசாலைஅபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதற்கமைவாக புதிய செயலராக எஸ்.சிவனேந்திரனும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக ஆசிரியர்கள் ஐவரும் பெற்றோர்கள் சார்பாக ஐவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க-222)



# போதை ஒழிப்பை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று ஊர்வலம்

வவுனியா.ஜன.24

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்கள் போதைப்பொருள் ஒழிப்பை வலியுறுத்தி நேற்று முன்தினம் கவனவீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.



பாடசாலையின்அதிபர் ரம்சீன் தலைமையில் இடம்பெற்ற போதை ஒழிப்புதொடர்பானவிழிப்புணர்வு கருத்துரைகளைத் தொடர்ந்து, முஸ்லிம் மகாவித்தியாலய முன்றலில் இருந்து குருமன்காடு சந்தி வரை சென்ற ஊர்வலம் மீண்டும்அங்கிருந்துபாடசாலையை வந்தடைந்திருந்தது.

இதன்போது "போதை நாட்டுக்கு கேடு அதை ஒழிக்க ஒன்றிணைவோம்", "எதிர்கால சந்ததியை வளர்க்க போதையை தடைசெய்", "போதை அது சாவின் பாதை" போன்ற வாசகங்களை எழுதிய பதாதைகள் தாங்கியவாறும், கோசங்கள் எழுப்பியும் ஊர்வலத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, எம். லிரீப், கிராம அலுவலர்,அபிவிருத்திஅலுவலர்கள் , பொலிஸ் அலுவலர் ஆகியோரும்கலந்துகொண்டிருந்தனர். (க-110)

# நடைபாதை வியாபாரிகளினால் நேற்றும் வவுனியாவில் பதற்றம்

வவுனியா,ஜன.24



வவுனியாசந்தைசுற்றுவட்ட வீதியில் நேற்று முன்தினம்நகரசபையினருக்கும் நடைபாதை வியாபாரிகளுக்கும் முறுகல் நிலை ஒன்று ஏப்பட்டமையால், பதட்டமான சூழல் ஏற்பட்டிருந்தது. நடைபாதையில் மரக்கறிகளை வைத்து வியாபாரம் மேற்கொண்டவர்களைநகரசபைஊழியர்கள் அகற்றியிருந்ததுடன் அவர்களது மரகறிகளும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றையதினமும் ஒருசில வியாபாரிகள் மீண்டும் குறித்த வீதியின்நடைபாதைகளில்மரக்கறிகளை விற்பனை செய்து வந்தமையால் நேற்றயதினமும் வவுனியா நகரசபை அலுவலர்கள் அவ்விடத்திற்கு சென்றமையால்சிறிது நேரம் குழப்பம் நிலவியது.

பின்னர் வியாபாரம் செய்த ஒரு நபரையும், விற்பனைக்காக வைக்கபட்டிருந்த மரகறிகளையும்பறிமுதல்செய்ததுடன், குறித்த நபரை வாகனத்தில் ஏற்றி வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர், அவர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும்,நகரசபை அலுவலர்கள் தெரிவித்தனர். (க-110)

# காணிகளைச் சோலைவரிக்கு உட்படுத்த அவற்றின் விவரங்களை வழங்குங்கள்

## அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவு

கொழும்பு, ஜன. 24

உள்ளூராட்சி சபைகளின் வருமானத்தை அதிகரிக்க அதன் சேவைகளைத் திறம்படச் செய்ய வேண்டும். அதன் ஒரு கட்டமாக அனைத்துக் காணிகளையும் சோலைவரிக்கு உட்படுத்துவதற்கு ஏதுவாக காணிகள் பற்றிய விவரங்களை வழங்குங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் சு.ராகவன் பணித்துள்ளார்.

வடக்கு மாகாணத்து மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்களை யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் ஆளுநர் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன்போதே மேற்கண்டவாறு கூறினார். வடக்கு மாகாணத்தில் போரின் பின்னர் படையினரால் விடுவிக்கப்பட்ட நிலங்கள், விடுவிக்கப்பட்ட நிலங்களின் அளவுகள், அவற்றில் மக்கள் இதுவரை மீளக்குடியமர்ந்த மற்றும் அவர்களின் பாவனையில் உள்ள அரச மற்றும் தனியார் நிலங்கள், இதுவரை விடுவித்தும் பயன்படுத்தப்படாத நிலங்களின் விவரங்களைத் தனித்தனியாக ஒப்படைக்குமாறு ஆளுநர் கோரினார்.

படையினரால் விடுவிக்கப்பட்டும் பயன்பாடு மற்றும் அபிவிருத்திகளில் உள்ள தடைகள் தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த சோலை வரி மிக முக்கியமானது. அதனை 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முந்திய தொகையிலேயே அறவிடப்படுகிறது. சில சபைகளில் வரி செலுத்தாத நிலமை நீடிக்கிறது. அவ்வாறிருக்கையில் சபைகளால் திறம்படச் செயற்பட முடியாது. வெற்றுக்காணிகளாக இருப்பினும் வரி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிக நிலங்களின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் இருந்தும் இங்கே சோலை வரியைக்கூட செலுத்துவது கிடையாது. இவை அனைத்தையும் சீர் செய்வதற்குக் குறித்த விவரங்கள் வேண்டும். அவற்றைத் தயார் செய்து வழங்குங்கள் என்று ஆளுநர் பணித்துள்ளார். (த-105)




## முதலமைச்சர் அமைச்சை ஆளுநர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜன. 24

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் அமைச்சு அலுவலகத்துக்கு வடக்கு ஆளுநர் சு.ராகவன் நேற்றுமுன்தினம் திடீர்ப் பயணம் செய்தார்.

வடக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் முடிவடைந்துள்ள நிலையில் மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஆளுநருடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டுவருகிறன. இந்த நிலையில் அவற்றைக் கண்காணிக்கும் நோக்கில் பயணம் மேற்கொண்டார். பணியாளர்களுடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டு ஆலோசனைகளையும் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



பிரிட்டன் அரசின் தெற்காசிய விவகாரங்களுக்கான தலைமை அதிகாரியும் இந்திய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளருமான பேர்கஸ் அல்ட் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சுச் செயலகத்தில் சந்தித்தார்.

## தொடருந்து நிலய்யத்தை திறக்க வருகிறார் அமைச்சர் அர்ஜுன

யாழ்ப்பாணம். ஜன. 24

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட தொடருந்துத் தரிப்பு நிலையத்தைத் திறந்து வைப்பதற்குப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வரவுள்ளார் என்று தொடருந்து நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி இந்த நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. அறிவியல் நகரை அண்டியதாகத் தொழிற்சாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன. அங்கு பயணம் செய்யும் வகையில் தொடருந்துத் தரிப்பு நிலையம் ஒன்று வேண்டும் என்று தொடருந்துத் திணைக்களத்துக்குக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அதற்கு அமைவாக அமைக்கப்பட்ட இந்த நிலையத்தைத் திறந்து வைப்பதற்கே அமைச்சர் வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

அரிசியை சந்தைக்கு விநியோகிக்கும் வகையில்

## கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பாடு விரிவாகும்

ஆலை உரிமையாளர்களிடம் அமைச்சர் உறுதி



மன்னார், ஜன. 23

நுகர்வோருக்கு அரிசி விற்பனை செய்துவந்த கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பாடு மேலும் விரிவாக்கப்பட்டு, சந்தையில் அரிசியை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

சிறியஅரிசிஆலைஉரிமையாளர்களின் விமோசனத்தைக் கருத்திற் கொண்டு நாட்டின் ஐந்து மாகாணங்களிலுள்ள எட்டு கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிக்கும் வகையில் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்கள் கூட்டுறவுத் துறையுடன் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

அது மாத்திரமின்றி தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின்ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சம்மேளனத்துடனும், இந்தச் சிறிய ஆலை உரிமையாளர்கள் இணைக்கப்பட்டிருந்தனர்.

தாங்கள் கடன்களைப் பெறுவதில் பல்வேறு தடைகளை எதிர்கொண்டுள்ளோம் என்று அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வறட்சி, இயற்கைஇடர் ஆகியவற்றின் காரணமாக நாட்டின் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் தமது ஆலைத் தொழில் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் தாங்கள் பெற்ற கடன்களை உடனடியாக வங்கிகளுக்கு மீளச்செலுத்த முடியாதிருந்ததாகவும் புதிதாகக் கடன்களை வழங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே தமது தொழிலை மீண்டும் இலாபகரமானதாக்கி கடன் சுமைகளைத் தீர்க்க முடியும் என்று அவர்கள் கோரியுள்ளனர். (த-56)

புதிய சுகாதார அறிவுறுத்தல்கள்

# உணவக ஊழியர்களுக்கு மருத்துவச்சான்று கட்டாயம்

## சுகாதாரப் பரிசோதகர்களுக்கான கருத்தரங்கில் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.24

உணவகங்களில் பணியாற்றும்ஊழியர்கள்அனைவரும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் மருத்துவச் சான்றிதழ் வைத்திருப்பது கட்டாயம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

நாட்டில் உள்ள அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கண்டிவிவசாய அமைச்சின் உள்ளகப் பயிற்சி நிலையத்தில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

பயிற்சியின்போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு பகுதியிலும் இயங்கும் உணவகங்களைச் சிறந்த சுகாதார பழக்க வழக்கமுள்ளதாகவும் சிறந்த உற்பத்திச் செயற்பாடுகளைக் கொண்டதாகவும் மாற்றியமைக்க வேண்டும்.

பௌதீக வளம் குறைந்த உணவகங்களை உற்பத்தி அளவுக்கேற்ற வகையில் அமைத்து பொது மக்களுக்கு சேவைகளை வழங்கும் நிலையங்களாக செயற்படுத்தவேண்டும். உரிய செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காத நிலையங்களைமூடிச்சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் உணவகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தடிமன், காய்ச்சல், வயிற்றோட்டம் ஏற்பட்டால் கட்டாய விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.

பணியாளர்கள் அனைவரும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழைக் கட்டாயம் வைத்திருக்கவேண்டும்,

சமைத்த - சமைக்காத உணவுகள் தனித்தனியாகக் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டு வெப்பமானி மூலம் பேணப்படல் வேண்டும். அதற்கெனதனியானபதிவேடு வைத்திருந்து பொருள்கள் வைக்கும் நேரம் எடுக்கும் நேரம் வெப்ப அளவு போன்றவை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கழிவுகளை அவற்றுக்குரிய தொட்டிகளில் நீண்ட நேரம் வைத்திருக்காமல் உடனுக்குடன் வெளியேற்றி சுத்தம் செய்யவேண்டும். அதற்கெனத் தனியான ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படல் வேண்டும்.

இந்த விதிமுறைகளைப் பின்பற்றாத உணவு நிலையங்களுக்குப் பொது மக்கள் செல்லாத அளவுக்கு பார்க்க வேண்டுமெனவும்.

இந்த நடைமுறை விரைவில் சுகாதார அமைச்சினால் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களுக்கு அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

### நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

# முன்னாள் தலைமை நீதியரசருக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

**கொழும்பு, ஜன. 24**

**நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் விளக்க மளிப்பதற்காக எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.**

விஜித்மலல்கொட, முர்துபெர்ணான்டோ, எஸ்.துரைராஜா உள்ளிட்ட நீதி யரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான சரத் என் சில்வாவும் மன்றில் முன்னிலையாகியிருந்தார். ஊடகங்களினூடாக வெளியான தகவலை அடிப்படையாகக் கொண்டே சரத் என் சில்வா மன்றில் முன்னிலையாகியிருந்ததாகவும், அவருக்கு அழைப்பாணை எதுவும் விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி ரொமேஷ்டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதனை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், எதிர்வரும் 7ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு முன்னாள் தலைமை நீதியரசருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

2018ஆம் ஆண்டு மருதானையில் நடைபெற்ற பேரணியொன்றின் போது, முன்னாள் நீதியரசர், நீதிமன்றத்தை அவமதித்ததாக, மூத்த பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, பேராசிரியர் ஹேவாவடுகே சிறில், மூத்த பேராசிரியர் பிரஷாந்த குணவர்தன ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

---

### மாகாணசபை கலைப்பு

# அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 24

தற்போது ஆட்சியில் உள்ள மூன்று மாகாண சபைகளையும் கலைத்து ஒரே நாளில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் அதனைச் சமர்ப்பிக்கவில்லை.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாண சபைகளுக்கும், ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு வசதியாக, தற்போது செயற்பாட்டு நிலையில் உள்ள, தென் மாகாண சபை, ஊவா மாகாண சபை, மேல் மாகாண சபை ஆகியவற்றைக் கலைக்க அரச தலைவர் மைத்திரிபால அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்பட்டிருந்தது. ஆனால் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எந்தவொரு அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கவில்லை.

**மகிந்த காலத்து ஊழல் மோசடி**

தற்போதைய அரசின் ஊழல் மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இதன்போது ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள், மகிந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் முதலில் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

**போதைப் பொருள்**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முல்லைத்தீவில் கடந்த திங்கட்கிழமை உரையாற்றும்போது போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கோப்புக்கள் மாயமாகிவிட்டன என்று கூறியிருந்தார். இந்த நிலையில், நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அதனைச் சமர்பித்துள்ளார். அந்தக் கோப்புக்கள் காணாமல் போகவில்லை என்றும் கூறியுள்ளார். (ஒ.5.26)

---

# விஜயகாந்துக்கு கிடைத்தது பிணை

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் முற்போக்கு தமிழ் தேசியக்கட்சியின் செயலருமான சுதர்சிங் விஜயகாந்தை மேன்முறையீட்டின் போதான பிணையில் செல்ல அனுமதி வழங்கி யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் வங்கியொன்றில் அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந்த் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலரின் திருட்டுபோன நகைகள் சுதர்சிங் விஜயகாந்திடம் காணப்பட்டன என்று தெரிவித்து அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், விஜயகாந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரும் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேரின் மீது 116 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேக நபர்கள் நால்வர் மீதான 2 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. 3 குற்றவாளிகளுக்கான தண்டனைத் தீர்ப்பை 2018 மார்ச் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் வழங்கினார். எனினும் ஒரு குற்றவாளி தலைமறைவாகியுள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலர் சுதர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்கவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் முற்போக்குத் தமிழ் தேசியக் கட்சியின் செயலர் சுதர்சிங் விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவை சமர்ப்பித்தார்.

தண்டனைக் கைதி சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதால் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2018ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதி விண்ணப்பம் செய்யதார். அந்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் நிராகரித்தார்.

இந்த நிலையில் விஜயகாந்த் சார்பில் நீதிவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்ட பிணை விண்ணப்பம் மீதான கட்டளையை சீராய்வு செய்யும் மனு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்தன. சீராய்வு மனு மீதான கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் இன்று வழங்கினார். (ம-37)



# தமிழரின் போராட்டத்தை சுமந்திரனே நகர்த்துகிறார்

### கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 24

தமிழர்களின் அடுத்தகட்டப் போராட்டத்தைத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே நகர்த்துகின்றார் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தொலைக்காட்சி விவாதத்தில் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தமிழர்களின் பிரிவினைப் போராட்டத்தை முதலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் ஆரம்பித்தார். இரண்டாம் கட்டத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்தினார். அடுத்தகட்டத்தைத் தற்போது சுமந்திரன் நகர்த்துகின்றார் என்று தெரிவித்துள்ளார். (கு-22)

# சிங்கப்பூருக்கு பயணமானார் அரச தலைவர் மைத்திரிபால

கொழும்பு, ஜன. 24

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூருக்கு நேற்றுப் பயணமானார்.

ஐ.நா. ஆசிய வலய சுற்றாடல்துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் நிறுவனங்களின் தலைவர்கள் மாநாட்டில் முதன்மை உரையாற்ற அவர் செல்கிறார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்தது.

இந்த மாநாடு சிங்கப்பூர் மரினா பே சாண்ட்ஸ் கண்காட்சி மற்றும் மாநாட்டு மத்திய நிலையத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. 40 நாடுகளைப் பிரதிநிதித்து வப்படுத்தி அந்த நாடுகளின் சுற்றாடல்துறை



அமைச்சர்கள் உட்பட முக்கிய பிரதிநிதிகள் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த இரண்டுநாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தில் சிங்கப்பூர் அரசதலைவர் மற்றும் தலைமைஅமைச்சர் ஆகியோரை இலங்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் அவர் பிலிப்பைன்ஸ்க்குச் சென்றிருந்தார். (கு)

---

# அரசியல் சூழ்ச்சி இடம்பெறாவிடில் சட்டவரைவு நிறைவேறியிருக்கும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 24



நாட்டில் அரசியல் சூழச்சி இடம் பெறாமல் இருந்திருந்தால் விசாரணை ஆணைக்குழு சட்டவரைவு மூன்று மாதங்களுக்கு முன்னரே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். கடந்தகால குற்றவாளிகளும் தண்டிக்கப்படுவார்கள். விசாரணைக்குழுவின் அறிக்கைகளை நீதிமன்றங்களும் சாட்சியங்களாகப் பெற்றுக்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1948ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து விசாரணைக்குழு அமைப்பது தொடர்பான சட்டம் இருந்து வருகின்றது. தற்போது அந்தச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தற்போது திருத்தப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழு சட்டவரைவு ஊடாக ஆணைக்குழுக்களுக்கு வழக்குத் தொடரும் அதிகாரம் கிடைக்கின்றது.

விசாரணை ஆணைக்குழுக்களில் சாதாரண குற்றவாளிகளும்எதிர்க்கட்சிஉறுப்பினர்களுமேவிசாரிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் அரசதலைவர் செயலணி பிரதானி மற்றும் அரச மரக்கூட்டுத்தானப் பணிப்பாளர்போன்றவர்களும்விசாரணைக்குஅழைக்கப்பட்டு அவர்களுக்குஎதிராகவழக்குதொடுக்கப்பட்டிருக்கின்றது. விசாரணைகளை தாமதப்பத்தும் நோக்கம் எங்களுக்கில்லை. எங்களுக்கு எதிராகவும் சிலர் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் 'டொப் 10' என்று முறைப்பாடு செய்துள்ளனர். நாங்கள் அஞ்சவில்லை. எமக்கெதிரான முறைப்பாடுகள் தாமதிக்கப்படுவது எங்களுக்கும் பிரச்சினையாக இருக்கின்றது - என்றார். (கு)

## வேலையாள் தேவை

**கோழிப் பண்ணையில்**
வேலை செய்வதற்கு
வேலையாள் தேவை
சம்பளம் மாதம் 39000/=

**077 282 4966**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளையில்
K.K.S வீதியில் முன்னர்
AGA/DRO காரியாலயம்
இருந்த 9 பரப்பு வெற்றுக்
காணி விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு தொடர்பு
கொள்ளவும்.
(CS 22769)(14.17)

தொடர்பு: ப.அனுராஜ்
**077 825 6334**

**இன்று முதல்**




**வடக்கு, கிழக்கு**

Majestic Jaffna. 10.45, 4.15, 7.15
Raja 2 Jaffna. 10.30, 1.30, 4.30, 9.30pm
Saraswathy Trinco. 2.30 pm
Bala Chavakachcheri.
Suganthi Batticaloa. 1.30 pm
Saru Point Pedro 2.30 / 9.30 pm

மற்றும் நாடெங்கிலும் உள்ள
ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## தேவை

ஊர்காவற்றுறை நகரில் உள்ள பலசரக்கு
வியாபாரக் கடைக்கு முன்னனுபவமுள்ள
**விற்பனையாளர் - 30,000/-**
**சிட்டை எழுதுநர் - 25,000/-**
**தேவை**
**077 067 4452** (CS/22750) (11.17)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு மேசன், கூலியாள்கள் உடன்தேவை.

**யாழ்வன் கட்டடப் பொருள் வாணிபம்**
**168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**- 076 826 4859**
(CS 22797/15/17)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்த மருத்துவ அலகு

### 2017/2018 கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவ பிரிவுக்கு 2017/2018 கல்வியாண்டுக்கான தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 11.02.2019 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைதடியில் உள்ள சித்த மருத்துவ பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்து புதுமுக மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் தங்களுடைய பெயர்களை உறுதி செய்து அதில் குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பதிவாளர்.** (IN 9186) (14.17)

விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111 உதயன்

## University of Jaffna
## FACULTY OF MEDICINE

**POST OF DEMONSTRATORS (ON CONTRACT)**

**WALK -IN INTERVIEW**

Walking interview for the post of Temporary Demonstrator will be held on 05.02.2019 2.00 p.m at the Board Room, Faculty of Medicine.

**Qualifications: MBBS**

Note :- Candidate those who are awaiting for the results of the Final examinations are expected to attend the interview.

Candidates thosewho are requested to appear with original relevant certificates with the copy, National Identity card and **self-prepared applications.**

**Registrar**
**University of Jaffna**
**17.01.2018** (IN 9187) (14.17)

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வியாபார முகாமைத்துவமாணி**
**பட்டப்படிப்பு 2017/2018 (வெளிவாரி)**
**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2017 (9ம் பிரிவு)**

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப்பரீட்சையானது எதிர் வரும் 27.01.2019 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தி யாகியுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 25.01.2019 (வெள்ளிக்கிழமை) காலை 09.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரையான காலப்பகுதியில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021-222-3612) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்க்லைக்கழகம்**
**23.01.2019** (IN 9185) (14.17)

Congratulations

# மணிவிழா நாயகியை மனமுவந்து வாழ்த்துகின்றோம்



## திருமதி கடம்பமலர் விமலராசா

**(Maths, SC.Tr, B.A, M.Ed)**

**(அதிபர் தரம் I, யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)**

**புகழ்பெற்ற அதிபரும், சோதிடருமான நயினை தந்த தவப்புதல்வர் கொக்குவில் கிழக்கில் வாழ்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை சரவணபவன்** அவர்களின் தவப்புதல்வி **திருமதி கடம்பமலர் விமலராசா** அவர்கள் அகவை அறுபதில் 15.12.2018 அன்று அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். மணிவிழா கண்டு மகிழ்ந்திருக்கும் அந்த மகத்தான நாயகியை ஓய்வுநிலை சமூக சேவகியாக ஆரோக்கிய வாழ்வு பெற்று நூற்றாண்டு விழாக்காண வாழ்த்துகின்றோம். **27.07.1992 - 09.07.2009 வரையான காலப்பகுதியில்** இவர் யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் கல்லூரியின் உயர்வுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையை என்றும் மறக்க முடியாது. கணினிகள் இல்லாக் காலத்தில் கணினியாகச் செயற்பட்டவர், பல திறன்கள் மிக்கவர் என அன்றைய ஆசிரியர்களும் மாணவர்களும் எம்முடன் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றார்கள். **இன்று (24.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் அவரது சேவைநலன் பாராட்டு விழா** நடைபெறும் நாளில் அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**செல்வி பா.மார்க்கண்டு (ஓய்வுநிலை அதிபர்),**
**திரு.இ.அருணகிரிவாசன் (ஓய்வுநிலை உப அதிபர்),**
**திருமதி ச.சிவபாலன் (ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியர்),**
**திருமதி சு.சர்வகுணசீலன் (ஓய்வுநிலை விவசாய ஆசிரியர் - யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி)**

Congratulations

(CS 2..97) (11.17)

# தமிழர் பகுதிகளில் முற்றுகையிட்டு வனவளத்தினர் எல்லைக்கல் நடுகை

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

**மூதூர், ஜன. 24**

**திருகோணமலையில் இருகிராமங்களை இணைக்கும் வீதிகள், குடியிருப்புக் காணிகள், வயல் நிலங்கள், தோட்டக் காணிகளில் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினர் அடையாளப்படுத்தி எல்லைக் கல் நட்டு முற்றுகையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

திருகோணமலை, சாம்பல் தீவு 6 ஆம் வட்டாரப் பகுதி ஆத்திமோட்டை கோணேசபுரி சாம்பல்தீவு குடியிருப்பு பகுதிகளுக்கு நடுவில் காணப்படும் இடங்களே அபகரிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உப்புவெளி பிரதேச சபை உறுப்பினர் ச. விவுசன் தெரிவித்ததாவது:


வனவளத் திணைக்களத்தினரின் இந்தச் செயற்பாட்டால் அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.



தமிழ் மக்களின் நிலங்களும், பொது இடங்களும் பரவலாக அரச திணைக்களங்களால் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் இனரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றன. வனப்பாதுகாப்புத்திணைக்களம் தொல்பொருள் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் அனைத்தும் சிங்களத்தின் பிரதிபலிப்பு என்று மக்கள் மனதில் எண்ணம் உருவாகியுள்ளது.

இந்த நிலையை நாம் விரும்பவில்லை. அபகரிப்பை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலரிடம் மனுக் கொடுத்துள்ளோம் என்று தெரிவித்தார். (து-40)



# போதையேற்றும் மாத்திரைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 24

மதன மோதகம் எனப்படும் போதைப் பொருள்களை 2ஆயிரத்து 925 மாத்திரைகளாக்கித் தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென் மாகாண சிறப்புப் பொலிஸ் விசாரணைப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் அவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

78 வயதுடைய அவர் இந்திகஸ்கெடிய, பத்தேகமவைச் சேர்ந்தவர். அவர் மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-71)

# 128 மாணவர்களுக்கு குளவிகள் கொட்டின

கொழும்பு, ஜன. 24

குளவிக் கொட்டுக்கு இலக்காகி 128 மாணவர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கடுகஸ்தோட்டை பாடசாலையொன்றுக்கருகில் காணப்பட்ட விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது குளவிகள் கொட்டியுள்ளன.

பாதிக்கப்பட்ட 128 மாணவர்களில் 88 மாணவர்கள் கட்டுகஸ்தோட்டை மருத்துவமனையிலும் ஏனைய 40 மாணவர்கள் கண்டி மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் பகுதி பகுதியாக வெளியேறினர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-61)

## கண்பார்வையற்றோருக்கு

# ஆர்மோனியம், ரூ. 10 லட்சம் வழங்கினார் அரசதலைவர்

கொழும்பு, ஜன. 24

ஆர்மோனியம் ஒன்றைப் பெற்றுத்தருமாறு அவர்கள் அரசதலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் மைத்திரி அதையும் ரூ.10 இலட்சம் பணமும் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற மாணவி சஞ்சவி நயனதாரா மற்றும் அவரது கண்பார்வையற்ற சகோதரன் கிம்ஹான நயன்ஜித் ஆகியோருக்கே இவை வழங்கப்பட்டன.

அரசதலைவரின் பதவிக்காலத்தின் நான்காண்டு நிறைவையொட்டி கடந்த 12ஆம் திகதி ருவன்வெல்ல லெவன்கம சதானந்த பிரிவெனா விகாரையில் இடம்பெற்ற வழிபாட்டின்போது இருவரும் மைத்திரியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். மைத்திரி அதை வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்தார். அதன்படி அவை நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன என்று அரசதலைவரின் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (து)

# கோத்தபாய மீதான வழக்கை விசாரிக்க நீதாய மேல்நீதிமன்றுக்கு அதிகாரமில்லை

## அவரது சட்டத்தரணிகள் மன்றில் வாதம்

கொழும்பு, ஜன. 24

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கை நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் விசாரிக்க அந்த நீதி மன்றுக்கு அதிகாரமில்லை என்று அவர்களது சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அது பற்றிய சட்டமா அதிபரின் பதிலுக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வீரகெட்டிய மெதமுல்லையில்,டி.ஏ. ராஜபக்ச அருங்காட்சியகத்தை அமைக்க 33மில்லியன் ரூபா அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. அது நேற்றுமுன்தினம் தொடக்கம் நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் விசாரிப்பது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன்படி வழக்கு நேற்று முன்தினம் நிரந்தர நீதாய மேல்நீதிமன்ற நீதிபதிகளான சம்பத் அபயக்கோன், சம்பத் விஜரட்ன, சம்பா ஜனாகே ராஜரட்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகளான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உட்பட ஏழு பிரதிவாதி களும் மன்றில் முற்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டன.



**வீரகெட்டிய மெதமுல்லையில் டி.ஏ. ராஜபக்ச அருங்காட்சியகத்தை அமைக்க 33மில்லியன் ரூபா அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார்.**

கோத்தபாய சார்பில் மன்றில் முற்பட்டிந்த அரசதலைவர் சட்டத்தரணி ரொமேஷ் த சில்வா, இந்த வழக்கை விசாரணை செய்ய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றுக்கு அதிகாரமில்லை என்று எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

2019ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நீதிமன்றத் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக இவ்வாறான நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணம் கூறப்பட்டுள்ளது. அதன்படி பொருளாதார மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கே இந்த நீதிமன்று - என்று வாதிட்டார்.

பிரதிவாதிகளின் சட்டத்தரணியின் எதிர்ப்பையடுத்து நீதிமன்றில் சட்டமா அதிபர் சார்பில் முற்பட்டிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், இது குறித்து விளக்குவதற்குக் காலஅவகாசம் கோரினார்.

அதற்கமைவாக நிரந்தர நீதாய மேல் நீதிமன்ற நீதிபதிகள் விசாரணையை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். அன்று சட்டமா அதிபர் தரப்பினர் காரணங்களைத் தெளிவுபடுத்தி பதிலுரைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இதேவேளை பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல், சாட்சியங்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தமாறும் நீதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தார். நீதிமன்றுக்குள் பிரவேசிப்பதற்கு ஒரு வாயிலே உள்ளது. பிரதிவாதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக வெள்ளை உடை தரித்த பாதுகாவலர்களும், மூன்று டிபெண்டர் வாகனங்களும், துப்பாக்கியுடனான சிறப்பு அதிரடிப் படை வீரர்களும் வளாகத்தில் உள்ளனர். ஊடகவியலாளர்கள் பலர் வருகை தந்துள்ளனர். ஆகவே மனரீதியாகச் சாட்சியாளர்கள் அச்சமடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்தார். அத்துடன் ஊடகங்களுக்குக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக நீதிமன்ற வளாகம் விநோத அரங்காக மாற்றமடைய இடமளிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

மதியம் 12.30க்கு வழக்கு விசாரணைகள் நிறைவுக்கு வந்திருந்தன. (து-71)



# கோப் குழுவின் தலைவராக மீள ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜன. 24

பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் (கோப்) தலைவராக மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரவூப் ஹக்கீம், சுஜீவ சேனசிங்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, அஜித் பீ. பெரேரா, வசந்த அலுவிகார, ரஞ்சன் ராமநாயக்க, அசோக் அபேசிங்க, அநுர பிரியதர்சன யாப்பா, லக்ஸ்மன் செனவிரத்ன, சந்திரசிறி கஜதீர, மகிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, ரவீந்திர சமரவீர, சுனில் ஹந்துன்நெத்தி, மாவை சேனாதிராசா மற்றும் ஜயந்த சமரவீர ஆகிய 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் அங்கம் வகிக்கின்றனர். மேற்படி தெரிவு ஏகமனதாக இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (து-61)

# எந்தவொரு அமைச்சரையும் குழுவுக்குள் அடக்காதீர்கள்

## விஜேதாஸ ராஜபக்ஸ கடிதம்

கொழும்பு, ஜன. 24

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களையோ, பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களையோ அரச கணக்காய்வுச் சபை, பொது முயற்சியாண்மைக்கான குழுவுக்கான தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டாம் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி. விஜேதாஸ ராஜபக்ஸ, சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு இது பற்றிய கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த சபைகளுக்கான தலைவர்களை நியமிக்கும்போது, எதிர்க் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை நியமிப்பது குறித்துப் பரிசீலிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அரச கணக்காய்வுச் சபை, பொது முயற்சியாண்மைக்கான குழு உள்ளிட்ட பல நாடாளுமன்ற செயற்பாட்டுக் குழுக்களின் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கு முன்னதாகவே மேற்படி கோரிக்கைக் கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஸ அனுப்பியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-61)

# கிழக்குப் பல்கலையின் துணைவேந்தர் கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்

கொழும்பு, ஜன. 24

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் எவ்.சி.ராகல் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

பல்கலைக்கழகத்தின் முதன்மை வாயிலில் புதிய துணைவேந்தருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், வளாக முதல்வர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர். (து)





பனிப் பொழிவு அதிகரித்த பருவநிலை உலகின் பல பாகங்களிலும் பதிவாகியுள்ளது. அந்த வகையில், அமெரிக்கா– கனடா எல்லையிலுள்ள நயாகரா நீர்வீழ்ச்சியில் வழிந்தோடிக்கொண்டிருந்த நீர் அப்படியே பனிக்கட்டியாக இறுகிப்போயிருக்கின்ற காட்சி இது.

# சிம்பாப்வேயில் தொடர் வன்முறை

## டாவோஸிலிருந்து உடன் திரும்பினார் எமர்சன்



ஹராரே.ஜன.24
சிம்பாப்வேயில் அரசுக்கு எதிராக நடந்து வந்த போராட்டம் வன்முறையாக உருமாறியுள்ளது. இதன் காரணமாக சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடக்க இருக்கிற உலக பொருளாதார மாநாட்டுக்கான தன்னுடைய பயணத்தை இடைநிறுத்தினார் அந்த நாட்டின் அதிபர் எமர்சன்.

சிம்பாப்வேயில் கடந்த வாரம் பெட்ரோல், டீசல் விலை கணிசமாக உயர்த்தப்பட்டது. இந்த விலை உயர்வு அறிவிப்பின் பின்னர் அந்த நாட்டின் எதிர்க்கட்சியினர், வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். குறிப்பாகச் சிம்பாவேயின்தலைநகர்ஹராரே.தென்மேற்கு நகரமான புலவாயோ ஆகிய இடங்களில் போராட்டம் அதிகரித்துள்ளது.

போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு பாதுகாப்பு படையினரும், பொலிஸாரும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதனால் போராட்டக்காரர்களுக்கும் அரச படையினருக்கும் இடையே மோதல்ஏற்பட்டுள்ளது. போராட்டக்காரர்களைப் பொலிஸார் கண்மூடித்தனமாகத் தாக்கிக் கைது செய்கின்றனர்.

இந்த வன்முறைப்போராட்டம் மற்றும்பாதுகாப்புபடையினரின்நடவடிக்கைகளில் பலர் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்தசூழ்நிலையில், உலகப்பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்குச் சென்றிருந்த அதிபர் எமர்சன் மாநாட்டில் பங்கேற்காமல் இடையில் நாடுதிரும்பினார்.

பின்னர் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியது சரியான நடவடிக்கைதான் என்றும், பாதுகாப்பு படையினர் வன்முறையில் ஈடுபட்டது தொடர்பாக விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அதேசமயம் போராட்டக்காரர்களுக்கும் அதிபர் எம்மர்சன் மனங்காக்வா, கடும்கண்டனம்தெரிவித்தார்.

"போராட்டம் நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் இந்த போராட்டம் அமைதியான போராட்டம் அல்ல" என்று அவர் கூறினார்.

போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டதுடன், காவல் நிலையங்களைசூறையாடி, ஆயுதங்கள் மற்றும்சீருடைகளைதிருடிச்சென்றதாகவும்அவர்குற்றம்சாட்டினார்.




# நவாஸ் ஷெரீப் மருத்துவமனையில்

லாகூர்.ஜன.24
ஊழல்வழக்கில்சிறைத்தண்டனை பெற்று, சிறையில்அடைக்கப்பட்டிருக்கம் பாகிஸ்தானின் முன்னாள் தலைமைஅமைச்சர்நவாஸ்ஷெரீப், இதய நோய் காரணமாகப்பாகிஸ்தானின் லாகூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று லாகூர் சிறையில் உள்ள ஷெரீப், பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு நடுவே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு அங்கே சிகிச்சையளிக்கப்பட்டது. அவரின் உடல்நிலை குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.


3 தடவைகள்பாகிஸ்தானின்தலைமை அமைச்சராகப் பதவி வகித்த ஷெரீப், ஒருமுறை கூடத் தலைமை அமைச்சருக்குரிய 5 ஆண்டுகள் பதவிக்காலத்தை நிறைவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழில்

## எழுதுவது,
## பேணுவது

யுனான்.ஜன.24
தமிழைப் பேசுவது, படிப்பது, எழுதுவது, தமிழில் நாடகங்கள்நடிப்பது, தமிழர்களின்பாரம்பரிய உடைகளை உடுத்தியவர்களாகப் பொங்கல் கொண்டாடுவது எனத் தமிழையும், தமிழர்களின் பண்பாட்டையும் கற்றுக் கொள்ளும் வகையில் சீனர்கள் செயற்பட்டு வருகிறார்கள். இது பற்றிய கானொலிகள், பதிவுகள் வலைத்தளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தின.

தமிழையும் தமிழர் பாரம்பரியங்களையும் சீனர்கள் கற்றுத் தேறிவருவதைக் குறிக்கும் வகையிலான கானொலிகள், ஒளிப்படங்களைச்சீனாவின் யுனான் மின்சு பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்த் துறை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியது.
சீனாவின்யுனான்மாநிலத்திலுள்ளஇந்தப்பல்கலை கழகத்தில் தெற்காசிய மொழிகள் மற்றும் கலா கல்லூரியில் வங்காளம், நேபாளி, சிங்களம், ஹி உள்ளிட்ட பல்வேறு மொழிகளுக்கான துறை இயங்கி வருகின்றன.



# முஸ்லிம்களைத் தாக்குவத
# தீட்டிய நால்வர் அமெரிக்க

நியூயோர்க்.ஜன.24
அமெரிக்காவின்நியூயோர்க்மாகாணத்தில்வாழும்குறிப்பிட்டதோர்இஸ்லாமிய சமூகத்தைத் தாக்குவதற்குத் திட்டம் வகுத்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று ஆண்களும், சிறுவன்ஒருவனும்கைது செய்யப்பட்டனர்.

ஆண்ட்ரூ கிரைஸல் (வயது18), வின்சென்ட் வெட்ரோமில் (வயது19), ப்ரியன் கொலோனேரி ஆகியோரே கைது செய்யப்பட்டனர். ஆயுதங்களை வைத்திருந்தது மற்றும் சதித்திட்டம் தீட்டியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் இவர்கள் மீது வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த மூவரையும் தவிர 16 வயதுச் சிறுவன் ஒருவன் மீதும் இந்தக் குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1980ஆம்ஆண்டுகளில்பாகிஸ்தானைச் சேர்ந்த மதகுரு ஒருவரால் அமெரிக்காவில் கட்டியெழுப்பப்பட்ட சிறுதொகையளவில்முஸ்லிம்கள்குழுமமாகவாழும்




இஸ்லாம்பொர்கை இவர்கள்தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்த இவர்கள் இதற்காகத் தமது வீட்டிலே வெடிகுண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் உள்ளிட்டவற்றை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# ல் அசத்தும் சீனர்கள்!

## து, பேசுவது, பாரம்பரியம் பண்பாடு
## து என்று ஆச்சரியப்படுத்துகிறார்கள்

து,
கங்
ரம்
வர்
டு
ர்க
றுக்
கள்
இது
கள்
யா
ர்.

ளையும்
ரிக்கும்
டங்க
லைக்க
துறை
து.
தப்பல்கலைக்
றும் கலாசார
களம். ஹிந்தி
ன துறைகள்




இந்த நிலையில், அங்கு 2017ஆம் ஆண்டு தமிழ்த் துறையும்ஆரம்பிக்கப்பட்டுச்சீனமாணவர்களுக்குத் தமிழ்ப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இந்தப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையின் ஒருங்கிணைப்பாளரும் துணைப் பேராசிரியருமாக இருக்கின்ற நிறைமதி (சீனப் பெயர் கிகி ஜாங்) இதுகுறித்துக் கூறியபோது,



'நாங்கள் தமிழ் மொழியில் நான்காண்டுகள் இளங்கலைப் பட்டப் படிப்பைச் சீன மாணவர்களுக்கு வழங்கி வருகிறோம். அவர்களுக்கு ஆரம்பத்தில் அடிப்படையாகப் படிப்பு, பேச்சு, எழுத்து குறித்தும் அடுத்தடுத்த ஆண்டுகளில்தமிழர்களின் இலக்கியம், கலாசாரம், பண்பாடு உள்ளிட்டவற்றையும் கற்றுக் கொடுக்கிறோம் என்றார்.

சீனர்கள் தமிழ் படிப்பதற்கான காரணம் என்ன? இது சீன அரசின் மறைமுகத் திட்டமா? தமிழைப் படித்து விட்டு இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? உள்ளிட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், 'தமிழ் மொழிக்கும் சீனாவுக்கும் பல நூற்றாண்டுகளாக நெருங்கிய தொடர்பு உள்ளது.

அதுமட்டுமின்றி, அன்று தொட்டு இன்றுவரை உலக வர்த்தகத்தில் நாங்கள் சிறந்து விளங்கி வருகிறோம். இதை கலை, விளையாட்டு, கல்வி போன்றவற்றுக்கும் விரிவுபடுத்து வதற்குச் சீனா விரும்புகிறது.

இதனால், நாங்கள் தமிழ்மொழியையும், அதன் கலாசாரம், இலக்கியம், கலைகள் உள்ளிட்டவைகள் குறித்தும் தெரிந்துகொள்வதற்கு முயற்சித்து வருகிறோம். அதன் ஒருபடியே இது என்றார்.

இதற்குமுன்னரானகாலத்திலிருந்துதமிழ்வானொலி உள்ளிட்ட சிலவிடயங்களில் சீனா தமிழை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.




## வானூர்தியைக் கடத்த முயன்றதாக போதை தலைக்கேறிய ஒருவர் கைது

மொஸ்கோ.ஜன.24

ரஷ்யாவுக்குச் சொந்தமான வானூர்தியைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் போதையிலிருந்த நபர் ஒருவரை ரஷ்யாப் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.


ரஷ்யாவுக்குச் சொந்தமான பயணிகள் வானூர்தி ஒன்று, சைபீரியாவின்சூர்குத்நகரத்தில்இருந்து ரஷ்யாவின்மொஸ்கோநோக்கியதாக நேற்றுமுன்தினம் தன்னுடைய பயணத்தை மேற்கொண்டது.

அந்த வானூர்தியில் பயணம் செய்த குறிப்பிட்ட நபர், வானூர்தியைஆப்கானிஸ்தானுக்குதிருப்பும்படிவானூர்திஊழியர்களுக்கு உத்தரவிட்டார். ஆனால்விமானி அந்த வானூர்தியை அவசரமாக ரஷ்யாவின்காண்டிமான்சிய்ஸ்க் நகரில்தரையிறக்கினார்.

பின்னர்பொலிஸாருக்குத்தகவல் தெரிவிக்கப்பட்டுபாதுகாப்புபலப்படுத்தப்பட்டது. பொலிஸார்வானூர்தியில் ஏறி அந்த நபரைக் கைது செய்தனர்.

மதுபோதையில் இருந்த அவர் சைபீரியாவின் சூர்குத் நகரைச் சேர்ந்தவர் என்பதும், சொத்துகளைச் சேதம் செய்த வழக்கில் தண்டனை அனுபவித்தவர் என்பதும் தெரியவந்தது.

வானூர்தியைக்கடத்தமுனைந்ததாக அவர்மீது வழக்குப் பதிவு செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## நைஜீரியாவில் மீண்டும் 'லசா' இதுவரை 16 பேர் சாவு

லாகோஸ்.ஜன.24

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் வேகமாகப்பரவிவருகின்றதுபுதிய 'லசா' காய்ச்சல். இதனால் இதுவரை16பேர்சாவடைந்துள்ளனர்.

உலகின் மிகமோசமான நோய்களில் ஒன்றான 'லசா' காய்ச்சல் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் திடீரென வேகமாகப் பரவி, 23 நாடுகளைத் தாக்கி, 171பேர் சாவடைந்தனர். இந்த நோய் நைஜீரியாவில் மீண்டும் பரவி வருகிறது. நைஜீரியாவில் 'லசா' காய்ச்சலுக்கு இதுவரை 16 பேர் சாவடைந்துள்ளதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 172 நோயாளிகள் 'லசா' காய்ச்சலால்பாதிக்கப்பட்டுஇருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டது. பரிசோதனையின் முடிவில் 60 பேருக்கு இந்த நோய் உள்ளதாக உறுதி செய்யப்பட்டது. இந்த வைரஸ் நைஜீரியாவின்36மாநிலங்களில் உள்ள ஏழு இடங்களிலும், அபுஜாவின் தலைநகரத்திலும் கண்டறியப்பட்டுள்ளது.

### 'லாசா' வைரஸ்

'லசா'வைரசானது'மார்பர்க்'மற்றும் 'எபோலா'எனும்இரண்டுகொடிய வைரஸ்களின் குடும்பத்தைச் சார்ந்தது. இதனால் கடுமையான காய்ச்சல், வாந்தி மற்றும் குருதிச் சோகை போன்ற பிரச்சினைகள் ஏற்படும். 'லசா' எனும் பெயர் வடக்கு நைஜீரியாவின் லசா நகரத்திலிருந்து வந்ததாகும். இந்த நோய் 1969 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. இந்தவைரஸ் எலிகள் மூலமாகவும், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தொற்றாலும் பரவக்கூடியது.

## ந்வதற்கு திட்டம் க்காவில் கைது



ந்வதற்
தற்கா
ள் மற்
ற்றை
டப்பட்

இந்தத் தகவல்கள் அனைத்தும் அவர்களுடன் கைது செய்யப்பட்ட குறித்த சிறுவன் மூலமே தெரியவந்திருக்கிறது. கைதுசெய்யப்பட்டமூன்றுஆண்களும் நீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

## மார்ட்டின் லூதர் கிங்குடன் ட்ரம்பை ஒப்பிட்டு புகழாரம்

### லூதர் கிங்கின் மகன் காட்டம்

வோஷிங்டன். ஜன.24



கடந்த ஞயிறு அன்று வோஷிங்டனில் நடந்த பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமெரிக்கத் துணைத் தலைவர் மைக் பென்ஸ், அமெரிக்காவில்சமூகஉரிமைக்காகப் போராடிய, மறைந்த ஆபிரிக்க - அமெரிக்கரான மார்டின் லூதர் கிங் போலவேஅமெரிக்கஅதிபர்டொனாலட் ட்ரம்ப்செயற்படுகிறார்எனப்புகழ்ந்தார். 'வாருங்கள் நாம் மார்ட்டின் லூதர் கிங் கூறும்வழியிலேசென்றுஒற்றுமையாக, நம்பிக்கையுடன்இந்தநாட்டைக் கட்டி எழுப்புவேம். எங்கள் நாட்டின் எல்லையைப் பாதுகாத்து மீண்டும் நாட்டில்நல்லாட்சியைநிறுவுவோம்'என்றும்கூறினார். மைக்பென்ஸின் இந்தக்கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த மார்டின் லூதர் கிங்கின் மகனான மார்ட்டின் லூதர்கிங் III 'நல்ல நேரம் என் தந்தை மைக் பென்ஸின் இந்தக் கருத்தைக் கேட்பதற்கு உயிருடன் இல்லை அவர் இதைக் கேட்டிருந்தால் என்ன நினைப்பார்? என் தந்தை பாலங்களைத் தான் கட்டினாரே தவிர சுவர் கட்ட முயலவில்லை.' என்று காட்டமாகத் தெரிவித்தார்.

# பாடசாலை நிகழ்வுகள்





கிளிநொச்சிபளைதர்மக்கேணிஅ.த.க.பாடசாலையின்மாணவத்தலைவர்களுக்குச்சின்னம்சூட்டும்நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. (ஐ-9)




கொடிகாமம், ஜன. 24
யாழ்ப்பாணம் கல்வயல் சிறிசண்முகானந்தா வித்தியாலயத்தின் கால்கோள் விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அதிபர் க.மகிந்தன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் கலந்து கொண்டார்.
புதுமுக மாணவர்களுக்கு மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-159)

★ ★ ★ ★

## கால்கோள் விழா

கொடிகாமம், ஜன. 24
யாழ்ப்பாணம் கைதடி குருசாமி வித்தியாலயத்தின் கால்கோள் விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலகர் க. ஈஸ்வரன், இலங்கை வங்கி கைதடி கிளையின் முகாமையாளர் த.திருவரங்கன், கவிராஜ் சாரதி பயிற்சிப் பாடசாலையின் அதிபர் கு.டசீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)









## நிறுவுநர் தினமும் கால்கோள் விழாவும்

கொடிகாமம், ஜன. 24
சாவகச்சேரி பிரதேச சபையின் ஐங்கரன் முன்பள்ளியின் நிறுவுநர் தினமும் , கால்கோள் விழாவும் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் முதன்மை முகாமைத்துவத்துக்கான உதவியாளர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர் க.வாமதேவன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ. மயூரன், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் க.தம்பு , திருமதி மகேந்திரராணி பொன்னம்பலம் ,அல்லாரை கிராம அலுவலர் மோ.பிரகாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.
முன்பள்ளியின் புதுமுக மாணவர்கள் வரவேற்கப்பட்டதுடன், நிறுவுநர் படத்துக்கு மாலையும் அணிவிக்கப்பட்டது. (ஐ-159)

## பொங்கல் நிகழ்வு



கொடிகாமம், ஜன. 24
யாழ்ப்பாணம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தைப் பொங்கல் நிகழ்வு வித்தியாலய வளாகத்தில் கடந்த புதன்கிழமை காலை 7.30 மணியளவில் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலை சைவ சமய ஆசிரிய ஆலோசகர் செல்வி. இராசமலர் இராமலிங்கம் கலந்துகொண்டார். (ஐ-159)



★ ★ ★ ★



கொடிகாமம், ஜன. 24
யாழ்ப்பாணம் மிருசுவில் றோ.க.த.க பாடசாலையின் பொங்கல் நிகழ்வு வித்தியாலய வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் க.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-159)

★ ★ ★ ★

சாவகச்சேரி, ஜன. 24
ய்ாழ்ப்பாணம் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சக்தியம்மன் தமிழ் வித்தியாலயத்தின் கால்கோள் விழா, பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக் கிழமை அதிபர் திருமதி சு. தயாபரன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், சிறப்புவிருந்தினர்களாக கல்விப்பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதிகளான கதிர்காமநாதன், சிவகுமார், கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.
ஆசியுரையினை பிரம்மசிறி ப.சனாதன சர்மா நிகழ்த்தினார்.
பாடசாலைச் சமூகத்தினால் புதுமுக மாணவர்களுக்கு பாதணிகளும், கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பினால் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

★ ★ ★ ★

## கால்கோள் விழாவும் சின்னம் சூட்டும் நிகழ்வும்



அளவெட்டி, ஜன.24
யாழ்ப்பாணம் அளவெட்டிதெற்குஅ.மி.த.க.பாடசாலையின் கால்கோள்விழாவும், சின்னம் சூட்டும் நிகழ்வும் டானியல்பூவர் மண்டபத்தில்கடந்தவியாழக்கிழமைஅதிபர்எம்.சி.சுதாகரன்தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக மக்கள் வங்கிஅளவெட்டிக் கிளையின் பதில் முகாமையாளர் திருமதி.சா.புருசோத்தமன், சிறப்புவிருந்தினர்களாக அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் வை.சின்னப்பு, அளவெட்டிதெற்கு.கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் மு.சந்திரசேகரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.
புதுமுக மாணவர்கள் மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டதுடன் விருந்தினர்களால் பரிசுப்பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ-36)







யாழ்ப்பாணம் புலோலிவடமேற்குகாந்தியூர் முன்பள்ளி சிறார்களின் பொங்கல் நிகழ்வு முன்பள்ளி முன்றலில் அண்மையில் இடம்பெற்றது.

## அரியாலை சனசமூக நிலையம்

இலவச தமிழ், ஆங்கில, சிங்கள மொழித்திறன் கற்கை நெறிகள்

[10 - 15 வயதுக்குட்பட்டவர்களுக்கானது]

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

காலம் : 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 6.00 மணி

இடம் : அரியாலை சனசமூக நிலையம், 185 புங்கன்குளம் வீதி, அரியாலை.

ஆசிரியர்கள்:

- ஆங்கிலம் - திரு. T.S. மயூரன்
- சிங்களம் - திரு. லக்கி தென்னக்கோன்
- தமிழ் - திருமதி M. பிரேமினி

குறிப்பு: மாணவர்களுக்கான மொழித்திறன் மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்.

076 652 8623, 077 907 3792

## விற்பனைக்கு

ஊர்க்கோழிக்குஞ்சுகள்

கிரிராஜ் இன ஒரு நாள் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

விலை - 75\=

(CS 22767)(04.17)

077 8536 808/077 0683 786

## விற்பனைக்கு

நிறை கூடிய

புறொயிலர்,கோழிகள்

மிகக் குறைந்த விலையில்

விற்பனைக்குண்டு.

077 282 4966

## கேள்வி அறிவித்தல் (IFB-2)
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரைபொறிக்கப்பட்ட மூடிய விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.

02. இது தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக இருந்தாலும் வடக்குமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்விகோரல் அறிவித்தலில் குறிப்பிட்ட தரத்துக்கு கேள்விகள் கிடைக்காதுவிடின் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்விகள் தகுதியற்றதாயின் அதற்கு மேற்பட்ட CIDA தரம் கருத்தி லெடுக்கப்படும்.

04. நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர். நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணத்தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விப்பத்திரங் களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஒரு வேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோ கிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 021 221 4633/ 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674, www.jaffna.dist.gov.lk Gmail address- jkprocurementunit@gmail.com

06. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய ( Nonrefundable fee ) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை யினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் (அறை இல – 42) செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 23.01.2019 தொடக்கம் 06.02.2019வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 02.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். முடிவுத்திகதி 07.02.2019 முற்பகல் 10.30 மணி ஆகும்.

07. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்விப்பிணைப் பொறுப்பு (Bid Security) கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 07.02.2019 மு.ப 10.30மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID).வேலை விபரத்தினையும் (Description of work) குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

08. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் (Bid Validity) கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களும். கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்வித்திறத்தல் திகதியிலிருந்து 120 நாட்களும் ஆகும்.

09. முற்கேள்விக் கூட்டம் ( Prebid Meeting) 29.01.2019. மு.ப 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

| S.No | Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Business Registration, Specialty | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | JF/PROC/School /04/03/2019 | CONSTRUCTION OF CLASS ROOM BUILDING (110'x25'x2') WITH WATER & SANITATION FACILITIES- J/PALALY NORTH RCTM SCHOOL | 20.92 | *C-6 or Above (Buildings)* | 220,000 | 06.06.2019 | 6,750 |
| 02 | JF/PROC/School /06/02/2019 | CONSTRUCTION OF CLASS ROOM BUILDING (90'x25'x2') WITH WATER & SANITATION FACILITIES- J/BALA GANOTHIYA VIDYALAYAM, THENMYLAI | 18.45 | *C-6 or Above (Buildings)* | 194,000 | 06.06.2019 | 6,250 |
| 03 | JF/PROC/School /02/01/2019 | CONSTRUCTION OF CLASS ROOM BUILDING (70'x25'x2') WITH WATER & SANITATION FACILITIES- J/VASAVILLAN EAST RCTM SCHOOL | 15.78 | *C-6 or Above (Buildings)* | 166,000 | 06.06.2019 | 5,500 |
| 04 | JF/PROC/School /05/02/2019 | CONSTRUCTION OF CLASS ROOM BUILDING (110'x25'x2') WITH WATER & SANITATION FACILITIES- J/KALAIMAGAL VIDYALAYAM, MYLIDDY | 18.50 | *C-6 or Above (Buildings)* | 194,500 | 06.06.2019 | 6,250 |

**நா.வேதநாயகன்,**
**அரசாங்கஅதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம**

(IN )(14.17)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 04 . 07 . 1927



இறப்பு 23 . 01 . 2019

## திருமதி கிருஷ்ணபிள்ளை செல்லம்மா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை செல்லம்மா நேற்று (23.01.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் பொன்னம்மா, செல்லையா, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் புவனேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் மைத்துனியும், யோகராஜா (காந்தா மோட்டர்ஸ்), ஆனந்தராஜா, செல்வராஜா, சற்குணராஜா, சற்குணதேவி, தேவராஜா (கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்), நாகராஜா மனோகரராஜா ஆகியோரின் அன்புத் தாயும், காந்தமலர், வசந்தலாதேவி, செல்வமலர், றஞ்சிதமலர், சூரியகாந்தன், சகுந்தலாதேவி, சத்தியானந்தசிவமலர், கோமதி ஆகியோரின் பாசமிகு மாமியும், கார்த்திக் - ஹர்சினி, சர்மிக், குபர்ணா - விக்னேஸ்வரன், அனித்தா - ஆனந்தகுமார், பிரகாஷ், பிரதீப், அகல்யா - அன்புராஜ், தர்சிகா - மயூரன், பானுசா - ரூபன், நிருஜன் - கானுஜா, பிரசன்னா - திவ்யா, அர்ச்சுனா, தீபிகா, சிவன்ஜா - பாலகிருஷ்ணன், சாருஜா - சகீலன், நிஷானுஜா - உதயகுமார், வித்தகன்., பிரியங்கா, வாசவன், ஓவியா ஆகியோரின் பேர்த்தியும், துர்க்கேஸ், சுஜாஸ், அக் ஷயன், அதிசயா, அநீஷ், அன்சிகா, மகிஷா, மாதுஷா, றுஷான், டிலான், பிரிணீஸ், றஜனிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்குளடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கி.தேவராசா**
**இல.1010/12B, காங்கேசன்துறை வீதி,**
**நாச்சிமார் கோயிலடி, தலையாழி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs 22794)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 047 0182**

## சின்னப்பு சிவலிங்கம்

**(கரன் விளையாட்டுக்கழகம் Bar உரிமையாளர் K.K.S.Road)**



அன்னை மடியில் 01.10.1942 ஆண்டவன் அடியில் 16.01.2019

கோணாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் (வேலணை), ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சிவலிங்கம் கடந்த (16.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - நாகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - அன்னை பூரணம் தம்பதிகளின் மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் மங்கையக்கரசி, சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பாலன், அன்னக்கிளி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நல்லையா, பறுவதம் மற்றும் செல்லத்துரை, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சிவகரன், காலஞ்சென்ற சுதாஸ்கரன் மற்றும் சசிகரன், பிரபாகரன், சிறிகரன் (பிரான்ஸ்), சரூபகரன், சக்திகரன், செல்வகரன் (பிரான்ஸ்), சுரேனுகா, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வமலர், ஜெயசுதா, சுவிதா, கவிதா (பிரான்ஸ்), கவிதா, வாசுகி, றஞ்சினி, யோகச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் மதன் - சிந்து, கரன் (பிரான்ஸ்), அனஸ், திவ்வியா, சானு, டிலக்சன், தனு, ஹரிஸ், கவிஸ் (பிரான்ஸ்), டூசா, நிது, டனு, சந்தியா, புவி, கரி (பிரான்ஸ்), மது, நிதுயா, கனு, கம்ஷா, கனியா, ரிஷி, சந்தோஸ், பிர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புக்குரிய பேரனும் நிகிஸ், அகிஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 4314 169, 077 9791 051**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பரவும் பௌத்தத்தை தடுக்க ஆளில்லை

முல்லைத்தீவு மாவட்டம் நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயப்பகுதியில் அடாத்தாக அமைக்கப்பட்ட புத்தர்சிலை நேற்று அவசர அவசரமாகப் பொலிஸ் பாதுகாப்புடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தொல்பொருள்திணைக்களமும் இதற்கு அனுசரணையாக இருந்துள்ளது.

இந்த இடம் வரலாற்று ஆய்வுகளுக்கு முக்கியமானது எனத் தொல்பொருள் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது. வழக்கம்போலவே இங்கு ஒரு பௌத்த ஆலயம் இருந்தது என்கிறகதையுடன் அந்த இடத்தில் புத்தர்சிலையை அடாத்தாக அமைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில் தமிழர்கள் சென்று வழிபாடு இயற்றுவதற்கும் தடையேற்படுத்தியிருக்கிறார். இதனால் அண்மையில் இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பானவழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு நகர்த்தல் பத்திரம் மூலம் இன்று விசாரணைக்கு வரும் நிலையில் அவசர அவசரமாகப் புத்தர்சிலை நேற்றுத்திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தினார்கள் என்று இந்த விகாரையின் விகாராதிபதி மீதும் கோயில் நிர்வாகிகள் மீதும் வழக்குத் தொடுத்த அதே பொலிஸாரின் பாதுகாப்புடன்தான் நேற்றையதினம் புத்தர் சிலை திறக்கப்பட்டது.

அதே நாளில் வவுனியா, இலுப்பையடிப் பகுதியிலுள்ள யாத்திரிகர் விடுதி நேற்று பௌத்த இளைஞர் சங்கம் என்கிற பெயரில் திறக்கப்பட்டுள்ளது. இந்த விடுதி பொது யாத்திரிகர் விடுதியாக இருந்தபோதும் பிக்குகளால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது. அந்தக்கட்டடம் மற்றும் அது அமைந்துள்ள காணியைத் தமக்கே உரிமையாக்கிக் கொள்ளும் நோக்கில் சில பிக்குகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் வவுனியா நகர சபையுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அது பிக்குகளுக்குச் சாதகமானதாக அமையவில்லை.

அந்தக் காணி பிக்குகளுக்கு உரியதுதான் என்பதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தால் அவற்றை நகரசபைக் கூட்டத்தில் ஆராய்ந்து பதிலளிக்க முடியும் என்று நகரசபையினரால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நடந்த மறுநாள் அந்த இடம் பௌத்த இளைஞர்கள் சங்க அலுவலகமாக மாறிவிட்டது. புதிய பெயர்ப்பலகையும் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது. இது வரையில் எந்தவொரு பெயர்ப்பலகையும் அங்கு இருக்கவில்லை.

இந்த இரு சம்பவங்களுமே வடக்கை பௌத்தமயப்படுத்தும் உள்நோக்கத்தின்படி மேற்கொள்ளப்பட்ட மிக அண்மைக்கால நடவடிக்கைகள் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. போர் முடிந்த பின்னரான காலத்தில் வடக்கில் இத்தகைய பௌத்தமயமாக்கம் மிகத்தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

பௌத்தத்துக்கு அரசமைப்பு ஊடாக வழங்கப்படும் முன்னுரிமையும் மதிப்புமே இத்தகைய அடாவடித்தனமான செய்கைகளில் பௌத்தம் சார் அமைப்புகளும் நபர்களும் ஈடுபடுவதற்கான உந்துதலாக இருக்கின்றது. இலங்கையின் அரசமைப்பு பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றது.

புதிய அரசமைப்பிலும்கூட அதில் எந்த மாற்றமும் இருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவும் திரும்பத்திரும்ப ஆணித்தரமாகச்சொல்லி வருகின்றனர். புதிய அரசமைப்பிலும் அப்படிப் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதில் தமக்குப் பிரச்சினை இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் அறிவித்திருந்தார்.

இலங்கை நாடு மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்பதில் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ள முடியாது என்று சொன்னவர்கள், இப்போது பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதில் பிரச்சினை இல்லை என்று தெரிவித்ததன் விளைவுதான் இப்போது தோன்றியிருப்பவை எல்லாம்.

ரணிலை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கான பேச்சுக்களில் பௌத்தமயமாக்கல் மற்றும் தொல்பொருள் திணைக்களம், வனவளத்திணைக்களம் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது போன்ற உறுதிமொழிகள் பெறப்பட்டதாகக் கூறப்பட்ட போதும், நடைமுறையில் அப்படி எதுவும் நடக்கவில்லை, நடப்பதில்லை என்பதற்கு இந்த இரு சம்பவங்களும் அண்மைய உதாரணம்.

இதுபோன்ற விளைவுகளைத் தவிர்ப்பதற்காகத்தான் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பது வழங்கப்படக்கூடாது என்று தமிழ் மக்கள் வலியுறுத்துகிறார்கள். அதனை மறுதலித்து நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் இப்போது ஏற்பட்டுள்ள விளைவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டியது.





கீதன்

# கேப்பாப்பிலவு மக்களின் நிலமீட்புப் போர் வெற்றிபெறுமா?

அரசியல் காய் நகர்த்தல்களில் முக்கியப் புள்ளியாக கேப்பாப்பிலவு மண் காணப்படுகின்றது. போர், போரின்போதான இடப்பெயர்வு உள்ளிட்ட காரணங்களால் தமது சொந்த மண்ணில் இருந்து வெளியேறிய மக்கள் இன்றும் 'சொந்த மண் வாழ்க்கை' என்ற ஒன்றைத் தொலைத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் தத்தமது இறுதிப் பயணங்களின்போது சொந்த மண் இடுகாடுகளையும், சேமக்காலைகளையும் தவறவிட்டுச் செல்கின்றமை துயரத்தி லும் பெரும்துயரே.

### அரச தலைவரின் அறிவிப்பு பொய்த்துப் போனது ஏன்?

கோப்பாப்பிலவு மண்மீட்புப் போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒருவரும் மனித நேய செயற்பாட்டாளருமான சந்திரலீலா இந்தப் போராட்டத்தில் தன்னை ஆர்வத்துடன் ஈடுபடுத்தி வருகிறார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனகூட கேப்பாப்பிலவு விடு விக்கப் ப டும் என்று வாக்குறுதி வழங்கிய போதிலும் இன்னமும் தமது காணிகள் விடுவிக்கப்படவில்லை என்று நொந்து கொள்கிறார் அவர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



வடக்கின் பல காணிகளை விடு விக்கிறோம் என்று அறிவித்துள்ள போதிலும் அதில் கோப்பாப்பிலவு கிராம மக்களின் காணிகள் எவையும் இல்லை என்பது மக்களுக்கு பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது. தங்களின் வாழ்வுக்காக எங்களின் பொருளாதார மண்ணினை படையினர் அபகரித்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த பல ஆண்டுகள் எங்கள் மண்ணில் உள்ள வளங்களை படையினரே அனுபவித்து வருகின்றார்கள். நாங்கள் நட்ட மரநிழலில் கூட நிக்கமுடியாதவர்களாகக் காணப்படுகின்றோம். பேச்சளவிலேயே காணிகளை விடுவிக்கிறோம் என்று சொல்கின்றார்கள். ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் பெரும் ஏமாற்று வித்தைகளை மேற்கொள்கின்றனர் அவர்கள்.

### இரண்டு ஆண்டுகளாக தொடரும் போராட்டம்

2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி எங்கள் பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி போராட்டத்தைத் தொடங்கியிருந்தோம். போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் நெருங்குகின்ற நிலையில் இன்னமும் கேப்பாப்பிலவுப் பகுதி முழுமையாக விடுவிக்கப்பட்ட தாக இல்லை. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கேப்பாப்பிலவு வீதி திறக்கப்பட்டு 111 ஏக்கர் விடுவிக்கப்பட்டு 38 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டன. அது ஒரு சிறுவெற்றியாக இருந்த போதிலும் எமது கோரிக்கை இன்னமும் தீர்க்கப்படவில்லை. மாவட்டச் செயலர் எதிர்வரும் 25ஆம் திகதிவரை கால அவகாசம் கோரியுள்ளார். அதன்போது ஒரு நல்லமுடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இல்லையேல் மீண்டும் பெரியளவில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம் என்கிறார் அவர்.

### இறுதிப் பயணம்கூட அந்நிய மண்ணிலே

கேப்பாப்பிலவு மக்கள் சிலர் தமது இறுதிப் பயணத்தின்போதுகூட அந்நிய மண்ணிலேயே அடைக்கலமாகிறார்கள். தமது சொந்த இடுகாடுகள், சேமக்காலைகள் என்பனகூட அவர்களுக்கு கிடைப்பதற்கு அரியவையாக மாறியுள்ளன. இந்த நிலமீட்புப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சந்திரலீலாவின் குடும்பமும் இதில் விதிவிலக்கல்ல. அவரது கணவன் கடந்த மாதம் 24ஆம் திகதி மறைந்த நிலையில் அவரின் சடலமும் அந்நிய மண்ணிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இது தொடர்பிலும் கண்ணீர் மல்க கருத்துப் பகிர்கிறார் சந்திரலீலா. "எமது நிலமீட்புப் போராட்டத்துக்கு எனது கணவன் வழங்கிய உதவிகள் சொல்லிவிட முடியாதவை. எப்போ எங்கள் சொந்த வீட்டுக்குச் செல்வோம் என்ற ஏக்கத்தவிப்பில் இருந்து நோய்வாய்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். கேப்பாப்பிலவு மண்ணில் அடக்கமாக வேண்டும் என்ற அவரின் இறுதி ஆசைகூட நிவர்த்தி செய்யப்படவில்லை. இறுதியாக அவர், எங்கள் நிலத்தினைக் கோரி நீதிமன்றில் வழக்குத் தொடரும் என்று அவர் என்னிடம் தெரிவித்து மறைந்தார். எனது கணவரின் விருப்பத்தினை நான் நிறைவேற்ற எண்ணியுள்ளேன்" என்றார் அவர்.


சந்திரலீலா மட்டுமல்ல இன்னும் ஏகப்பட்ட ஆறறிவுத் தனிமங்களின், அவர்கள் சார் குடும்பங்களின் நிலை இப்படித்தான் இருக்கிறது. இந்தப் போராட்டம் இரண்டு வருடத்தை முழுமை செய்யப்போகிறது. அதற்குள்ளாவது அவர்களுக்கு நற்செய்தி கிட்டட்டும். அதற்கு ஒட்டுமொத்தத் தமிழர்களின் அழுத்தங்கள் அரசுக்கு எதிராகக் குவியட்டும்.

# பாடசாலைகளில் போதை ஒழிப்பு காலத்துக்கு தகுந்த நடவடிக்கை

திருமதி ந.பாலேந்திரன்

இளையோர் முதல் பெரியவர் வரை போதைக்கு அடிமையாகித் தம் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டுத் திக்குத் தெரியாது தடுமாறி நிற்கின்றனர். இதனை மாற்றியமைத்து போதையற்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமை.

போதையற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பில் பாடசாலையின் பங்கு அளப்பெரியது. கல்வி அமைச்சு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக



கடந்த 21ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதி வரையான காலப்பகுதி போதையொழிப்பு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'போதைப்பொருள் ஒழிப்பை மாணவர்கள் மூலம் கற்றுக்கொள்ளுவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களையும் பெற்றோர்களையும் இலக்காகக்கொண்டு பாடசாலைகள் ஊடாகப் பல்வேறு வேலைத்திட்டங்களை கல்வியமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

இளம் சந்ததியின் எதிர்காலத்தை விழுங்கிக்கொண்டிருக்கும் போதை அரக்கனை விரட்டியடிக்கும் கல்வியமைச்சின் வேலைத்திட்டம் வரவேற்கத்தக்கதாகும். பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் போதைப் பழக்கத்தை விரட்டி அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மாணவர்கள் ஊடாக சமூகத்தை விழிப்படையச் செய்வதாக அதவாவது மாணவர்களை போதைக்கெதிரான பரப்புரைகளைச் சமூகத்துக்குக் கொண்டு செல்வதே இதன் நோக்கமாகும். பாடசாலைகளால் முன்னெடுக்கப்பட்டாலும் பெற்றோரினதும் பிள்ளைகளினதும் முழு ஒத்துழைப்பு இருந்தாலே வெற்றியடையும். பாடசாலை மாணவரின் எதிர்காலத்தோடு விளையாடுவதற்கு எவருக்கும் இடமளிக்கக்கூடாது. மது, புகைப்பொருள் பாவனையும் போதைப் பொருள்தான். இவற்றுக்கு அடிமையானவர்கள் தமக்குப் போதை தரக்கூடிய பொருள்களை பெறுவதற்கு பொய், களவு போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவர். பெற்றோர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். பிள்ளைகளின் நடத்தையில் மாற்றம் ஏற்படின் அவர்களின் நண்பர்கள் வட்டாரத்தை ஆராய வேண்டும். உடல் நிலையில் மாற்றம் தெரிகிறதா என்பதை அவதானிக்க வேண்டும். எல்லோரும் பிள்ளைகள் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்கள் தான். ஆனாலும் அவர்கள் சேரும் சூழல் அவர்களை மாற்றியமைத்து விடும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.




13 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை மிக அவதானமாக கவனிக்கவேண்டும். பிள்ளைகள் பாடசலையிலிருந்து புறப்பட்டாலும் நேரடியாக வீட்டுக்கு வருவதை உறுதிப்படுத்தவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகப் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் அதிகநேரம் உரையாடி அவர்கள் பற்றிய அனைத்து விடயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். பல மாணவர்கள் தடம்மாறிப் போவதற்கு பெற்றோர்களே காரணம். பெற்றோர்கள் பிள்ளைகளோடு அதிகநேரம் செலவிடுதில்லை. இயந்திரமயமாகி வரும் இந்த உலகில் தாமும் இயந்திர வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றனர். பிள்ளை கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து நினைத்ததை நிறைவேற்றும் குணத்தை வளர்த்து விடுகின்றனர்.

இன்றைய இளைஞர்கள் போதையால் ஏற்படும் விளைவுகள் பற்றி கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. வளர்ந்துவரும் நவீன கலாசாரத்தில் மதுபாவனையும் அங்கமாகிக் கொண்டுவருவது மனவேதனைக்குரிய விடயமாகும். வீடுகளிலும் ஏனைய இடங்களிலும் கொண்டாட்டங்களின்போது மதுசாரம் பயன்படுத்துவது இன்று நாகரீகமாக மாறி வருவது மனவேதனைக்குரிய விடயமாகும். இத்தகைய நாகரீகங்கள் எங்கள் கலாசாரத்தில் இருந்து களையப்பட வேண்டும். இளம்சமுதாயம், திரைப்படங்களில் வருவதைப்போல் மது பயன்படுத்துவது 'ஹீரோயிசம்' என்றுநினைத்துக்கொண்டிருக்கிறர்கள். இந்த மாயவலையில் இருந்து இளைஞர்கள் விடுபட வேண்டும். வாழ்க்கையின் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தெருக்களிலும் சந்துகளிலும் முடங்கிப் போதைக்கு அடிமையாகி வாழ்க்கையைச் சீரழிப்பதை விடுத்து தமது வளர்ச்சிக்கான அடுத்த பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இன்று உயர்கல்வி வாய்ப்புக்களும், தொழிற்கல்வி வாய்ப்புக்களும் எம்மைச் சுற்றிக் குவிந்துள்ளன. அவற்றைத் தேர்ந்தெடுத்து முன்னேறிச் செல்லவேண்டும்.

இளைஞர்கள் மட்டுமல்லாது குடும்பத் தலைவர்களும் போதைக்கு அடிமையாகி ஆரோக்கியம், சமூக மதிப்பு, தொழில், உறவு என்று எல்லாவற்றையும் தொலைத்துவிட்டுத் தடுமாறி நிற்கின்றனர். இவர்கள் வாழ்க்கை மட்டும் சீரழியவில்லை. இவர்களின் குழந்தைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுகிறது. அதுமட்டுமல்லாது போதைக்கு அடிமையானவர்களிடம் மனிதப்பண்பு மறைந்து மிருகத்தனம் அதிகரிக்கின்றது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்று சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதால் சமூகச் சீரழிவு ஏற்படுகின்றது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் தன் அரக்கத்தனத்துக்குள் அடிமைப்படுத்திச் சின்னா பின்னமாக்கும் போதை அரக்கனை ஒழிப்போம். பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் போதையொழிப்பு வாரத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி போதையற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.



## ஆசிரியருக்கான கடிதம்

### இளையோரை ஊக்குவிப்போம்

இன்று எமது பிரதேசங்களில் விளையாட்டுக் கழகங்கள், இளம் விவசாயிகள் கழகங்கள் எனப் பல அமைப்புக்கள் உருவாகி சமூகநலன்சார் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்துவரும் நிலை மனதுக்கு மகிழ்வைத் தருகிறது.

இடர் வேளைகளிலும் அதன் பின்னரும் உதவுதல், டெங்கு ஒழிப்பு, மர வளர்ப்பு, இயற்கை விவசாய முயற்சிகளை ஊக்குவித்தல், ஆன்மீகச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், குருதிக்கொடை, மருத்துவமுகாம் நடத்துதல், காலை இலக்கிய வளர்ச்சிக்கான முயற்சிகள், மாணவர்களுக்கானச் செயலமர்வுகள் எனப் பல நற்பணிகளை நோக்கி இந்த அமைப்புக்கள் நகர்ந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இளைஞர்களது வேகம் விவேகமாக வழிப்படுத்தப்படும்போது நாட்டுக்கும் இனத்துக்கும் நன்மை பயக்கும். இவ்வாறான அமைப்புக்களை அவற்றோடு தொடர்புடைய அரச அதிகாரிகள் நெறிப்படுத்துவதோடு தன்னார்வலர்கள், தனவந்தர்கள் தமது பங்களிப்புக்களை வழங்கி உற்சாகப்படுத்துதல் பயனுள்ள செயலாகும்.

காரைநகர் கமநல சேவை நிலைய எல்லைக்கு உட்பட்டு காரை இளம் விவசாயிகள் கழகம் ஆரம்பிக்கப்பட்டு அந்தப்பிரதேச இளையோரால் இயற்கை வழி விவசாய முயற்சிகள், மரவளர்ப்பு முயற்சிகள் இயற்கைப் பசளை உற்பத்திக்கான முன்னெடுப்புக்கள், வீட்டுத்தோட்ட ஊக்குவிப்புக்கள், சாடிகளில் மரக்கறிப் பயிர் வளர்ப்பு போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்படுகிறன. இந்தப் பெறுமதிமிக்க முயற்சிகள் ஆரம்பநிலையில் இருப்பதால் அவை முழுமைபெற பொறுப்புள்ள அனைவரும் ஆதரவுக்கரம் நீட்டி ஊக்குவிக்கவேண்டும்.

யோகா, காரைநகர்.


**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தாங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# துஷ்டருக்கு அறிவுரை கூறக் கூடாது



ஒரு காட்டில் ஒரு நாள் அடை மழை பெய்துக் கொண்டிருந்தது. அப்போது அந்தக் காட்டில் இருந்த ஒரு குரங்கு மழையில் நனைந்து நடுங்கியவாறு ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றது.
அந்தமரத்தில்இருந்தபறவைஒன்றுகூடுகட்டிதன்குஞ்சுகளுடன் மழைக்குநனையாதுபாதுகாப்பாகஉட்கார்ந்துகொண்டிருந்தது. மரத்தடியில் குரங்கு நனைந்து நடுங்குவதைப் பார்த்ததும் பறவைக்கு குரங்கு மீது இரக்கம் வந்தது. மனம் பொறுக்காமல் ' குரங்காரே..என்னைப்பாரும்...வெய்யில் மழையிலிருந்து என்னையும் என் குஞ்சுகளையும் காப்பாற்றிக்கொள்ள கூடு கட்டியிருக்கிறேன். அதனால் தான் இந்த மழையிலும் நாங்கள் சந்தோஷமாக இருக்கிறறோம். நீரும் அப்படி ஒரு பாதுகாப்பான கூடுசெய்திருக்கலாமே. கூடுஇருந்தால்நீர்இப்படிநனையமாட்டீர் அல்லவா?என்றுபுத்திசொன்னது. இதனைக்கேட்டகுரங்காருக்கு கோபம்சீறிக்கொண்டுவந்தது. உனைவிடநான்எவ்வளவுவல்லுவானவன். எனக்கு நீ புத்தி சொல்கிறாயா?....
இப்போ உன்னையும்உன் குஞ்சுகளையும்என்ன செய்கிறேன் பார்' என மரத்தில் விடுவிடு என ஏறி பறவையின் கூட்டை பிய்த்து எறிந்தது.
பறவைக்கு அப்போதுதான் புரிந்தது' அறிவுரைகளைக்கூட..... அதைக்கேட்டு நடப்பவர்களுக்குத்தான் சொல்லவேண்டும் என்று. அறிவுரை கூறினால் அது தனக்கே ஆபத்தாக முடியும் என்ற உண்மையை புரிந்து கொண்டது.




## சந்திரகிரகணம் என்பது என்ன?

சூரியனால் பூமிக்கு நிழல் தோன்றுகிறது. அந்த நிழல் சந்திரன் மீது விழுகிறது. நீங்கள் டியூப் லைட்டுக்கு நேர் கீழே உட்கார்ந்து பாடம் படிக்க முற்பட்டால் உங்கள் தலையின் நிழல் புத்தகத்தின் மீது விழும். அதுபோல பூமியின் நிழலானது சந்திரன் மீது விழுகிறது. சந்திரன் மீது பூமியின் நிழல் விழுவது ஏன்? சந்திரன் பூமியைச் சுற்றிச் சுற்றி வருகிறது.
பௌர்ணமி அன்று சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை கிட்டதட்ட ஒரே கோட்டின் மீது அமைகின்றன. அப்போது பூமியின் ஒரு புறத்தில் சூரியனும் மறு புறத்தில் சந்திரனும் இருக்கும். சூரியனின் ஒளி சந்திரன் மீது விழும்போது பூமியில் இரவாக உள்ள பகுதிகளில் இருப்போருக்குச் சந்திரன் பவுர்ணமி நிலவாகத் தெரிகிறது.
சந்திரனுக்கு சுய ஒளி கிடையாது. சந்திரன் மீது விழும் சூரிய ஒளியைச் சந்திரன் பிரதிபலிக்கிறது. இதுவே நமக்கு நிலவாகத் தெரிகிறது.
ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் பூமியானது சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே அமைந்திருக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் பூமியின் நிழல் சந்திரன் மீது விழ, சந்திர கிரகணம் ஏற்பட வேண்டுமே? ஆனால் அப்படி ஏற்படுவதில்லை. சந்திரனின் சுற்றுப்பாதைச் சாய்வாக இருப்பதே அதற்குக் காரணம்.
அதாவது பூமியின் நிழல் விழாத வகையில் சந்திரன் அந்த நிழல் பகுதிக்கு மேலே அமைந்திருக்கும். அல்லது அந்த நிழல் பகுதிக்குக் கீழே இருக்கும். எப்போதாவது சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும் பவுர்ணமி அன்று ஒரே நேர்கோட்டில் அமைந்திருக்கும். அப்போது பூமியின்நிழல்சந்திரன்மீதுவிழுவதன்காரணமாகச்சந்திர கிரகணம்ஏற்படுகிறது. அந்தநிழல்பகுதியின்நட்டநடுவில்சந்திரன் இருக்கநேர்ந்தால்பூமியின்நிழல்சந்திரனைமுழுவதுமாகமறைக்கிறது. அது முழுச் சந்திர கிரகணம். அப்படியின்றி பூமியின் நிழல் சந்திரனின் ஒரு பகுதி மீது மட்டும் விழலாம். அது பகுதி சந்திர கிரகணம்.

## வழிகாட்டுவோம்



## வர்ணம் தீட்டுவோம்



## விலங்குகளின் தூக்கம்!

- பாம்புகளுக்குக் கண்ணில் இமைகள் இல்லை. அசையாது சுருண்டு அவை குட்டித் தூக்கம் போடும்போதும், கண்கள் திறந்து இருப்பது போலவே தெரியும். உண்மையில், உறக்கத்தின்போது பாம்புக்குத் தனதுகண்ணில்உள்ளரெட்டினாபகுதியை மட்டும் சிறிய சவ்வினால் மூடிக்கொள்ளும் வசதி உண்டு.
- காண்டாமிருகம் மனிதர்களைப்போலவே தினசரி 8 மணி நேரம் தூங்கும். ஆழ்ந்த உறக்கத்தில்கூட, தனது விறைத்த காதுகள் உதவியுடன் சிறு சத்தத்தையும் உணர்ந்து உஷாராகும் இயல்பு இதற்கு உண்டு.
- மிகவும் வேகமாக ஓடக்கூடிய சிறுத்தை, மரத்தின் உயரமான கிளையிலும் உடலை சாய்த்துத் தூங்கும். அப்படித் தூங்கும் போதும் கிளையிலிருந்து சிறுத்தையின் உடல் சரியாது.
- உலகின் சோம்பேறி விலங்கு எனப் பெயர் பெற்றது சோம்பல் கரடி (sloth bear). இது தினமும் குறைந்தது 15 மணிநேரம் தூக்கத்தில் இருக்கும். அதன் சோம்பலான சுபாவத்தினாலும் செயல்பாடுகளாலும் விழித்திருக்கும் மிச்சநேரத்திலும் தூங்குவதுபோலவே தோற்றமளிக்கும்.
- உயரமான விலங்கான ஒட்டகச்சிவிங்கி அவ்வப்போது 5 அல்லது 10 நிமிடங்களாக தினமும் அதிகபட்சமாக 1 அல்லது 2 மணி நேரம் மட்டுமே தூங்கும்.

## நமீபியா





1. தெற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடு.
2. 1990இல் தென்னாப்பிரிக்காவிடமிருந்து விடுதலை பெற்றது.
3. சிறுத்தைகள் அதிகம் இருக்கும் 6 ஆப்பிரிக்க நாடுகளில் இதுவும் ஒன்று.
4. 'துணிச்சல் மிக்க நாடு' என்ற பெயரும் இதுக்கு உண்டு.
5. வைரம், செம்பு, யுரேனியம், தங்கம், காரீயம், லித்தியம் போன்றவை இந்த நாட்டின் இயற்கை வளங்கள்.
6. இதன் தலைநகரம் விந்தோக்.
7. அரசியல் அமைப்புச் சட்டத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பை அறிமுகப்படுத்திய முதல் நாடு இதுதான்.
8. இந்தநாட்டின்தேசியவிலங்கு ஆப்பிரிக்க இரலை (Oryx).
9. இங்குள்ள மிக உயரமான மலை பிராண்ட்பர்க்.
10. உலகின் பழமையான பாலைவனங்களில் ஒன்றான நமீப் பாலைவனத்தின் பெயரைத்தான் இந்த நாட்டுக்கும் வைத்திருக்கிறார்கள்.




சைனாவின் முதல்தர ஒட்டு இயந்திரங்கள்

RILAND




யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JITF 2019
ஜனவரி JANUARY
25TH | 26TH | 27TH
10.00AM - 8.00PM
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
MUNICIPAL GROUND - JAFFNA

SENTAB
Consistent Excellence
SENTAB TRADING (PVT) LTD
சென்டெப் டிரேடிங் (பிரைவேட்)லிமிடெட்
326/2, Sirimangala Watte, Mampe, Piliyandala.
Tel : 0112-708484 | Fax: 0112-708290
E-mail : trading@sentab.lk
Web : www.sentab.lk
Contact : 0768258737 | 0768258740 | 0768258738

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21 . 02 . 1953

மறைவு
24 . 01 . 2012

## அமரர் கனகசபை விஜயரத்தினம் (ஞானம்)

(உரிமையாளர் - கண்ணன் பெயின்ற் ஞானம் பெயினற்)

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து - எங்கள்
ஆசைக் கனவுகளை நிறைவேற்றிய - எங்கள்
அன்புத் தெய்வமே - அப்பா
ஆண்டேழு - ஆனதே
ஆறவில்லை - எம்துயரம் - நீங்காது
உங்கள் நினைவுகள் எமைவிட்டு
என்றென்றும் இறைவனடியில் - இனிதே
இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

"விஜய் மகால்"
பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

வாருங்கள்!
நாளை
தொடங்குகிறது
10TH EDITION
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
வடக்கிற்கான உங்கள் நுழைவாயில்

FOOD & BEVERAGE
CONSTRUCTION
AUTOMOBILE
ICT
AGRICULTURE
APPAREL

25 26 27
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna

JITF 2019

www.jitf.lk   jitf.lk

PLATINUM SPONSOR: INSEE CEMENT
GOLD SPONSOR: Browns — A Heritage of Trust
ORGANIZED BY: LECS — LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY — UNITY IS STRENGTH
SUPPORTED BY: SRI LANKA CONVENTION BUREAU
ENDORSED BY: NCE

OFFICIAL PARTNERS
HEALTH CARE: ASIRI HEALTH
FOOD: Ruhunu
BANKING: PEOPLE'S BANK
TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel
FERTILITY CARE: NINEWELLS
ROOFING: iROOF
ONLINE MEDIA: MC reatives
PRINT MEDIA
RADIO
ELECTRONIC MEDIA: DAN

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்
சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்
172ஆவது இசை ஆராதனை விழா
அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம்: 25.01.2019 வெள்ளிக்கிழமை பி.ப. 5.00 மணி
நிகழ்ச்சி நிரல்
★ ஈழத்துப் பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கும் 'மங்கள இசை'
★ ஈழத்துப் பிரபல கர்நாடக இசைக்கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள் வழங்கும் 'இசை ஆராதனை'
குறிப்பு :
நிகழ்வுக்கான இலவச போக்குரத்துச் சேவை கலாமன்ற யாழ். கிளையில் இருந்து பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல. 428, K.K.S. வீதி, வண்ணை சிவன்கோவில் அருகாமை யாழ்ப்பாணம்)
மங்கள இசை, இசை ஆராதனையில் பங்குகொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்துகொள்ளலாம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 04 . 1983

மறைவு 04 . 02 . 2018

## சிவராசா சுஜீவன் (ரகு)

மீளாத்துயில் கொண்டு எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு - சென்று
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை - எம் துயரம்
நீங்காத நினைவோடு உன்நிழல் ! உன்முகம் !!
உன் குரல் !!! ஒருமுறை காண ஏங்கித் தவிக்கின்றோம்
ஓராண்டு ஆனாலும் ஓர் ஜென்மம் ஆனாலும்
எம்மை விட்டு நீங்காது - உன் நினைவு
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

செல்லையா பாடசாலை வீதி,
வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(NEC 917)(4.17)

## மரண அறிவித்தல்

### இராமசாமி சுப்பிரமணியம் (மில் மணியம்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சுப்பிரமணியம் நேற்று (23.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் இராசரத்தினம் - பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும் விமலேஸ்வரன் (விம்மி), வினேஸ்வரன் (வினோ) ஆகியோரின் தந்தையாரும் மாலினி, மதுரா ஆகியோரின் மாமனாரும் ஜெகப்பிரியன், பிரியதர்சன், அபிராமி, சுலக்‌ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்றவர்களான மருதையா, அன்னக்கிளி மற்றும் சகாதேவன், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவயோகம், சிவகமலா, ராஜேஸ்வரி, பெருமாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.T.S. ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 364 4750, 076 302 4294

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.01.2019 | வெற்றி வாரம் 2441 | வர்ணம் பச்சை
கன்னி
வெற்றி இலக்கங்கள் 04 31 37 39
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 82, 41, 094 /=
2019.01.24 ம் திகதி வியாழக் கிழமை மண்நிறம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 911
சீட்டிழுப்பு திகதி 2019.01.21 திங்கட்கிழமை
C 10 29 43 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,322,624/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2019.01.24ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3139 திகதி:2019.01.23 புதன்கிழமை
SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 12 65 66 68 D
போனஸ் இலக்கம் 03
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 60,749,065/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 504
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.01.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,069,840/-
வெற்றி இலக்கங்கள் 17 21 47 69
ஆங்கில எழுத்து N
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 215
சீட்டிழுப்பு திகதி 23.01.2019 நீலம்
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 35 49 63
விதி எண் 07
எதிர்வரும் சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,751 548 /=
2019.01.26 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை இராசரத்தினம்



யாழ். பன்னாலையை பிறப்பிடமாகவும் புகையிரதநிலையவீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளைஇராசரத்தினம் நேற்று (23.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - முத்துப்பிள்ளைதம்பதியினரின் அன்பு மகனும் கடந்த (20.01.2019) இல் காலமான பரமேஸ்வரியின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னத்துரை - வள்ளிஅம்மாள், திருவாதவூரா் ஆகியோரின் அன்பு சகோதரரும் இராசரத்தினம் இராஜேஸ்வரனின்(உதவி பொறியியலாளர் - Srilanka Telecom) அன்புத்தந்தையாரும் பிரதாயினியின் (SDB Bank-Chunnakam) அன்பு மாமனும் திருக்குமரன், ஜெயக்குமாரி, ஆகியோரின் பெரிய தந்தையும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் இராயேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஸ்ணவி, தஷ்விகா, விசாகப்பிரியன், விசாகநந்தினி, மதி, Dr.ரேகா, Dr.ரேனுகா, கஜனன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 28, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்.

தகவல்:
இராஜேஸ்வரன் (மகன்)
071 536 4921

## அரசில்...

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் செயலர் டக்ளஸ் தேவானந்தா. 1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைக்கு என்ன நடந்தது? என்று நீதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள பதிலளித்து தெரிவித்ததாவது:



டக்ளஸ் தேவானந்தா 1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். அவர், 1994ஆம் ஆண்டு அரசில் உறுப்பினராக இருந்தார். அப்போதே இந்த விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம் என்பதையும் அவருக்கு நாம் நினைவுபடுத்த வேண்டும் - என்றார். (ம-5)

## பெருந்தோட்டத்...

கின்ற நிலையில் மேற்படி விவகாரம் தொடர்பில் இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் இடம்பெறவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைக்க வுள்ளார். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான கூட்டு ஒப்பந்த விவகாரம் தொடர்பிலாள பல பேச்சுக்கள் முதலாளிமார் சம்மேளத்துக்கும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்றன.

எனினும் அதில் எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. இந்த நிலையில் நாளொன்றுக்கான அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு பல சிவில் அமைப்புகள் அழுத்தம் கொடுத்து வருகின்ற நிலையில் இன்றையதினம் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெறவுள்ளது. தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றையதினம் நாடெங்கிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிட த்தக்கது. (ம-22)

## நாடாளு மன்றை...

மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையில் தயாரிக்கப்படவுள்ள அரசமைப்பை எதிர்க்கிறேன். அரசமைப்புக்கு எதிர்ப்பை வெளியிடுதல் என்பது அனைத்துத் திருத்தங்களையும் எதிர்ப்பதாகாது. தற்போதைய அரசமைப்பில் விரிவான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்வதுடன், அரசியல் கட்சிகளின் பிரிவினைவாத அல்லது கூட்டு ஆட்சி முறையிலான ஆட்சியை எதிர்க்கிறோம். 19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக மட்டும் எத்தனை பெரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. பிரதேச சமூகமொன்று தேசிய ரீதியில் செயற்படுவதற்கான அவகாசம் இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார் அவர். (ம-22)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

Applications are invited by me up to 15th February, 2019 from suitably qualified persons for the following posts.

**1. TECHNICAL OFFICER (ICT) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Science Subjects in the Science Stream; Subject combination/s to be decided by the Faculty concerned upon the recommendation of the Department.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of information Communication and Multimedia Technology/Information and Communication Technology/ Information Technology or Equivalent.

* Preference will be given for who have work experience in ICT

**2. TECHNICAL OFFICER (CIVIL) GRADE III**

**Qualifications:**

Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Physical Science Stream.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Civil Engineering or Equivalent.

**3. TECHNICAL OFFICER (ELECTRICAL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Physical Science Stream.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Electrical Engineering or Equivalent.

**4. TECHNICAL OFFICER (MECHANICAL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Physical Science Stream.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Mechanical Engineering or Equivalent.

**5. TECHNICAL OFFICER (CHEMICAL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Science Stream.

**AND**

(ii) (a) Diploma in **Medical Laboratory Technology**

**OR**

(b) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Chemistry/ Chemical Engineering.

**Note:** Acceptability of the qualification mentioned in above (ii) (b) shall be judged by the Faculty Concerned.

**Salary Scale:** UMT 1(IIIA) Rs.31625-7x300:10x355-37275 p.m. as at 01.01.2020

**Selection By :** Written and/or practical test and an interview

**Age Limit :** Age should be not less than 18 years and not more than 45 years.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form and particulars for the above posts can be downloaded only from the University website www.jfn.ac.lk. Applicants should deposit Rs.100 (for each post) at any branch of the People's Bank in favour of "University of Jaffna" Account No. **"162-1-001-6-0000880"**. Applications must accompany a copy of the bank deposit slip and copies of relevant documents.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar/NonAcademic Establishments of this University on or before 15.02.2019.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
23.01.2019

## வாடகைக்குண்டு

K.K.S வீதி யாழ் சிவன் வடக்கு வீதியில் சிறிய கடை ஒன்றும் பெரிய கடை ஒன்றும் வாடகைக்கு உண்டு. (CS 22793) (14.17)

**076 306 8360/ 077 523 5212**

## வேலையாள்கள் தேவை

194, யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

மேலதிக தொடர்புக்கு - 076 640 3388

## தவறிவிட்டது

அருணகிரிநாதன் சங்கரன் ஆகிய எனது பேர்ஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து நல்லூர் செல்லும்வழியில் தவறவிட்டுள்ளேன். I.C. Licence, ATM Cards, பணம், Vehicle Insurance, Tax என்பவற்றை தவறவிட்டுள்ளேன். தகவல் அறிந்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

Dutch Road, Moolai, Chulipuram 077 106 0314

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 11 . 1933

மறைவு 03 . 02 . 2018

**செல்லத்துரை மனோன்மணி**


திதி– சங்கடகரசதுர்த்தி (24.01.2019)

தாயே நீ எங்கு சென்றாய்
ஆறவில்லை என் மனம்
அம்மம்மா என்றழைக்க நீ இல்லையே
ஒருமுறை எம் வதனம்காண வாராயோ!

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 02 . 08 . 1940

ஆண்டவன் அடியில் 03 . 02 . 2018

அமரர்

**கோவிந்தபிள்ளை இரத்தினசிங்கம்**

(முன்னாள் நடத்துனர் *CTB* பருத்தித்துறை)

பூமாதர் நோகாத நடை
மெல்லிய புன்னகை
தெளிந்த ஞானம்
அன்பு தெறிக்கும் பாசம்
அன்னையின் பொறுமை
தளையக்கட்டிய வேட்டி
தளர்வான பேச்சு
அத்தான் எனும் அயலவர் அழைப்பு
தீராத உழைப்பு தீங்கில்லாத வாழ்க்கை
நேசம் கொண்ட சுற்றம்
பாசம் கொண்ட உறவுகள்
எல்லாம் விட்டு
கப்பல் ஏறிவந்த நாகதம்பிரானின்
கழல் சென்றீர்களோ

புலோப்பளை மேற்கு
பளை

பிரிவுத்துயருடன்
குடும்பத்தினர்.

## விக்னேஸ்வரன்...

அவருக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்காது. அவர் எங்களுக்கு ஒரு சவாலே அல்லர் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன். 'ஹிரு' தொலைக்காட்சி விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"வடக்கு மாகாண சபை முறையாக இயங்கவில்லை. அதனை நான் ஏற்கிறேன். இனி அதனை நாங்கள் சரியாகக் கையாள்வோம். விடுதலைப் புலிகளை தோல்வியடையச் செய்கின்றோம் என்ற பெயரில் மகிந்த அரசால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்டனர். தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்சவை வெறுப்பதற்கு அதுவும் காரணம். விடுதலைப்புலிகள் 'பயங்கரவாதிகள்' என்றால் அவர்களை அழிக்க அரசு நடந்துகொண்ட முறையும் ஒருவித பயங்கரவாதம் தான்.

புதிய அரசமைப்பு வராது. நீங்கள் வீணாக நம்பிக் கொண்டிருக்கிறீர்கள் என்று எங்கள் தரப்பில் என் மீது விமர்சனங்கள் செய்கின்றனர். ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வந்தாக வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். ஒற்றையாட்சி என்றால் ஓர் இடத்தில் ஆட்சி நிர்வாகம் இருக்கும். அப்படியானால் எப்படி நீங்கள் அதிகாரத்தைப் பகிர்வீர்கள்? நாட்டைப் பிரிக்காமல் ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிருங்கள். அதையே கூறுகின்றோம். ஒருமித்த நாடு அல்லது ஒன்றுபட்ட நாடு என்று கூறலாம் என்று நான் யோசனை முன்மொழிந்தேன். அதில் ஒருமித்த நாடு என்று குறிப்பிடுவது நல்லதெனத் தீர்மானித்தார்கள்.

அரசமைப்பு என்பது சமூக ஒப்பந்தம். அதனால்தான் அனைவரினதும் இணக்கம் இதற்குத் தேவையெனக் கருதப்படுகிறது. இவ்வளவு பிரச்சினைகள் உயிரிழப்புக்கள், சேதங்களுக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மக்கள் இன்னமும் ஏன் கூட்டு ஆட்சிக் கட்சிக்கு (இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு) ஆதரவளிக்கின்றார்கள்? அவர்களுக்கு அரசியல் தீர்வு தேவை. புதிய அரசமைப்பை எங்களால் செய்ய முடியாமல் போனால் எமக்கெதிரான சக்திகள் தலைதூக்கும்" என்றார். (ம-22)

## வடக்கின்...

பெறவுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற 9ஆவது பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியை 60 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் பார்வையிட்டனர். இந்த வருடமும் 60 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை எதிர்பார்க்கின்றோம். கண்காட்சி நடைபெறும் 3 தினங்களும் பாடசாலை மாணவர்கள் இலவசமாகக் கண்காட்சிக் கூடத்தைப் பார்வையிட முடியும்.

தொழில் வழிகாட்டி சேவைகள், சிறப்பு உணவு வகைகள், மருத்து ஆலோசனைகள், கட்டட நிர்மாணப் பொருள்கள், அழகுக்கலை, அழகு சாதனப் பொருள்கள், உள்ளூர் உற்பத்திகள் எனப் பல்வேறு உற்பத்திகளும் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுகள் நாளை (25) காலை 9.30 மணியளவில், யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டு, யாழ். மாநகர சபை வளாகத்தில் கண்காட்சிக் கூடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன - என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக, யாழ். மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட் கலந்து கொள்ளவுள்ளார். (ம-106)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்
### சதாசிவம் தெட்சணாமூர்த்தி
(ஓய்வுபெற்ற முதலியார்)



தோற்றம் 16.08.1947 | மறைவு 30.01.2013

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!

திதி - சங்கடஹரசதுர்த்தி

விண்ணுலகம் சென்று இன்று ஆறு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

கஜபதி செட்டிலேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி - சிவயோகமணி

(CS 22782)(14.17)

## The Vembadi Girls' High School Old Girls' Association - Jaffna

The Annual General Meeting of the OGA and get-together will be held on 24th February 2019, Sunday at 10am. Lunch Tickets are available at the Office of the OGA - Jaffna from 1st February 2019.

Any Suggestions to the amendment to the Constitution should be submitted to the secretary, Office of the OGA –Jaffna, Vembadi Girls High School on or before 08th February 2019.

All the old girls of the school are requested to grace the function.

**Executive Committee**

(IN 9182) (14.17)

## வடக்கின் மிகப்பாரிய நுகர்வோர் வர்த்தகக் கண்காட்சியில் உச்சத்தில் திகழும் வர்த்தகநாமங்கள் - 10 ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2019!

JITF

பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி, வடக்கிற்கான நுழைவாயிலாக அமையப்பெற்றுள்ள யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வானது இலங்கையில் அபிமானத்தை வென்றுள்ள வர்த்தகநாமங்கள் மற்றும் சேவைகள் பலவற்றை ஒன்றாகக் கொண்டமைந்த, தனித்துவமான ஒரு நிகழ்வாகும். விற்பனை மற்றும் கண்காட்சியில் இடம்பெறுகின்ற பெருந்தொகையான உற்பத்திகள், இலங்கையில் வளர்ச்சிவாய்ப்புக்களை இன்னமும் முழுமையாக அடையப்பெறாத சந்தைகளில் ஒன்றில் காலடியெடுத்து வைப்பதற்கான வாய்ப்பினை இதனுடன் தொடர்புபட்ட சகல தரப்பினருக்கும் வழங்குகின்றன.

10 ஆவது தடவையாக இடம்பெறுகின்ற யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, 2019 ஜனவரி 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ***வடக்கிற்கான நுழைவாயில் - (The Gateway to the North)*** என்ற பொருத்தமான பெயருடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஒன்றுகூடும் வகையில் ஒரு சூடுபிடிக்கும் சந்தையாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. துரிதமாக அபிவிருத்தி கண்டு வருகின்ற வட தீபகற்பத்தில் அனைத்து வர்த்தகங்களையும் ஒரே இடத்திலேயே கொண்டுள்ள ஒரு நிகழ்வாக இது திகழ்வதுடன், பரந்துபட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளை உள்ளடக்கியவாறு, 350 வரையான கண்காட்சிக்கூடங்கள் இவ்வர்த்தகக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

வருடாந்தம் ஜனவரி மாதத்தில் இந்நிகழ்வினை ஏற்பாடு செய்து நிர்வகித்து வருகின்ற Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd (LECS) நிறுவனம், யாழ் மாநகர சபை, இலங்கை மாநாட்டு அலுவலகம் மற்றும் சர்வதேச வர்த்தக மன்றம் ஆகிய ஸ்தாபனங்களின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்து வருகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றின் அங்கீகாரத்தையும் இது பெற்றுள்ளது.

பல்வேறு உற்பத்திகளைக் கொண்டுள்ள இவ்வர்த்தகக் கண்காட்சியானது வடக்கிற்கு தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்க விரும்புகின்ற நிறுவனங்களுக்கான ***நிகழ்வாக*** கருதப்படுவதுடன், இப்பிராந்தியத்திலுள்ள வர்த்தக நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை பிராந்தியத்திற்கு வெளியில் விஸ்தரிப்பதற்கும், இத்தொழிற்துறையிலுள்ள பாரிய நிறுவனங்களுடன் ஒன்றாக இணைந்து பணியாற்றும் வாய்ப்பினையும் வழங்குகின்றது.

ஆண்டுதோறும் 60,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்க்கின்ற இந்நிகழ்வில் 2,500 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு தள்ளுபடிகள் கிடைக்கப்பெறுவதுடன், அனைத்து வயதுப் பிரிவினர்களையும் பரவசப்படுத்துகின்ற பொழுதுபோக்கு மற்றும் ஏனைய வாய்ப்புக்களைக் கொண்ட அம்சங்களும் இடம்பெறுகின்றன.

தொழில் வழிகாட்டல் சேவைகள், விசேட உணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்து உபகரணங்கள், கட்டட நிர்மாண பொருட்கள் மற்றும் சாதனங்கள், அழகு சாதன மற்றும் அழகுக்கலை சேவைகள், சிறுவர்களிற்கான விசேட நிகழ்வுகள், கல்வி ஆலோசனைகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் என்பன இக்கண்காட்சியில் இடம்பெறும் பிரதான அம்சங்களாகும்.

ஒவ்வொரு மணித்தியாலத்திலும் இடம்பெறும் அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பு ஆகிய அம்சங்களும் அடங்கியுள்ளன.

இந்நிகழ்விற்கு கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்றுள்ள பலத்த வரவேற்பு மற்றும் எதிர்பாராத வளர்ச்சி தொடர்பில் LECS நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஆசிம் முக்தார் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளதுடன், வடக்கில் உள்ள வர்த்தக வாய்ப்புக்களை நேரடியாகக் கண்டுகொள்ளும் வாய்ப்பினையும் வர்த்தகர்கள் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார். நாம் முதற்தடவையாக இக்கண்காட்சியை ஒழுங்கு செய்ய சமயத்தில் எம்முடன் இணைந்து கொண்ட பல வர்த்தகர்கள் தமது உற்பத்திகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தமையால் முதல் நாளிலேயே தமது கண்காட்சிக்கூடங்களை மூட வேண்டி ஏற்பட்டது. கடந்த காலங்களில் வடக்கில் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியை நாம் கண்கூடாகக் கண்டுள்ளதுடன், இத்தகைய நிகழ்வுகளின் மூலமாக குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு வாய்ப்புக்களை தோற்றுவிப்பதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளோம், என்று குறிப்பிட்டார்.

**யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2019 நிகழ்வின் அனுசரணையாளர்கள்:**

- Platinum Sponsor - Siam City Cement (Lanka) Ltd
- Gold Sponsor - Brown and Company PLC
- Official Health Care Partner - Asiri Health
- Official Food Partner - Ruhunu Foods (Pvt) Ltd.,
- Official Bank Partner - Peoples Bank
- Official Telecommunication Partner - Mobitel (Pvt) Ltd.
- Official Roofing Partner-Idea Group Limited
- Official Fertility Care Partner- Ninewells Hospital (Pvt) Ltd
- Official Radio Partner Sooriyan FM
- Official Online Media Partner- Multi Creative Solutions
- Official Electronic Media Partner-DAN TV
- Official Tamil Print Media Partner-Uthayan News Paper

மேலதிக விபரங்களுக்கான தொடர்புகளுக்கு:
**Lanka Exhibition and Conference Services (Pvt) Ltd**
தொ.பே: +94 11 2390560-2 தொலைநகல்: +94 11 2390563
மின்னஞ்சல்: yamuna@saexhibitions.com


(C 32367/15/17)

## 5th YEAR REMEMBRANCE

**Late Rev.Dr.Edward Jebamohan Jebaratnam**

(Former Vicar, St.Mary's Church, Kopay & Senior Lecturer, University of Jaffna)

**Born** 25 . 01 . 1960



**Rest** 24 . 01 . 2014

Five Years have passed since you left us to join the Father in heaven. Though your absence is felt in every turn of our lives, the sweet memories of your life will remain with us forever.

"We thank our God upon every remembrance of you"
*(Philippians 1:3)*

Sadly missed and fondly remembered by,
Suneetha & Shalomi
Jebaratnam.

(cs 22786) (13.17)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் இந்திரகுமார் (பெரியதம்பி)



யாழ். தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் La Courneuve ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இந்திரகுமார் 17.01.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மகனும், நிசாந்தன், சஞ்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வமலர், ரஞ்சிதமலர், இதயகுமார், செல்வகுமார், துசி, சுகந்தன், சுகி, மனோகரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.01.2019) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

076 577 0690 (சுகந்தன்)
+336 5010 4598 (சுவினா - தம்பி)

(cs 20237) (13.17)

## ஒட்டகப்...

மையாளர்கள் மாத்திரமே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். இதன்போது காணி விடுவிப்புக்கான அறிவித்தலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்தார். யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தையிட்டியில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளும், பலாலி தெற்கில் ஒரு கிராம அலுவலர் பிரிவும் காணி விடுப்பில் உள்ளடங்கியிருந்தது.

கடந்த திங்கட்கிழமையே காணி விடுவிக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் விடுவிக்கப்படவில்லை. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தையிட்டி கிராம அலுவர் பிரிவில் மாத்திரம் காணிகள் விடுவிக்கப்பட்டன. ஒட்டகப்புலத்தில் காணிகள் விடுவிக்கப்படவில்லை. இந்தக் காணிகளே, இராணுவத்தினரால் வலி. வடக்கு பிரதேச செயலரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. காணி உரிமையாளர்கள் தவிர வேறு எவரையும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. (ம-5,9,26)

## இலங்கை...

பிரிட்டன் அயலுறவுத் துறையின் தெற்காசிய திணைக்களத்தின் தலைவரும் இந்தியாவின் ஒருங்கிணைப்பாளருமான பர்கஸ் ஓல்ட், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளும்ன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை கொழும்பிலுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார் என்று கூட்டமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நிலவரம் தொடர்பில் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், 2015 ஜனவரி மற்றும் ஆகஸ்ட் தேர்தல்களில் மக்கள் கொடுத்த ஆணையை சுட்டிக்காட்டினார். அதேவேளை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அண்மையில் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன், சட்ட விரோதமானதும் அரசியல் சாசனத்துக்கு முரணானதுமான செயற்பாடுகளை நாம் எப்போதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, நாம் அவ்வாறு செயற்படுகின்றபோது எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது எனவும், கொள்கையின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுக்கின்ற போது, ஏனைய விடயங்களை குறித்துப் பெரிதாகக் கவனம் செலுத்த முடியாது எனவும் கூறினார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் விளக்கமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், 2016ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மிக நீண்ட நடைமுறைகளும் முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதனை எடுத்துக் கூறினார்.

அதேவேளை, இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் புதிய அரசமைப்பின் உள்ளடக்கம் மற்றும் நோக்கங்களைக் குறித்து தமது மக்களுக்கும் கட்சியினருக்கும் தெளிவுபடுத்துவதில் அசமந்தப்போக்கைக் கொண்டுள்ளன எனவும் குற்றம்சாட்டினார்.

அதிகாரப் பரவலாக்கல் நேர்மையானது எனவும், மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரங்களை உபயோகிக்க கூடிய வகையில் இருத்தல் அவசியம் எனவும் வலியுறுத்திய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இதனை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் உண்மையான பிரச்சினை அரசியல்வாதிகளிடம் இது தொடர்பில் காணப்படும் அசமந்தபோக்கே ஆகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மக்களின் கைகளில் அதிகாரங்கள் செல்லுகின்றவிடத்து ஊழல் மற்றும் வளங்கள் வீண் விரயம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்களை அது குறைத்து விடும். இதன் காரணமாக ஒருசில அரசியல்வாதிகள் மக்களிடம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு அஞ்சுகிறார்கள் எனத் தெரிவித்த இரா. சம்பந்தன், நீண்டகால தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத பட்சத்தில் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை என்பதையும் எடுத்துரைத்தார்.

மேலும், இலங்கையின் வரலாற்றில் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளினதும் இயன்றளவு ஒத்துழைப்புடன் ஒரு புதிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கான முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்பதை சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன், நாங்கள் ஒருமித்த - பிரிபடாத - பிரிக்க முடியாத நாட்டுக்குள்ளே ஒரு தீர்வை எதிர்பார்க்கின்றோம் என்றும், நியாயமான ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு கொண்டுவரப்படுகின்றபோது நாங்கள் அதனை எமது மக்கள் முன் எடுத்துச்செல்லுவோம் என்றும், எமது மக்கள் அத்தகைய தீர்வுடன் கூடிய புதிய அரசமைப்பை அங்கீகரிப்பதற்கு தமது ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்றும் கூறினார்.

பன்னாட்டுச் சமூகத்தின் வகிபாகம் குறித்து கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ள நிலையில் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வது தவிர்க்க முடியாததொன்று என்றும், பன்னாட்டுச் சமூகம் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், இது தொடர்பில் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு பன்னாட்டுச் சமூகம் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் குறித்த காலவரையறைக்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்துக் கருமங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சுமார் ஒரு மணித்தியாலங்கள் நீடித்த இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் மற்றும் பிரிட்டன் தூதரகத்தின் அரசியல் பிரிவு பிரதானி போல் கிறீன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-22)

## மன்னார்...

கப்பட்டன.

மன்னார் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் கார்பன் பரிசோதனைக்கு உற்படுத்துவதற்காக அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்குக் கொண்டு செல்லப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக எலும்புக்கூடுகள் மன்னார் நீதிமன்றத்தில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மிகவும் பாதுகாப்பான முறையில் அடைக்கப்பட்டு பி.23218 என இலக்கமிடப்பட்ட நிலையில் குறித்த பொதி பொலிஸ் வாகனமொன்றில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அகழ்வுப்பணிக்கு பொறுப்பான சட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்சவிடம் பெட்டி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரின் பாதுகாப்பிலேயே குறித்த பெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக முன்னிலையாகிவரும் சட்டத்தரணிகள் நகர்வு பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து, புளோரிடாவில் காபன் பரிசோதனைக்கு உற்படுத்தும்போது அவற்றை அவதானிப்பதற்கு காணமல் ஆக்கப்பட்டோர் சார்பாக ஒருவர் செல்வதற்கு அனுமதி கோரியிருந்தார்கள். இதற்கமைய காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் உள்ளிட்ட நால்வர் இந்தப் பெட்டியுடன் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-56)

## ஓமந்தைக்குட்பட்ட...

ஈடுபட்டு வருகின்றனர்.

ஓமந்தைக்கு உட்பட்ட குஞ்சுக்குளம், நவ்வி போன்ற பகுதிகளிலேயே அவ்வாறு தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் அந்தப் பகுதி மக்களிடையே அச்சம் நிலவி வருவதுடன் படையினரின் செயற்பாடு பொதுமக்களிடத்தில் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக அந்தப் பகுதிக்குச் சென்ற வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் கோ.அஞ்சலாவை அந்தப் பகுதியில் கடமையில் இருந்த ராணுவத்தினர் வழிமறித்து சோதனை மேற்கொண்டனர். அவர், தான் பிரதசேசபை உறுப்பினர் என தெரிவித்த நிலையில் அதற்கான அடையாள அட்டையைக் காட்டுமாறு இராணுவத்தால் கோரப்பட்டுள்ளது. உரிய அடையாள அட்டை காண்பிக்கப்பட்ட பின்னரே சோதனை நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

இது தொடர்பாக பிரதேசசபை உறுப்பினர் கோ.அஞ்சலா தெரிவித்ததாவது:

அந்தப் பகுதியில் ராணுவத்தினர் சோதனைகளை மேற்கொள்கின்றனர் பொதுமக்களால் எனக்குத் தெரியபடுத்தபட்டது. இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக நான் அங்கு சென்றிருந்தேன். ராணுவத்தினர் என்னை வழிமறித்து சோதனை மேற்கொண்டனர். எனது பதவி நிலையை நான் தெரிவித்தபோதும் அவர்கள் அடையாள அட்டையைக் காட்டுமாறு கோரினர். அடையாள அட்டையை காட்டிய பின்னர் சோதனைகள் நிறுத்தபட்டன. பிரதேச சபை உறுப்பினர் என்ற ரீதியில் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. அத்துடன் தற்போதைய அமைதியான சூழ்நிலையில் இவ்வாறான பாதுகாப்புக் கெடுபிடிகள் பொதுமக்களுக்கு இடஞ்சல்களையும், அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன - என்றார். (ம-110)

## புதிய...

மீளவும் பேரவலங்களைச் சந்திக்க வேண்டி வரும். இவை வேண்டுமெனில் புதிய அரசமைப்பை அரசு நிறைவேற்றட்டும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

கொழும்பு ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கியுள்ள பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"நாம் தமிழர்களுக்கு எதிரிகள் அல்லர். தமிழர்களும் எமக்கு எதிரிகள் அல்லர். ஆனால், வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றத்துக்கு வந்த சம்பந்தனும் சுமந்திரனும் தமிழர்களுக்குத் துரோகம் செய்துள்ளார்கள். இருவரும் போலி வாக்குறுதிகளை வழங்கித் தமிழர்களை ஏமாற்றி வருகின்றார்கள், ரணில் அரசைக் காப்பாற்றி வருகின்றார்கள்.

2009ஆம் ஆண்டு இராணுவத்தினர் தமது உயிர்களை அர்ப்பணித்து வன்னி மக்களைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுத்தார்கள். புலிகளின் பயங்கரவாதப் போருக்கு எமது படை வீரர்கள் முடிவு கட்டினார்கள்.

வன்னி மக்களை மீட்டெடுத்த தெய்வமாக மகிந்த ராஜபக்ச விளங்குகின்றார். இதனைப் பொறுக்க முடியாத புலிகளின் புலம்பெயர் அமைப்புகள் ராஜபக்ச குடும்பத்தினருக்கும் இராணுவத்தினருக்கும் போர்க்குற்றவாளிகள் என்ற மோசமான பட்டத்தை வழங்கினார்கள். இந்தப் பட்டம் ஐ.நாவிலும் எதிரொலித்தது. நாம் அஞ்சவில்லை. தலைநிமிர்ந்து நிற்கின்றோம். புலிகளின் புலம்பெயர் அமைப்புகளின் வலையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு சிக்கியுள்ளது. புலம்பெயர் அமைப்புகளினதும் சம்பந்தன் சுமந்திரன் ஆகியோரினதும் நிகழ்ச்சி நிரலின்படி புதிய அரசமைப்பை நிறைவேற்ற ரணில் அரசு முற்படுகின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம்.

நாட்டைப் பிளவுபடுத்தி இங்கு மீண்டும் புலிகளுக்கு புத்துயிர் கொடுக்க முற்படும் ரணில் அரசுக்கு விரைவில் நாம் முடிவு கட்டுவோம் ராஜபக்ச படையணியின் ஆட்சி மீண்டும் மலரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-22)

## இரணைமடுக்...

யாழ்ப்பாணம், ஜன. 24

இரணைமடுக் குளத்து நீரை அதனை நம்பி வாழும் விவசாய சமூகத்தினர் முதன்மையாகப் பயன் படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்குவேன். அதைப் பயன்படுத்துவது தொடர்பில் எதிர்காலத் திட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார் என்று விவசாயப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இரணைமடு விவசாயிகளுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார் என்று விவசாய சமூகத்தினர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளமும் அதன் தண்ணீரும் உங்களுக்கு உரியன. அதன் முழுப் பயனையும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர்த் தேவை உள்ளது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள நீரின் அளவு மற்றும் நீரின் தேவை தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதில் விவசாயிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டங்களுக்கும் தண்ணீர் தேவை இருப்பதால் அதனை எவ்வாறு முகாமை செய்வது பகிர்ந்தளிப்பது என்பது தொடர்பில் ஆராயப்படும். இப்போது ஊடகங்கங்களில் வரும் செய்தியைப் பார்த்து என்னையும், எனது கருத்துக்களையும் தவறாக நினைக்க வேண்டாம். எனது திட்டங்களால் விவசாயிகள் பாதிப்படையாமல் பார்த்துக்கொள்வேன் என்று ஆளுநர் தெரிவித்தார் என்று விவசாயிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்ததாவது:

தண்ணீர் பாயும் வேகம், என்ன தேவை என்பது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவுக்கு மக்கள் தத்தமது பிரச்சினைகளைத் தெரிவிக்கலாம். அமைக்கப்பட்டுள்ள குழு ஒவ்வொரு மாவட்டமாகச் செயற்படும். எங்களிடம் தண்ணீர் போதுமான அளவு உள்ளது. அதைப் பாதுகாப்பதிலும், பராமரிப்பதிலும், பயன்படுத்துவதிலும்தான் மிகப்பெரும் பிரச்சினை உள்ளது. இல்லாத பகுதிகளுக்கு இருக்கின்ற பகுதிகள் தண்ணீரை வழங்க வேண்டும் என்பதுதான் நாடளாவிய நடைமுறை - என்றார்.

இது தொடர்பில் கமக்கார அமைப்பினர் தெரிவித்ததாவது:

பத்திரிகையில் கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர் வெளியிட்ட அறிக்கை முற்று முழுதாக தவறான கருத்து. 60 வீதமான தண்ணீரை விவசாயிகள் விரயம் செய்கின்றனர் என்ற கருப்பொருளில் அந்த அறிக்கை உள்ளது. குளத்து நீரை நாங்கள் விரயம் செய்யவில்லை என்பதை ஆளுநருக்குத் தெரியப்படுத்துவதற்கு நாம் வந்துள்ளோம். குளத்தின் நீர் விரயம் ஆக்குவதற்கு நாங்கள் பாத்திரவளிகள் அல்லர். எமது நீரை நாம் விவசாயத்துக்கே பயன்படுத்துகின்றோம். எமது பிரதேசத்தில் உள்ள மக்கள் இரணைமடுக் குளத்தின் தண்ணீரை முன்னுரிமையின் அடிப்படையில் நாம் பயன்படுத்த வேண்டும் - என்றனர். (ம-7,105)

## நாயாறு...

தொல்லியத் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் அந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு கடந்த 14ஆம் திகதியன்று தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளுக்காகச் சென்றவேளை அந்தப் பகுதியில் குடியிருக்கும் பௌத்த துறவிக்கும் மக்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது. இந்த முறுகல் நிலை தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். எதிர்வரும் 29ஆம் திகதி வழக்குக்கு வருமாறு முரண்பாட்டில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. எனினும் அவசர நிலையொன்றினை உணர்ந்து, ஆலய நிர்வாகத்தினர் மற்றும் தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான வி.நவநீதன் ஆகியோரால் நகர்த்தல் பத்திரம் ஒன்றின்மூலம் அது தொடர்பன வழக்கு நேற்றைய நாளுக்கு முற்போடப்பட்டு நடைபெற்றது. நேற்றைய வழக்கு விசாரணைகளில், குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்பது, தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிராம மக்களின் சார்பில் முன்னிலையானவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. இதையடுத்து பௌத்தத் துறவியை இன்று மன்றில் முன்னிலையாகவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பரபரப்பான நிலையில் குறித்த புத்தர்சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

தகவலறிந்து குறித்த இடத்திற்கு விரைந்த முன்னாள் வடமாகாசபை உறுப்பினர் து.ரவிகரன், நிலமைகளை நேரில் கண்காணிக்கும்போது, அங்கிருந்த பௌத்த துறவிகளும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்தவர்கள் சிலரும் இணைந்து அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-ரி3)



## பிரபவன் சிறப்பாட்டம்
# நல்லூர் புறோன்கோஸ் அணி 2 இலக்குகளால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 24
பொயின்பிற்றோ சுப்பர் கிங்ஸ் அணியை 2 இலக்குகளால் வீழ்த்தி வெற்றி பெற்றது நல்லூர் புறோன் கோஸ் அணி.
யாழ்ப்பாண மாவட்டத் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் ஜப்னா சுப்பர் லீக் ரி 20 துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நல்லூர் புறோன் கோஸ் அணியை எதிர்த்து பொயின் பிற்றோ சுப்பர் கிங்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நல்லூர் புறோன்கோஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. பொயின்பிற்றோ சுப்பர் கிங்ஸ் அணி 19.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டது. நிரோ ஜன் 49 ஓட்டங்களையும், சஜீகன் 33 ஓட்டங்களையும், சாகித்தியன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்த னர். பந்து வீச்சில் நல்லூர் புறோன் கோஸ் அணி சார்பில் பிரபவன், சுஜன் இருவரும் தலா 3 இலக்குக ளையு வீழ்த்தினார்கள்.
171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெ டுத்தாடிய நல்லூர் புறோன்கோஸ் அணி 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந் தது. நோபேட் 42 ஓட்டங்களையும், பிரபவன் ஆட்டமிழக்காமல் 36 ஓட் டங்களையும், பிரியலக்ஷன் 22 ஓட் டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் பொயின்பிற்றோ சுப்பர் கிங்ஸ் அணி சார்பில் சேந்திரன் 3 இலக்குகளையும், லதுசன் 2 இலக்கு களையும் கைப்பற்றினார்கள். ஆட்ட நாயகனாக பந்து வீச்சு மற்றும் துடுப் பாட்டத்தில் கலக்கிய நல்லூர் புறோன்கோஸ் அணி வீரர் பிரபவன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ.23)

## கடற்கரை கபடியில்
# புலோலி கிழக்கு அதிசயம் வி.க. கிண்ணம் வென்றது

கிளிநொச்சி, ஜன. 24
பளை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவுக்கான பெண்களுக்கான கடற்கரை கபடித் தொடரில் புலோலி கிழக்கு



அதிசயம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லையடி விநாயகர் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல் லையடி விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. 26:15 என்ற புள்ளி அடிப்படையில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

# கரப்பந்தாட்டத் தொடரிலும் அதிசயம் கிண்ணம் வென்றது

கிளிநொச்சி, ஜன. 24
பளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த சனிக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லையடி விநாய கர் விளையாட்டுக்கழக அணி மோதியது.
மூன்று செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுகழக அணி முதல் இரு செற்க ளையும் 25:14, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு கிண்ணத்தை வென்றது. (ஒ.23)



# பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், ஜன. 24
இலங்கை கூடைப்பந்தாட்டச் நடுவர் சங்கத்தால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட நடுவர்க ளுக்கான தரம் 3 பரீட்சை யில் யாழ்ப்பாண மாவட் டத்தைச் சேர்ந்த சி. ஜெகதீஸ்வரன், த.சிவ தாஸ். அ.சுஜீவன் ஆகியோர் சித்தியடைந்துள் ளனர். (ஒ.23)



அ.சுஜீவன்



சி.ஜெகதீஸ்வரன்



த.சிவதாஸ்

# ஜப்னா பான்ரஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 24
ஜப்னா பான்ரஸ் அணி, அரியாலை வொரியஸ் அணியை 4 இலக்குகளால் வீழ்த்தி வெற்றி பெற்றது.
யாழ்ப்பாண மாவட்டத் துடுப்பாட்டச் சங்கம் நடத் தும் ஜப்னா சுப்பர் லீக் ரி- 20 துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஜப்னா பான்ரஸ் அணியை எதிர்த்து அரியாலை வொரி யஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா பான் ரஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
அரியாலை வொரியஸ் அணி 20 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற் றுக் கொண்டது. துவாரகசீலன் 63 ஓட்டங்க ளையும், ஜெரிக் 21 ஓட்டங் களையும், கோபிராம் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஜப்னா பான்ரஸ் அணி சார் பில் டார்வின் 3 இலக்குக ளையும், சுரேந்திரன் 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.
ஜப்னா பான்ரஸ் அணி 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கியது. 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக் குகளை இழந்து 167 ஓட் டங்களைப் பெற்று 4 இலக் குகளால் வெற்றி பெற்றது. மோகன்ராஜ் 37 ஓட்டங்க ளையும், அருண்குமார் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அரியாலை வொரியஸ் அணி சார்பில் மது 4 இலக் குகளையும், ஜெரீக் ஒரு இலக்கையும் கைப்பற்றி னார்கள். ஜப்னா பான்ரஸ் அணி வீரர் மோகன்ராஜ் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ.23)




# கபடியிலும் அசத்தியது புலோலி கிழக்கு அதிசயம்

கிளிநொச்சி, ஜன. 24
பளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளை யாட்டு விழாவில் பெண்களுக்கான கபடித் தொடரில்



புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லையடி விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. 26:11 என்ற புள்ளி அடிப்படையில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி வெற்றி கொண்டது. (ஒ.23)

# இந்திய அணி இலகு வெற்றி





இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் நேற்று நேப்பியரில் இடம்பெற்றது. இதில் இந்திய அணி 8 இலக்குகளால் இலகு வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக குப்ரில், முன்றோ களமிறங்கினர். அணி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் குப்தில் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் வில்லியம்சன். அணி 100 ஓட்டங்களுக்குள் 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. அணி 38 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக வில்லியம்சன் 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்து வீச்சில் குல்திப் யாதவ் 4 இலக்குகளையும், மொகமட் சமி 3 இலக்குகளையும், சாஹல் 2 இலக்குகளையும், ஹேட்டர் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றியிருந்தனர்.

158 ஓட்டங்கள் என்பது இந்திய அணிக்கு மிக இலகுவான இலக்கே.

இதுவரை பன்னாட்டுக் கிரிக்கெட்டில் மழை காரணமாகவே 'டக்வோர்த் லூயிஸ்' முறை கையாளப்பட்டிருந்தது. ஆனால், முதன்முறையாக வெயில் காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டு, 'டக்வோர்த்' முறைப்படி, ஓட்டங்கள் குறைக்கப்பட்டு இந்தியாவுக்கு இலக்கு 156 ஓட்டங்களாகக் குறைக்கப்பட்டது. வெயில் காரணமாக ஆட்டம் அரைமணிநேரம் நிறுத்தப்பட்டதால், 49 பந்துப்பரிமாற்றங்களில் 156 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோகித், தவான் களமிறங்கினர். அணி 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 11 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார் ரோகித். இணைந்தார் அணித் தலைவர் கோக்லி. தவானுடன் இணைந்து சிறப்பான முறையில் அடுத்த இலக்கு இழக்கப்படாது வெற்றியை எட்டுவார்கள் என எதிர் இந்திய ரசிகர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் இரண்டாவது இலக்காக கோக்லி 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். ராயுடுவும் தவானும் இணைந்து 34.5 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளால் அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் வ்றீகுசன், பிறேசிவெல் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கெதிரான தொடர்களில் வெற்றியைப் பெற்ற களிப்புடன் நியூசிலாந்து சென்றிருந்தது. அங்கு முதலாவது ஒருநாள் தொடரை தன்வசப்படுத்தியுள்ளது.



# பாகிஸ்தான் அணிக்கு தென்னாபிரிக்கா பதிலடி

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா அணி. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் டேர்பன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா பாகிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக இமாம் உல், வ்கர் சமன் ஆகியோர் களமிறங்கினர். அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இமாம் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் பாபர் அஷாம். வந்த வேகத்திலேயே 2 நான்கு ஓட்டங்கள் எடுத்து 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணி ஒரு சீரான இடைவெளிகளில் இலக்குகளை இழந்து பரிதவித்தது. நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் பாகிஸ்தான் அணி 203 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக ஹசன் அலி மட்டுமே அரைச் சதத்தைக் கடந்து 59 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் அகமட் 41 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்கவில்லை.

பந்து வீச்சில் பெலுக்வோ 4 இலக்குகளையும், சம்சி 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், ஒலிவர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

204 ஓட்டங்கள் என்பது மிக இலகுவான இலக்கே. எனினும் தென்னாபிரிக்காவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஹென்றிக்ஸ், அம்லா இருவரும் அணிக்கு அடித்தளத்தை இடாது 5,8 என்ற குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். வந்தார் வான் டீ டஸ்ஸன். தென்னாபிரிக்க அணியின் இலக்குகள் ஓர் சீரான இடைவெளியில் இழக்கப்பட்டாலும் மறு முனையில் வான் டஸ்ஸன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். அதிகபட்சமாக இவர் ஆட்டமிழக்காது 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 80 ஓட்டங்களைப் பெற்றார். பெலுக்வோ அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 2 ஆறு ஓட்டங்கள் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது அணியின் வெற்றிக்கு வித்திட்டார். தென்னாபிரிக்கா அணி 42 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளால் பாகிஸ்தான் அணியை இலகுவாக வீழ்த்தி வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் ஷா அப்ரிடி 3 இலக்குகளையும், சடாப் கான் 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணி வீரர் அன்டிலி பெலுக்வோ தெரிவு செய்யப்பட்டார். இவர் 4 இலக்குகளைக் கைப்பற்றியதோடு அதிரடியாகத் துடுபெடுத்தாடி அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இதனடிப்படையில் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை செஞ்சூரியனில் இடம்பெறவுள்ளது.

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 24

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

சிவகுரு பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி மகாத்மாஜீ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

சிவகுரு பொற்பதி விளையாட்டுக் கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான அரையிறுதியாட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்தனர். சமநிலை தகர்ப்பு உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் சிவகுரு பொற்பதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

திருநெல்வேலி மகாத்மாஜீ விளையாட்டுக்கழக அணிக்கும் திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான அரையிறுதியாட்டத்தில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோலைப் பதிவு செய்தமையால் ஆட்டம் சமநிலை தகர்ப்பு உதை மூலம் வெற்றி தீர்மானிக்கபட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் திருநெல்வேலி மகாத்மாஜீ விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

(ஒ.23)





# ஆர்ஜென்டினா கால்பந்து வீரர் சென்ற விமானம் மாயமாகியது


ஆர்ஜென்டினா நாட்டின் கால் பந்து வீரர் எமிலியானோ சலா தனியார் விமானத்தில் மாயமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றது. சானல் தீவுகளுக்கு அருகே திடீரென அவரது விமானம் மாயமானது. விமானத்தில் பயணம் செய்த எமிலியானோ மற்றும் பைலட் குறித்து எந்த தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் எமிலியானோ சலா. பிரான்சின் நான்டஸ் அணிக்காக விளையாடி வந்த இவரை, வேல்ஸ் நாட்டின் கார்டிப் கிளப் அணி சமீபத்தில் வாங்கியது. கடந்த சனிக்கிழமை கார்டிப் நகரில் இதற்கான ஒப்பந்தத்தில் எமிலியானோ கையெழுத்திட்டிருந்தார்.

இது குறித்து கார்டிப் அணியின் தலைமை நிர்வாக அதிகாரி கென் சூ கூறுகையில், 'பிறீமியர் லீக் அணியில் உள்ள அனைவரும் நிலைமையை உணர்ந்து மிகுந்த கவலையுடன் உள்ளனர். எனினும் விரைவில் நல்ல தகவல் கிடைக்கும் என நம்பிக்கையில் பிரார்த்தனை செய்கின்றனர்' என்று கூறினார்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்; காணாமல் போன சலா மற்றும் பைலட்டை மீட்க தேடுதல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது எனவும், இதுவரை எந்த ஒரு தடயமும் இல்லை. விமானம் தண்ணீரில் இறங்கியிருந்தால் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு எனவும் அவர்கள் தெரிவித்தனர்.



# காலிறுதியில் செரீனா வெளியே

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் இடம் பெற்று வருகின்றது. நேற்று இடம் பெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் தோல்வியடைந்து வெளியேறினார். செரீனா வில்லியம்ஸ் உலகின் முதன் நிலை வீராங்கனைகளுள் ஒருவரான கரோலினா பிலிஸ்கோவாவை எதிர் கொண்டார்.

இதில் பிலிஸ்கோவா 6:4, 4:6, 7:5 என்ற செட் கணக்கில் செரீனாவை வீழ்த்தி அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறினார். இதில் முதல் செற்றை பிலிஸ்கோவா 6:4 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றை செரீனா 6:4 என தன் வசப்படுத்தினார். வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் பரபரப்பு நிலவியது. இறுதியில் பிலிஸ்கோவா 7:5 எனக் கைப்பற்றி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

பிலிஸ்கோவா அரையிறுதியில் யப்பான் நாட்டு வீராங்கனை நோமி ஓசாகாவை இன்று எதிர் கொள்கின்றார். இவர் 2018 ஆம் ஆண்டு இடம் பெற்ற அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற யப்பானிய வீராங்கனையாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வோர்னருக்கு அறுவைச் சிகிச்சை

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக திகழ்ந்த டேவிட் வோர்னர், பன்னாட்டு கிரிக்கெட் சபையால் பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டார். இதனால் ரி-20 லீக் தொடர்களில் விளையாடி வந்தார்.

பங்களாதேஷில் நடைபெற்று வரும் பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் வோர்னர் சியால்ஹெட் சிக்சர்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். அப்போது பிடியெடுப்பு ஒன்றை எடுப்பதற்கு முயற்சிக்கும் போது கீழே வீழ்ந்தமையால் அவரது முழங்கையில் காயம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். சிறிய காயம் என்பதால் 21நாள்களுக்குள் முழுமையாக குணமடைந்து விடுவார் என்று கூறப்படுகிறது. உலகக் கிண்ணம் மற்றும் ஆஷஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் டேவிட் வோர்னர் இடம்பெற வாய்ப்புள்ளது. அதற்கு முன்னர் ஐ.பி.எல். தொடரில் விளையாட உள்ளார்.


Prishankar
மணமகள் அலங்காரம்
ஒரு நாள் வகுப்பு
(Bridal Wedding Make-up Master Class)
Prisanthi Make-up Artist



From:- Germany
26th January 2019
(9.00am-6.00pm)
at Gajan Wedding Hall, Kokuvil
Call us for Registration 076 271 3939
www.prishankar.com
Sponsored by: Shankar-Photography from Germany

அதிபர் சேவை தரம் 3 விசேட கருத்தரங்கு
விடய ஆய்வு
P.ஆறுமுகம் SLEAS
சனி(2/2)
காலை 9.00 4.00 மணிவரை
கட்டணம் 300/=
இடவசதி மற்றும் அச்சடிக்கப்பட்ட குறிப்புக்களுக்காக முன்கூட்டியே பதிவை உறுதிப்படுத்தவும்.
076 688 3394, 021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை பிரசாத்நாயகம்

*(உரிமையாளர் - SLS செல்வா சாரதி பயிற்சிப் பாடசாலை)*



பிறப்பு 26.02.1943 இறப்பு 22.01.2019

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் இல. 388 ஆனந்தபுரம் கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை பிரசாத்நாயகம் (உரிமையாளர் - SLS செல்வா சாரதி பயிற்சிப் பாடசாலை) கடந்த (22.01.2019) செவ்வாய்க் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - திரேசம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும் லூர்த் தம்மாவின் அன்புக் கணவரும் பிறைற்ரன் (வைத்தியர் ஆஸ்திரேலியா), பிறைற்லி (ஆசிரியை - கிளி/ மத்திய மகா வித்தியாலயம்), மில்ற்ரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்), ஹெலன் (World Vision உத்தியோகத்தர்), மார்ஷல் (உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் - பொது வைத்தியசாலை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றிமதி (வைத்தியர் ஆஸ்திரேலியா), அலைக் பரிங்டன் (பதிவாளர் - German Tech அறிவியல்நகர்), ஜனனி (கரைச்சி பிரதேச சபை), வெஸ்லி, றஜிஸ்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜோயல், ஜெனி (ஆஸ்திரேலியா), ஜோயலின், சாமலின், டிசான், ஜெய்ரஷ், ஜெனியஷ், றொசெல்லா, றேச்சல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2019) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் 10.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 9820/15/17)

# பயிற்சி ஆட்டத்தில் சதம் அடித்த வீரர் இலங்கைக்கெதிரான ஆஸி. அணியில்

இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் இடது கை துடுப்பாட்ட வீரர் கர்ட்டிஸ் பேற்றர்சன் இரண்டு இன்னிங்சிலும் சதம் கடந்து ஆட்டமிழக்காது இருந்தார்.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியில் இவர் இணைக் கப்பட்டுள்ளார். பேற்றர்சன் அணியில் இணைக்கப்பட்டது குறித்து தேர்வாளர் கூறுகையில் "ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடிக்க வேண்டுமென்றால், நாட்டில் நடக்கும் முக்கியமான தொடர்களில் சதம் அடிக்க வேண்டும்.



கர்ட்டிஸ் நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். கடந்த வாரம் நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்துள்ளார். இதனால் அவர் அணிக்கு தகுதியானவர் என்று நாங்கள் நம்புகிறோம்"- என்றார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.